யூலை - 2015
ජූලි - 2015

ISSN 1800-1246

# அகவிழி

අහවිලි

மனித மேம்பாட்டின் உயிர்ப்பு மிகு கல்விக்காய்...

விழி 12 பார்வை 119
විලි 12 කාණ්ඩය 119



- கலைத்திட்டம்: ஓர் அறிமுகம்
- தர மதிப்பீட்டுக் கோல் (Rating Scale)
- கல்வியும் சுற்றுப்புறச்சூழல் பிரச்சினையும்
- செயலுபாயத் தலைமைத்துவமும் செயலுபாயத் தலைவர்களும்
- கல்வியும் சுற்றுப்புறச்சூழல் பிரச்சினையும்
- பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தியும் ஆசிரியர் தரக்கணிப்பீடும் School Based Teacher Development and Teacher Appraisal
- நித்திமும் கை தொழுவேன்
- ஆயிக்ஷா
- கல்வியில் தர விருத்தி பாடசாலை கற்றல் சூழலை மேம்படுத்தல்
- லோகநாயகி டீச்சரும், லலிதா ராகமும்
- குருவை மிஞ்சிய தெய்வம் இல்லை

- கலாநிதி எப்.எம்.நவாஸ்தீன்
- S. நடராஜன்
- ரிக்ஷிவெல்க்ஷி
- க.இ. கமலநாதன்
- கலாநிதி இரா நடராஜன்
- சகாதேவன்

www.viluthu.org

விலை: 100/=




அகவிழிகளை பெற விரும்பும்
ஆசிரியர்கள் உடனடியாக தொடர்பு கொள்ளவும்.

அகவிழி
ஆசிரியத்துவ நோக்கு...

# உள்ளே.........

ISSN 1800-1246


| | | |
|---|---|---|
| 01. | கலைத்திட்டம்: ஓர் அறிமுகம் | 04 |
| 02. | தர மதிப்பீட்டுக் கோல் (Rating Scale) | 11 |
| 03. | கல்வியும் சுற்றுப்புறச் சூழல் பிரச்சினையும் | 13 |
| 04. | பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தியும் ஆசிரியர் தரக்கணிப்பீடும்<br>School Based Teacher Development and Teacher Appraisal | 17 |
| 05. | செயலுபாயத் தலைமைத்துவமும் செயலுபாயத் தலைவர்களும் | 20 |
| 06. | நித்திமும் கை தொழுவேன் | 28 |
| 07. | பாடசாலை மட்ட முகாமைத்துவமும் வகிபாக மாற்றங்களும் | 33 |
| 08. | ஆயிக்ஷா | 37 |
| 09. | கல்வியில் தர விருத்தி பாடசாலை கற்றல் சூழலை மேம்படுத்தல் | 39 |
| 10. | லோகநாயகி டீச்சரும், லலிதா ராகமும் | 42 |
| 11. | குருவை மிஞ்சிய தெய்வம் இல்லை | 44 |


AHAVILI
3, Torrington Avenue
Colombo 07
Tel : 011 250 6272
E-mail : ahavili.viluthu@gmail.com

அகவிழில் இடம்பெறும் கட்டுரைகளுக்கு ஆசிரியர்களே பொறுப்பு, கட்டுரைகளில் இடம்பெறும் கருத்துக்கள் "அகவிழி" யின் கருத்துக்கள் அல்ல.

அகவிழி ஆசிரியத்துவ நோக்கு...
අහවිලි

மாதஇதழ் මාසික සඟරාව ISSN 1800-1246

பிரதம ஆசிரியர்
ச. இந்திரகுமார்

நிர்வாக ஆசிரியர்
சாந்தி சச்சிதானந்தம்
நிறைவேற்றுப் பணிப்பாளர் (விழுது)

ஆசிரியர் குழு
க. சண்முகலிங்கம்
பத்மா சோமகாந்தன்

ஆலோசகர் குழு
பேராசிரியர் சோ. சந்திரசேகரம்
முன்னாள் கல்விப் பீடாதிபதி
கொழும்புப் பல்கலைக்கழகம்

பேராசிரியர் தை. தனராஜ்
ஓய்வுநிலை, இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம்

கலாநிதி சசிகலா குகமூர்த்தி
சிரேஷ்ட விரிவுரையாளர்
இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம்

பா. தனபாலன்
உபபீடாதிபதி, நிதி நிர்வாகம்
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

லெனின் மதிவானம்
பிரதிக்கல்வி வெளியீட்டு ஆணையாளர்
கல்வி அமைச்சு

திருமதி அருந்ததி ராஜவிஜயன்
ஆசிரிய ஆலோசகர்
கொழும்பு கல்வி வலயம்

பேராசிரியர் வ. மகேஸ்வரன்
தலைவர், தமிழ்த்துறை
பேராதனைப் பல்கலைக்கழகம்

க. இரகுபரன்
முதுநிலை விரிவுரையாளர்
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

பேராசிரியர் துரை மனோகரன்
தமிழ்த்துறை
ஓய்வுநிலை, பேராதனைப் பல்கலைக்கழகம்

கே. சாம்பசிவம்
தேசிய ஆலாசகர், கல்வி முகாமைத்துவம்

## ஆசிரியரிடமிருந்து......

ஒரு பாடசாலை ஆசிரியரின் பணி எந்த இடத்தில் தொடங்குகிறது? பாடசாலைக் கல்வியில் அடியெடுத்து வைக்கும் மாணவ மாணவிகளைப் தவணைப் பரீட்சைகளுக்கும் (Midterm Exams) இறுதிப்பரீட்சைகளுக்கும் (க.பொ.த. சா.த, உ.த) ஆயத்தப்படுத்துவதிலா? இவ்வாறு தொடங்கும் ஆசிரியப் பணி அவர்களுக்கு உயர் பெறுபேறுகளைப் பெற்றுத் தந்து பாடசாலைக் கல்வியை முடிவுறச்செய்வதோடு நிறைவுபெற்று விடுவதிலா?

நடைமுறையில் ஆசிரியப்பணி இப்படித் தான் வரையறை செய்யப்பட்டுள்ளது. இன்னும் வெளிப்படையாகக் கூறினால் தகுந்த மாதிரி சிலநூறு மாணவர்களை உற்பத்தி சந்தைகளுக்கான அடிமை வேலையாட்களை தயார்செய்து விடுகிறோம் என்பதுதான் யதார்த்தம். அதுவும் நமது தமிழ்க்கல்விச் சூழலில் வத்தியர்,பொறியியலாளர்,முகாமையாளர் என்ற கனவுகளோடு மட்டும் மட்டுப்படுத்தி கொள்கிறோம்.

எந்தவிதமான சமூக மதிப்பீடுகளும், உள்ளீடும் அற்ற ஒரு கல்விமுறையை நாம் மாணவர்களின் மூளைக்குள் திணிக்கிறோம். இந்தக் கல்வி முறையை பாவ்லோ பிரையரே போன்ற நவீன கல்வியாளர்கள் வங்கிமுறைக்கல்வி என்று அழைக்கிறார்கள். மாணவர்களின் தலையைத் திறந்து வங்கிக் கணக்கில் போடுவது போல பாடப் பொருளை ஆசிரியர் இட்டு நிரப்பும் இந்தக் கல்விமுறையில் உரையாடலுக்கான சாத்தியங்கள் இல்லை. வரிசை வரிசையாய் உட்கார்ந் திருக்கும் மாணவர்கள் அடிமைகளாக உணர்கிறார்கள். இந்த வகைக் கல்வியில் மனித நேயமில்லை, பரஸ்பரப் பகிர்வு இல்லை. இந்த முறையானது பரீட்சைகளை மையப்படுத்தி சித்தியடைதல் என்ற ஒற்றைநோக்கில் நடக்கும் தொடர் மதிப்பீடாக உள்ளது.

மாணவர்களின் மீது ஈவு இரக்கமற்ற ஆக்கிரமிப்பை ஆசிரியர் நிகழ்த்த வேண்டியதாகிறது. பரீட்சைப் பெறுபேறுகளை மையப்படுத்தி இயங்கும்போது மாணவனின் முதல் எதிரியாக ஆசிரியரே நிற்கிறார். இந்த வங்கிமுறைக்கல்வி கற்பவரையும் கற்பிப்பவரையும் ஒருவருக்கெதிராக ஒருவரை நிறுத்திக் கற்றலை யுத்தமாக்குகிறது. இதற்கு மாறாக உயிர் ததும்பும் வகுப்பறைகளை உருவாக்கும் பொறுப்பு நமக்கு உள்ளது.

இதற்கு அடுத்த கட்டமாக மாணவர்கள் வேலை வாய்ப்புகளைப் பெறுவதற்கான செயல்திறன்களை மேம்படுத்தும் வகையில் பாடத்திட்டங்கள், செய்முறைத் தேர்வுகள் அமைக்கப்பட வேண்டும். இதற்குச் சாண்றாக சோவியத் ரஸ்யாவின் கல்வியல் அறிஞர் அலெக்ஸாந்தர் செலன்கோவின் பங்களிப்புகளைக் குறிப்பிடலாம். மாணவர்கள் பாடசாலைகளில் மிகுதியான நேரத்தைச் செலவழிக்கும் வகையில், தம் எதிர்கால வேலைவாய்ப்புகளுக்குப் பயிற்சி பெறும் முறையில் அவரது உயர்கல்வித்துறை சார்ந்த தொழிற்கல்வி கட்டமைக்கப்பட்டது. ஐரோப்பியக் கல்வி முறை மாணவர்களைத் தனி மனிதர்களாக நடத்தியது. அவர்களை இயந்திரக் கதியில் அணுகியது.

மாணவர்களை எண்களால் அழைக்கிற சிறைக் கைதி முறையையே அது நமக்கு வழங்கியுள்ளது. எமது கல்விமுறை மாணவர்களை உடலால் முடங்கிக் கிடப்பவர்களாக ஆக்கி வைத்திருப்பதாகச் செலன்கோ குறிப்பிடுகின்றார். மாணவர்கள் உடல் உழைப்பிலும், கூட்டுக்குழு மனப்பான்மையுடன் செயல்புரியத் தகுந்த வேலைகளில் ஈடுபாடு காட்டாமை பற்றியும் அவர் ஆராய்ந்தார்.

அதன் பயனாக உருவானதே விடுமுறை நாட்களின், ஓய்வு நேரங்களின் பணிக்காலங்கள் என்ற திட்டம். பின்னர் இத்திட்டம் அமெரிக்கப் பல்கலைக் கழகங்களில் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டது. கல்வி பயிலும் காலத்திலேயே ஆதார வேலைகளைச் செய்ய பழக்குதல் என்னும் நடைமுறைத் திட்டத்தை செலன்கோ உருவாக்கினார். பின்னர் மகாத்மா காந்தி உருவாக்கிய ஆதாரக் கல்வித் திட்டமும் இதே கருத்தையே வலியுறுத்தியது. இயற்கை வேளாண் அறிவியலாளர் நம்மாழ்வார் கிராமப்புற மாணவர்கள் மட்டுமன்றி நகர்ப்புற மாணவர்களும் இயற்கை வேளாண்சார்ந்த தொழில்களை மாணவப் பருவத்திலேயே பழகவேண்டும் என்கிறார்.

பொறியியல், மருத்துவம் போன்ற கல்வியே உயர்ந்தது என்ற செக்குமாட்டு மனப்பான்மையையே இன்றும் நம் சமூகத்தில் காண்கிறோம். விளிம்புநிலை மாணவர்கள் பலர் உணவகங்கள், தொழிற்பயிற்சிகூடங்கள், போன்றவற்றில் பகுதிநேரப் பணிகளைச் செய்கிறார்கள். ஆரம்பக்கல்வி மாணவர்கள் தமது தந்தையின் தொழிலுக்கு உதவுகிறார்கள். .(பாடசாலை நேரம் தவிர்ந்த நேரங்களில்) மாணவப் பருவத்திலேயே இது போன்ற பணிகளில் பகுதி நேரமாக ஈடுபட்டு வேலை செய்யும் திறன்களை மேம்படுத்திக் கொள்ளும்போது மேற்காணும் பணிகளில் தனியாகவோ, கூட்டாகவோ ஈடுபட்டு பொருளீட்ட முடியும்.

பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் அரசு, மற்றும் தனியார் துறைகளில் வேலை வாய்ப்பை பெறுவதற்கான பகுதிநேர, விடுமுறை நாட்களில் வகுப்புகள் பாடசாலைகளிலும் பல்கலைக் கழகங்களிலும் தொடங்கவேண்டும். இதற்காக தேசியபாடசாலைகளையோ அல்லது குறித்த சில பல்கலைக்கழகங்களையோ தெரிவு செய்து வேலைவாய்ப்பை பெறும்பொருட்டு நடாத்தப்படும் பரீட்சைகளுக்கு வழிகாட்டும முகமாக பயிற்சி கூடங்களை நிறுவி தொடர்புடைய துறைசார் நிபுணர்களுடன் இணைந்து மாணவர்களுக்கு பரீட்சைகளை எதிர் கொள்வதற்கான மனத்துணிவை, பயிற்சியை பாடத்திட்டங்களோடு இணைந்த தொழிற் பயிற்சி பெறும் வகையில் கல்விமுறையை மாற்றியமைக்கவேண்டும்.

மன உழைப்பே உயர்ந்தது, உடல் உழைப்பு தாழ்ந்தது என்கிற மனப்பான்மையை மாற்றும் வகையில் தொழில்திறன் சார்ந்த பயிற்சிகள், செய்முறை விளக்கங்கள் மாணவர்களுக்கு வழங்கப்படவேண்டும். செல்வ நுகர்ச்சி மீது உள்ள அளவிடற்கரிய பற்றைச் சமுதாய அக்கறையாக மடைமாற்றம் செய்யும் வகையில் விளிம்புநிலை மாணவர்கள் வேலை வாய்ப்பு பெறுவதற்குரிய செயல்திறன்களை அடையாளம் கண்டு அவற்றை மேம்படுத்தவேண்டும். இப்பணியில் கல்வியமைச்சு, பாடசாலைநிர்வாகம், ஆசிரியர்கள் ஆகியோர் முக்கோணத்தில் இணைந்து தன்முனைப்பற்ற நிலையில் தங்களை ஈடுபடுத்திக்கொண்டால் வருங்காலச் சந்ததி வளம்பெறும்.

ச.இந்திரகுமார்

# கலைத்திட்டம்: ஓர் அறிமுகம்

கலாநிதி எப்.எம்.நவாஸ்தீன்
சிரேஸ்ட விரிவுரையாளர்
கல்விப்பீடம்
இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

**அறிமுகம்**

கல்வித்துறையில் கலைத்திட்டம் ஒரு முக்கிய இடம் பெறுகின்றது. கற்றலுக்கு உரியவை எல்லாம் கலை எனப்படுகின்றது. கற்றலுக்கு உரித்தானவற்றுக்கான ஒரு திட்டமே கலைத்திட்டம் எனலாம். முன்பள்ளி தொடக்கம் பல்கலைக்கழகம் வரையான, முறைசார்ந்த அல்லது முறைசாரா வகையில் கல்வியை வழங்குகின்ற சகல தாபனங்களும் தாம் வழங்குகின்ற கற்றல்- கற்பித்தல் செயன்முறை தொடர்பாக முறையான திட்டமொன்றைக் கொண்டிருக்க வேண்டியாதாகவுள்ளது. இத்தாபனங்களில் சேவையாற்றும் நபர்கள் குறிப்பாக ஆசிரியர்கள் இத்திட்டம் தொடர்பான போதுமான அறிவு, திறன்களைக் கொண்டிருக்க வேண்டியதும் மிக இன்றியமையாதாகும். அதாவது, கல்வித்துறையுடன் நேரடியாகவும் மறைமுகமாகவும் தொடர்புபடுகின்ற நபர்கள் கலைத்திட்டம் பற்றிய பரந்த விளக்கமொன்றை கொண்டிருப்பது அவசியமாகின்றது.

இந்த வகையில் இலங்கைப் பாடசாலைகளில் பல்வேறு பாடங்களை கற்பிக்கும் பணியில் உள்ள ஆசிரியர்கள், பாடசாலைகளில் அமுலாக்கப்படும் கலைத்திட்டம் தொடர்பான போதிய விளக்கங்களை கொண்டிருத்தல் மாத்திரமன்றி கலைத்திட்டம் என்ற துறை தொடர்பான விளக்கங்களையும் பெற்றிருத்தல் அவசியமாகின்றது. ஏனெனில் ஆசிரியர்களே, கலைத்திட்டத்தை செயற்படுத்தும் முகவர்களாக விளங்குகின்றனர். இலங்கையினைப் பொறுத்தவரையில், தேசிய ரீதியில் கல்வி அமைச்சு, தேசிய கல்வி ஆணைக்குழு போன்றவற்றின் ஒத்துழைப்புடன் தேசிய கல்வி நிறுவகத்தினால் திட்டமிடப்படுகின்ற கலைத்திட்டத்தை பாடசாலைகளில் செயலுருப்பெறக் காரணமாகின்றவர்கள் ஆசிரியர்களே! எனவே, இலங்கையில் நடைமுறைபடுத்தப்படும் ஆசிரிய வாண்மைப்பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் கலைத்திட்டம் பற்றிய அடிப்படை எண்ணக்கருக்கள் வழங்கப்பட வேண்டும் என்ற கருத்து அண்மைக்காலமாக வலியுறுத்தப்பட்டு வருகின்றது. இதனைக் கருத்திற் கொண்டு இலங்கையில் உள்ள பல்வேறு உயர்கல்வி நிறுவகங்களின் ஆசிரிய வாண்மைக் கற்கைகளில் கலைத்திட்டம் என்ற பாடம் இணைக்கப்பட்டுள்ளது. விசேடமாக தேசிய கல்வி நிறுவகத்தின் கல்விமாணி மற்றும் பட்ட மேற் கல்வி (டிப்ளோமா) பாடநெறிகளில் கலைத்திட்டக் கோட்பாடுகளும் பிரயோகங்களும் என்ற பாடம் கட்டாய பாடமாக இணைக்கப்பட்டுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது. இப்பாடநெறியினை பின்பற்றும் மாணவர்களின் நன்மை கருதியும், பிராந்திய நிலையங்களில் கற்பிக்கும் போதனாசிரியர்களிற்கு பயன் தரும் வகையிலும் இக்கட்டுரையில், கலைத்திட்டம் பற்றிய பல்வேறு வரைவிலக்கணங்களும் அவற்றில் இருந்து எழும் வினாக்கள் தொடர்பாகவும், சிறந்த கலைத்திட்டப் பண்புகள் குறித்தும் சில விளக்கங்கள் இக்கட்டுரையில் எடுத்து நோக்கப்படுகின்றன.

**கலைத்திட்டம்- வரைவிலக்கணப்படுத்தல்**

Curriculum என்ற ஆங்கிலப் பதத்துக்கு ஈடாக சில தமிழ்ப் பதங்கள் பயன்படுத்தப்படுகின்றன. உதாரணமாக, கல்வித் திட்டம், கல்வி ஏற்பாடு, பாட ஏற்பாடு, பாடவிதானம், கலைத்திட்டம் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இலங்கையில், கலைத்திட்டம், பாடவிதானம் எனும் சொற்களே பரவலாகப் பயன்படுத்தப்படுகின்றன. '*Curriculum*' எனும் ஆங்கிலப்பதம் 'currere' எனும் லத்தீன் சொல்லில் இருந்து மருவியது. இலத்தின் மொழியில் 'currere' என்பது ஓடுதல் அல்லது ஓடிக்கொண்டு இருக்கும் நடவடிக்கை (action of running), கற்கை நடவடிக்கை (course of action) ஓட்டப்பந்தயம் (race/racecourse) தேர் (chariot) எனப் பலவாறாக அர்த்தப்படுத்தப்படுகிறது.

இதனால்தான் என்னவோ, இன்றுள்ள பல கலைத்திட்டங்கள் மாணவர்கள் பல தொடரான தடைகளை (பாடங்களை) தாண்டி (சித்தி) ஓட வைப்பதாக உள்ளன என Marsh (2009) நகைச்சுவையாகக் கூறுகிறார்.

கலைத்திட்டம் என்பதற்கு பல வரைவிலக்கணங்கள் அறிஞர்களினால் முன்வைக்கப்பட்டுள்ளன. இதனால் கலைத்திட்டம் என்பதற்கு எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு வரைவிலக்கணத்தை முன்வைக்க முடியாதுள்ளது. காலத்துக்குக் காலம் அறிஞர்கள் தாம் வாழ்ந்த சமூகப் பொருளாதார அரசியல் சூழல்களுக்கு அமைவாகவும் அக்காலத்தில் நிலவிய தத்துவ, உளவியல் பின்னணிகளின் செல்வாக்குக்கு ஏற்பவும் கலைத்திட்டத்தை வரைவிலக்கணம் செய்ய முற்பட்டுள்ளனர் என்று அனுமானிக்கலாம்.

கலைத்திட்டத்தினை, குறிப்பிட்ட உள்ளடக்கப் பட்டியல் அல்லது, பாடமொன்றின் உள்ளடக்கம் அல்லது ஒரு கற்கை நெறியின் வழிகாட்டியாகக் கொள்ளப்படுகின்ற பாடத்திட்டத்திற்கு சமமான நிலையில் பலர் நோக்குகின்றனர். இதனை விடவும், பரந்துபட்ட அடிப்படையில், கல்வி பற்றிய எடுகோள்கள், தத்துவங்கள், கோட்பாடுகள், மற்றும் நம்பிக்கைகள், போன்ற இன்னோரன்னவற்றை உள்ளடக்கிய வகையில், கலைத்திட்டத்தை நோக்குவது அவசியமாகும். அதாவது கலைத்திட்டம் என்பது பாடத்திட்டத்துடன் சமனான வகையில் நோக்குவது பிழையானதாகும். கலைத்திட்டம் (curriculum) பாடத்திட்டம்;(syllabus) பாடத்துக்கு திட்டமிடல் (course plan/lesson plan)என்பனவற்றுக்கு இடையில் தெளிவான வேறுபாடுகள் உள்ளன என்பது கவனத்திற் கொள்ளத்தக்கது. வைட் (White 1988) கருத்துப்படி, தனித்ததொரு பாடத்தின் உள்ளடக்கம் பாடத்திட்டமாகும். அதேவேளை, கலைத்திட்டமானது, கல்விமுறைமையொன்றினுள் கற்பிக்கப்படவேண்டிய மொத்த உள்ளடக்கங் களையும், அடையப்படவேண்டிய இலக்குகளையும் உள்ளடக்கிய வடிவமைப்பு ஆகும். கலைத்திட்டத்தின் ஒரு பிரிவாக பாடத்திட்டம் அமைந்திருக்கும். வழங்கப்பட்ட பாடத்திட்டற்கு ஏற்ப ஆசிரியர்கள் தமது அன்றாட கற்றல். கற்பித்தலுக்காக வேலைத்திட்டம் (work plan) பாடக் குறிப்புத் திட்டம் (Lesson plan) என்பனவற்றைத் தயாரித்தல் பாடத்திற்கான திட்டமிடல் (Course plan) எனப்படுகின்றது. டயிலர் (Tyler 1949) கலைத்திட்டத்தை கல்வியின் ஒரு தொழிற்படு சாதனமாக நோக்குகின்றார். கலைத்திட்டத்தை வடிவமைக்கும் போது நான்கு பிரதான கூறுகள் கவனத்திற் கொள்ளப்படல் வேண்டும் என இவர் வலியுறுத்துகின்றார். அடைய வேண்டிய கல்வி நோக்கங்கள், வழங்க வேண்டிய கல்வி அனுபவங்கள், அக்கல்வி அனுபவங்களை வினைத்திறனான முறையில் ஒழுங்கமைத்தல், நோக்கங்கள் அடையப் பெற்றனவா எனக் காண மதிப்பீடு என்பனவே அந்நான்குமாகும். ஸ்டேன்ஹவுஸ் (Stenhouse 1975) என்பவர், கலைத்திட்டம் பற்றி பின்வருமாறு கருத்துக் கொண்டுள்ளார்: “கலைத்திட்டம் – கற்பித்தல் நடைமுறை பற்றிய திட்ட விபரம் (விபரக்குறிப்பு) ஆகும். மாறாக பூர்த்திசெய்யப்பட வேண்டிய பாடத்திட்டமோ சாதனப் பொதியோ அல்ல. (A particular form of specifications about the practice of teaching and not as a package of materials or a syllabus of ground to be covered). மேலும் ஸ்டேன்ஹவுஸ், எந்தவொரு கல்வி சார் அபிப்பிரயங்களையும் பரிசோதனை செய்துபார்க்கக் கூடிய கருதுகோளாக மாற்றுவதற்கான வழியொன்றாகவும் மற்றும் வெறுமனே ஏற்றுக் கொள்ளப்படுவதனை விடவும், விமர்சனரீதியாகசோதிக்க அழைக்கக் கூடியதொரு வழியாகவும் கலைத்திட்டம் காணப்படுவதாகக் கருதுகிறார். இதிலிருந்து ஸ்டேன்ஹவுஸ் கலைத்திட்டத்தை ஓர் செயன்முறையாக (process) நோக்குவது தெரிகிறது. கலைத்திட்டம் எனும் செயன்முறையில், ஆசிரியர்கள் கல்விசார் எண்ணங்களை கடத்துபவர்களாகவும், அவை பற்றிய தீர்ப்புக்களை வழங்குபவர்களாகவும் வகிபங்கேற்க வேண்டியுள்ளதாகவும் அவர் குறிப்பிடுவது இங்கு நோக்கத்தக்கது.

மற்றுமொரு பொதுவான நோக்கின்படி, கலைத்திட்டமானது பாடசாலைச் சூழமைவொன்றில் உள்ள மாணவர்களுக்கான திட்டமிட்ட கற்றல் அனுபவங்களாக கருதப்படுகிறது. இத்தகைய கருத்தினையே Taba (1962) Tanner and Tanner (1975) Eraut (1975) போன்றோர் கொண்டிருந்தனர். கற்றலுக்கான ஒரு திட்டமே கலைத்திட்டமாகும் (“ a curriculum is a plan for learning) என டாபா(Taba 1962) கூறுகின்றார். அதேபோன்று,

தன்னர் மற்றும் தன்னர் (Tanner and Tanner 1975) என்போர் " பாடசாலையொன்றின் வழிகாட்டலின் அடிப்படையில், ஒழுங்கமைக்கப்பட்ட அறிவு மற்றும் அனுபவங்களாக வடிவமைக்கப்பட்ட திட்டமிட்ட மற்றும் வழிகாட்டப்பட்ட கற்றல் அனுபவங்களும் அடைய எதிர்பார்க்கப்படும் கற்றல் பேறுகளுமே கலைத்திட்டம் எனப்படுகிறது (the planned and guided learning experiences and indented learning outcomes formulated as the systematic reconstruction of knowledge and experiences under the auspices of the school). ஈரவ்ட் போன்றோர் (Eraut et al. 1975) கலைத்திட்டத்தை பின்வருமாறு நோக்குகின்றனர்:

"பாட அலகுகள் திட்டமிடப்படுகையில், கற்றல் இடம்பெறுகையில் உள்ள பொதுவான மாதிரிசட்டகமொன்றை தீர்மானிக்கின்ற, எவை கற்பிக்கப்படல் வேண்டும், எவ்வாறு அவை கற்பிக்கப்படல் வேண்டும் என்பது பற்றிய பரந்துபட்ட தீர்மானங்களே கலைத்திட்டமாகும்" (the set of broad decisions about what to be taught and how it is to be taught, that determine the general framework within which lessons are planned and learning takes place - Eraut et al 1975). இவை கலைத்திட்டம் பற்றி அறிஞர்கள் ஒருமித்த கருத்துக்களை கொண்டிருக்கவில்லை என்பது தெளிவாகின்றது.

"கலைத்திட்டம் என்றால் என்ன? என்பதை மேலும் விளங்கிக் கொள்ளும் பொருட்டு அட்டவணை 1 இல் , கலைத்திட்டம் பற்றிய பல வரைவிலக்கணங்கள் பட்டியலிடப்பட்டுள்ளன. இவற்றை விமர்சன ரீதியில் நோக்கும் போது பல ஒத்த பண்புகளையும் பல வேற்றுமைக் கருத்துக்களையும் அறிந்து கொள்ள முடியுமாக இருக்கும்.

அட்டவணை 1: கலைத்திட்டம் தொடர்பான சில தெரிவு செய்யப்பட்ட வரைவிலக்கணங்கள்

1. கல்விக் குறிகோள்களை அடைவற்காக பாடசாலை மூலம் மேற்கொள்ளப்படும்

   அனைத்து விதமான அனுபவத் தொகுதியின் கூட்டுச் சேர்க்கை கலைத்திட்டம் ஆகும்.

2. ஒரு நாட்டின் தேசிய இலக்குகளை அடைந்து கொள்ளவும் அங்குள்ள சமூகத்தில் வாழும் நபரொருவர் எதிர்கொள்ள வேண்டி ஏற்படும் சவால்களை சமாளிக்கவும், அறிவு,திறன், மனப்பாங்கு சிறந்த ஆளுமையுடைய சிறந்த பிரஜையாக உருவாக்கவும் வேண்டியும் திட்டமிடப்படுகின்ற கல்வி அனுபவங்களின் சேர்வை கலைத்திட்டம் ஆகும்.

3. கலைத்திட்டம் என்பது மாணவர்களுக்கான அறிவை பெற்றுகொள்வதற்காக சமூகத்தின் ஒரு சிலரால் தொகுத்தளிக்கப்பட்ட கல்வியனுபவங்காளாகும் - (போசவ் 1961)

4. தனது ஆற்றல்களை உச்ச அளவில் வெளிப்படுத்தி திட்டவட்டமான கல்வித் தேர்ச்சிகளை அடைவதற்காக மாணவர்களுக்கு வழி காட்டுகின்ற பாடசாலையால் திட்டமிட்ட கற்றல் அனுபவங்கள் ஆகும். (நிஸ்வி எவன்ஸ் 1967)

5. முற்கூட்டியே தீர்மானிக்கப்பட்ட கற்றல் பேறுகளை அடைவற்கு மாணவர்களை நடாத்தி செல்ல எந்தவொரு பாடசாலையும் முன்கூட்டியே தயாரித்துக் கொள்ளும் அனைத்து செயற்பாடுகளும் கலைத்திட்டம் ஆகும். (இன்லோ 1967)

6. வினைத்திறனான வகையில் செயற்படுத்தக் கூடிய கல்வித் திட்டங்களின் பண்புகளை கொண்ட கல்வி கோட்பாடுகளை தொகுக்கும் முயற்சியாகும் (லோரன்ஸ் ஸ்ரேன்ஹவுஸ் 1975)

7. பாடசாலையின் உள்ளே அல்லது வெளியே குழுவாகவோ தனித்தனியாகவோ ஆசிரியருடன் அல்லது ஆசிரியர் இன்றி பெற்றுக்கொள்ளக் கூடியவாறு பாடசாலையினால் திட்டமிட்டு வழிநடத்தப்படும் சகல விதமான அனுபவங் களும் கலைத்திட்டம் ஆகும். (ஜே.என்.கேர் 1988)

8. ஆரம்பமும் இறுதியும் கொண்ட கிரமமாக ஒருங்கிணைக்கபட்ட அனுபவங்களின் கூட்டாகும் (கொன்ராட் 1978)

9. மாணவர்களுக்கு கல்விக் குறிகோள்களை அடைய பெறுபேறுகளை அடைய திட்டமிட்ட பிரயோகரீதியிலான வேலைத்திட்டமொன்றாகும் (ஹர்ஸ்ட்)

10. பாடசாலை வழிகாட்டலின் கீழ் நிறைவு பெறும் சகல கற்றல் செயற்பாடுகளும் அனுபவங்களும் கலைத்திட்டம் ஆகும். (ரில்வீனும் சூலரும்)

கலைத்திட்ட வரைவிலக்கணங்களில் உள்ள எழுவினாக்கள்

மேலே எடுத்துக்காட்டப் பட்ட பல வரைவிலக்கணங்களைக் கண்டு சில வேளைகளில் நீங்கள் குழப்பம் அடையக்கூடும். எனினும், இவ்வாறு பல வரைவிலக்கணங்கள் கலைத்திட்டதுக்கு இருப்பதில் தவறில்லை. கலைத்திட்டம் என்பதற்கு காணப்படும் பல வரைவிலக்கணங்கள் , இத்துறையின் சிறந்த இயங்குநிலையினை (dynamism of the field) எடுத்துக் காட்டுகிறது. ஏனெனில், கலைத்திட்டம் திட்டமிடப்படுகின்ற சமூகத்தின் தத்துவரீதியான நம்பிக்கைகளையும், மனிதனின் கற்றல், கற்பித்தல் உத்திகள், அரசியல் அனுபவங்கள் மற்றும் கலாசார பின்னணிக் கருத்துருக்களையுமே இத்தகைய பல்வேறு வரைவிலக்கணங்கள் பிரதிபலிக்கிறது என Ornstein and Hunkins (1998) கூறுகிறார். இவ்வாறு பல வரைவிலக்கணங்கள் காணப்பட்ட போதிலும் அவை:

- மாணவர்கள் எதனை அறிந்து இருக்க வேண்டும் (அறிவு உள்ளடக்கம்),
- எவற்றை செய்ய இயலுமானவர்களாக இருத்தல் வேண்டும் (திறன்கள் தேர்ச்சிகள்),
- எவ்வாறு கற்பிக்கப்படல் வேண்டும் (கற்றல் கற்பித்தல் முறை),
- எவ்வாறு அவை அளவிடப்படல் வேண்டும் (கணிப்பிடும் மதிப்பிடும்)
- மற்றும் எவ்வாறு கல்வி முறைமை ஒழுங்கமைக்கப்படல் வேண்டும் (சூழமைவு) என்பன போன்ற பொதுவான விடயங்களை உணர்த்தி நிற்கின்றன என்பதை நாம் மனதிற் கொள்ள வேண்டும்.

எனினும், கலைத்திட்ட வரைவிலக்கணங்களை விமர்சன ரீதியாகவும் தர்க்கரீதியாகவும் எடுத்து நோக்குவதும் முக்கியமாகும். இத்தகைய விமர்சன சிந்தனை ஏற்பட வேண்டும் என்பதன் பொருட்டு, ஒரு சில வரைவிலக்கணங்களையும் அவற்றில் இருந்து எழும் வினாக்களையும் இங்கு எடுத்து நோக்குவோம்:

**வரைவிலக்கணம் 1:** கலைத்திட்டம் என்பது இலக்கணம் தர்க்கம், சொல்லாட்சி, கணிதம், மற்றும், சிறந்த அத்தியாவசிய அறிவைக் கொண்டுள்ள மேற்கத்திய உலகின் மிக பெரிய புத்தகங்கள் போன்ற"நிரந்தர" பாடங்களைக் கொண்டதாகும் (Curriculum is such 'permanent' subjects as grammar reading, logic, rhetoric, mathematics, and the greatest books of the Western world that best embody essential knowledge) இந்த வரைவிலக்கணத்திற் குறிப்பிட்டது போன்று நிரந்தர பாடங்களைக் கொண்ட கலைத்திட்டங்களை அன்மைக்காலத்திலும் காண முடிந்தது (உ+ம்: 1988 இன் ஐக்கிய இராச்சியத்தின் கலைத்திட்டம்) இந்த வரைவிலக்கணத்தின் படி கலைத்திட்டம் ஒரு சில பாடங்களுக்குள் மட்டுப்படுத்தப்படுகின்றது. இங்கு எது கற்பிக்கப்படுகிறதோ அதுவே கற்கப்படுகிறது எனும் எடுகோள் எடுக்கப்படுகிறது (what is studied is what is learned). மேலும், அறிவில் ஏற்படும் மாற்றம், அதனால் கலைத்திட்டத்தில் ஏற்படும் மாற்றங்கள் இங்கு கவனத்திற் கொள்ளப்படவில்லை.

**வரைவிலக்கணம் 2**: சமகால சமூகத்தில் வாழ்வதற்காக மிகப் பயனுள்ள பாடங்களே கலைத்திட்டம் ஆகும் (Curriculum is those subjects that are most useful for living in contemporary society). இந்த வரைவிலக்கணத்தின்படி, சமூகத்தினுள் நிலவும் பிரச்சினைகள் மற்றும் தற்கால பிரச்சினைகளின் அடிப்படையில் கலைத்திட்டம் தெரிவு செய்யப்படுகிறது. எனினும், பாடத் தெரிவில் மாணவர்கள் தமக்கு முக்கியம் எனக் கருதும் பாடங்களை தெரிவுசெய்வது பற்றி கவனத்தில் கொள்ளவில்லை. அத்துடன் சமகாலம் கருத்திற் கொள்ளப்படுகிறதே தவிர நீண்டகால தேவைகள் புறக்கணிக்கப்படுகின்றன. மேலும், பாடசாலைகளும் மாணவர்களும் நிலவும் சமூகத்திற்கு இசைவாக்கம் கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றதே அன்றி சமூகத்தினை மேம்படுத்த இங்கு கவனம் செலுத்தப்படவில்லை.

**வரைவிலக்கணம் 3**: பாடசாலை பொறுப்பான, திட்டமிடப்பட்ட அனைத்து கற்றல்களும் கலைத்திட்டமாகும் (curriculum is all planned learnings for which the schools is responsible). இந்த வரைவிலக்கணம் திட்டமிடப்பட்ட கற்றலுக்குள் மட்டுப்படுத்தப்படுகிறது. இத்திட்டமிடப்பட்ட கற்றல் ஒருவேளை விருப்புக்குரிய கற்றல் அல்லாமல் இலகுவாக அடையப்படக்கூடியதாக இருக்கலாம். மேலும்

எந்த அடிப்படையில் பாடசாலைகள் குறிப்பிட்ட சில கற்றல்களை தெரிவு செய்து ஏனையவற்றை புறக்கணித்துவிட்டு எங்ஙனம் பொறுப்பாக இருக்க முடியும்? திட்டமிடப்படாத கற்றல்கள் இங்கு உண்மையில் தவிர்க்கப்படுகின்றதா? என்பன போன்ற வினாக்கள் எழுகின்றன.

**வரைவிலக்கணம் 4:** பாடசாலைகளின் வழிகாட்டுதலின் கீழ் மாணவர்கள் அனைத்து அனுபவங்களையும் கற்பதே கலைத்திட்டமாகும் (Curriculum is all the experiences learners have under the guidance of school). இந்த வரைவிலக்கணத்தின் பிரகாரம், அனுபவங்கள் அனைத்தும் கலைத்திட்டம் என்பதாகின்றது. இதில் எவை விருப்புக்கு உரியவை எவை தேவையற்றவை எனத் தெளிவாக குறிப்பிடப்படவில்லை. இது பாடசாலைகளின் பணிகளை விரிவாக்குவதுடன் சத்தியமற்றதாக்குகின்றது. இங்கு சகல அனுபவங்களும் (திட்டமிடப்பட்ட மற்றும் திட்டமிடப்படாத அனுபவங்கள் அனைத்தும்) கலைத்திட்டமா? எனும் வினா எழுகின்றது.

**வரைவிலக்கணம் 5**: முழுமையான கற்றல் அனுபவங்களை கலைத்திட்டம் குறிக்கின்றது. இதன் மூலம் பல்வேறு கற்றல் தளங்களில் பொதுத் திறன்கள் மற்றும் அறிவுகளை மாணவர்கள் அடைந்து கொள்வர் (Curriculum is the totality of learning experiences provided to students so that they can attain general skills and knowledge at a variety learning sites). இவ்வரைவிலக்கணத்தில் கற்பித்தலை விட கற்றலுக்கு முக்கியம் வழங்கப்படுகிறது. குறிப்பாக பாடசாலைகளில் மட்டுமன்றி அதற்கு வெளியே உள்ள தளங்களில் இருந்தும் அறிவு, திறன்களைக் கற்பதை இது உணர்த்துகிறது. எனினும், இவ்வரைவிலக்கணம் குறுகிய தொழிநுட்ப-செயற்பாட்டு (கடமைவாதி,செயற்பாட்டுவாதி) அணுகுமுறைக்கு (technical-functionalist approach) கலைத்திட்டத்தை எடுத்துச் செல்கிறது. இதனால், அனாவசியமான அதிகளவிலான பேறுகளையும், உயரளவிலான திட்டவட்டமான முடிவுகளையும் இனங்காண வேண்டியிருக்கும்.

**வரைவிலக்கணம் 6:** மாணவர்கள் கணனிகள் மற்றும் அதன் பல்வேறு வலையமைப்புக்களில் இருந்து கட்டியெழுப்புகின்ற விடயங்கள் கலைத்திட்டமாகும். (Curriculum is what the student constructs from working with the computers and its various networks> such as Internet). நிச்சயமாக, இது ஒரு நவீன கால வரைவிலக்கணமாகும். ஒவ்வொருவரின் வீட்டிலும், பாடசாலையிலும், காரியாலயங்களிலும், கணனிகள் காணப்படுவதுடன் மாணவர்களும் கணனிகள் தமது சூழலில் உள்ள ஓர் இன்றியமையாப் பொருள் என புலக்காட்சியைக் கொண்டுள்ளனர் என்ற எடுகோளினை இது கொள்கிறது. மிக கிட்டிய எதிர்காலத்தில், இலத்திரனியல் சாதனங்கள், வளங்களினை மாணவர்கள் இலகுவாகப் பெறக்கூடியதாக இருந்தாலும், இவற்றை சகல மாணவர்களும் சம அளவில் கொண்டிருப்பார்கள் என்று கூற முடியாது.

**வரைவிலக்கணம் 7:** அதிகாரத்தை கேள்வி கேட்பதும் மானிடத்தின் நிலைமைகளுக்கு சிக்கலான பார்வைகளை தேடுவதுமே கலைத்திட்டமாகும் (Curriculum is the questioning of authority and the searching for complex views of human situations). இது சோக்கிரட்டீசின் கோட்பாட்டை நினைவுறுத்துகிறது. எனினும் பின்நவீனத்துவ சிந்தனைகளுடன் இந்த வரைவிலக்கணம் முரண்படுகின்றது.

**வரைவிலக்கணம் 8:** வாழ்க்கையில் மாணவர்கள் கொண்டுள்ள சகல அனுபவங்களும் கலைத்திட்டம் ஆகும் (Curriculum is all the experiences that learners have in the course of living). இந்த வரைவிலக்கணம், கலைத்திட்டத்தில் தனியாள் சமூகத் தன்மையில் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது. இது, பாடசாலையில் என்ன நடைபெறுகின்றது, வாழ்க்கையில் பொதுவாக என்ன நடைபெற வேண்டும் என்பனவற்றுக்கு இடையில் எந்தவொரு வேறுபாட்டையும் சுட்டிக் காட்டவில்லை. இவ்வரைவிலக்கணத்தின்படி, கலைத்திட்டத்தில் பாடசாலைகளுக்கு எந்தவொரு சிறப்பான பொறுப்புக்களும் இல்லை. இதனால், கல்விசார் அனுபவங்களுக்கும் வாழ்க்கை அனுபவங்களுக்கும் இடையில், என்ன தொடர்புள்ளது என்ற வினாவினை எழுப்புகிறது.

**கலைத்திட்ட வளர்ச்சி நிலைகள்**

கலைத்திட்ட வரைவிலக்கணங்களை நன்கு ஆராயும் ஒருவர், காலரீதியாக வெவ்வேறு வளர்ச்சிப்படிகளை கலைத்திட்டத்தில் இனங்கண்டு

கொள்ளுவார். இதன் படி கலைத்திட்டமானது பின்வரும் நான்கு வளர்ச்சிநிலைகளைக் கொண்டுள்ளது:

- ஒரு பாட விடயமாக கலைத்திட்டம் (Curriculum as a subject matter)
- ஒரு திட்டமாக கலைத்திட்டம் (Curriculum as a Plan)
- ஓர் அனுபவமாக கலைத்திட்டம் (Curriculum as an Experience)
- ஒரு பேறாக (முடிவாக, விளைவாக) கலைத்திட்டம் (Curriculum as an Outcome)

ஒரு பாட விடயமாக கலைத்திட்டம் (Curriculum as a subject matter)

புராதன காலங்களில் கலைத்திட்டம் பாடவிடயமாகவே கருத்தில் கொள்ளப்பட்டுள்ளது. இன்றைய காலங்களிலும் இதனை சில சமூகக் கட்டமைப்புக்களில் காணலாம். தகவலானது, ஒழுங்குபடுத்தப்பட்ட அறிவு என்ற வகையில் ஒரு பரம்பரையில் இருந்து மற்றொரு பரம்பரைக்கு கடத்தபடுவதே இங்கு கருத்திற் கொள்ளப்படுகிறது. இத்தகைய கலைத்திட்டத்தில், அத்தியவசியமான பாடங்கள் அல்லது நூல்களின் திரட்டுக்கள் காணப்படும். அத்தியவசியமான பாடங்களாக இலக்கணம், வாசிப்பு, சொல்லாட்சி மற்றும் தர்க்கம், கணிதம் மற்றும் இரண்டாம்நிலைக்கல்விற்கான மேற்கத்திய உலகில் உள்ள மிக பெரிய புத்தகங்கள் என்பன கலைத்திட்டத்தில் உள்ளடக்கப்படும். வேறொரு அறிஞரின் கருத்தின்படி தாய்மொழி, இலக்கணம், இலக்கியம், எழுத்து கணிதம் அறிவியல், வரலாறு மற்றும் வெளிநாட்டு மொழி போன்ற ஐந்து அத்தியவசியமான பாடங்கள் இதில் உள்ளடக்கப்படும். ஆரம்ப காலங்களில் வந்த கலைத்திட்டம் தொடர்பான வரைவிலக்கணங்களில் பாடவிடயம் என்ற தொனி காணப்படுவதை அவதானிக்கலாம். உ-ம்: கலைத்திட்டம் என்பது, பல்வேறு துறைகளில் இருந்து வரும் அறிவினை உள்ளடக்குவதாக இருத்தல் வேண்டும் (Curriculum should consists entirely of knowledge that comes from the disciplines - Philip Phenix).

**ஒரு திட்டமாக கலைத்திட்டம்** (Curriculum as a Plan)

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பப்பகுதியில் கலைத்திட்டம் ஓர் திட்டமாக இருக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டது. இக்காலத்தில் ஏற்பட்ட பாரிய சமூக மாற்றங்களின் காரணமாக, கலைத்திட்டமானது பாடங்களாக அல்லாமல் நோக்கம் அல்லது இலட்சியம் உடையதாக (intention rather than subject) அமைக்க வேண்டும் என்ற சிந்தனை காணப்பட்டது . வில்லியம் அலெக்சாண்டர் (William Alexander) டைய்லர் (R.Tylor) டேனியல் மற்றும் தன்னர் (Danial & Laura Tanner) ஹில்டா டாபா (Hilda Taba) மேக்நீள் (John McNeil) போன்றோரின் வரைவிலக்கணங்களில் இது செல்வாக்குச் செலுத்துவதைக் காணலாம். உ+ம்: தமது கல்விசார் இலக்குகளை அடைந்து கொள்வற்காக பாடசாலைகளினால் திட்டமிட்டு வழிப்படுத்தப்படும் மாணவர்களின் கற்றல் அனைத்தும் கலைதிட்டமாகும் (The curriculum is all of the learning of students that is planned by and directed by the school to attain its educational goals - Ralph Tylor 1902-1994)[ஓர் அனுபவமாக கலைத்திட்டம் (Curriculum as an Experience)

இந்த சிந்தனையினை இருபதாம் நூற்றாண்டின் மத்தியில் இருந்து காண முடிகின்றது. இச்சிந்தனை முகாமில் உள்ளோர் மாணவர்களின் அனுபவங்களை முக்கியத்துவப்படுத்துகின்றனர். உ+ம்: பாடசாலையின் வழிகாட்டலின் கீழ் மாணவர்கள் பெறும் சகல அனுபவங்களும் பொதுவாக கலைத்திட்டமாகக் கருதப்படும் (the curriculum is generally considered to be all of the experiences that learners have under auspices of the school - Ronald Doll).

ஒரு பேறாக (உற்பத்திப் பொருளாக) கலைத்திட்டம் (Curriculum as an outcome)

இருபதாம் நூற்றாண்டின் இறுதிப்பகுதிகளில் இருந்து இச் சிந்தனை கலைத்திட்டத்தில் தோற்றம் பெற்றது. உலகளாவிய ரீதியில் நிதி தொடர்பான அக்கறைகள் நிலவியதால், கலைத்திட்டத்தின் ஊடாக மாணவர்கள் ஒரு தயாரிப்புப் பொருளாக கருதப்படுகின்றனர். இதன்படி, முற்கூட்டியே பேறுகள் இனங்காணப்பட்டு

அதன்படி கலைத்திட்டம் ஒழுங்கமைக்கப்படுகிறது. உ+ம்: பாடசாலை பொறுப்பாக உள்ள திட்டமிட்ட கற்றல் பேறுகள் கலைத்திட்டமாகும். (The curriculum is a planned learning outcome for which the school is responsible - James Popham and Hendry Baker)

**சிறந்த கலைத்திட்டமொன்றின் பண்புகள்**

மேலே எடுத்துக்காட்டப்பட பல்வேறு விளக்கங் களினூடாக, கலைத்திட்டமொன்றின் பண்புகளை ஒருவர் ஊகிக்க முடியுமாக இருக்கும்எனினும் சிறந்த ஒரு கலைத்திட்டம் பின்வரும் பண்புகளைக் கொண்டு காணப்படும்:

1. கலைத்திட்டமானது தொடர்ச்சியாக மாற்றமடைவதாக இருக்கும். (The Curriculum is continuously evolving)..

2. கலைத்திட்டமானது மக்களின் தேவைகளின் அடிப்படையில் காணப்படும் (The Curriculum is based on the needs of the people)

3. கலைத்திட்டமானது சனநாயகமானதாக உணரப்படும் (The Curriculum is democratically conceived)

4. கலைத்திட்டமானது நீண்டகால முயற்சியின் விளைவாகக் காணப்படும் (The Curriculum is the result of a long-term effort)

5. சிக்கலான தகவல்களினைக் கொண்டதாக கலைத்திட்டம் காணப்படும் (The Curriculum is a complex of details).

6. பாடங்களை தர்க்கரீதியான தொடறொழுங்கில் பாட விடயத்தைத் தருவதாகக் கலைத்திட்டம் காணப்படும் (The Curriculum provides for the logical sequence of subject matter)

7. சமூகத்தின் ஏனைய நிகழ்ச்சித்திட்டங்களுடன் இணைந்த வகையிலும், ஒத்துழைத்தும் கலைத்திட்டம் காணப்படும் (The Curriculum complements and cooperates with other programs of the community).

8. கலைத்திட்டம், கல்விசார் தரத்தினைக் கொண்டிருக்கும் (The Curriculum has educational quality)

9. கலைத்திட்டம் நிருவாக ரீதியான நெகிழ்வினைக் கொண்டிருக்கும் (The Curriculum has administrative flexibility)

**முடிவுரை**

கலைத்திட்டமானது, கல்வித்துறையில் முக்கியமானதோர் அங்கமாகும். கலைத்திட்டத்தில் இலட்சியமாகக் கொள்ளப்படும் அபிலாசைகளை நடைமுறைப்படுத்தும் முகவர்களில் ஆசிரியர்கள் முக்கிய இடம் வகிக்கின்றனர். எனவே தாம் நடைமுறைப்படுத்தும் பாடசாலைக் கலைத்திட்டம் பற்றிய அறிவினைக் கொண்டிருப்பதுடன் மட்டுமன்றி, கலைத்திட்டம் எனும் பாடபரப்பினைப் பற்றியும் அறிவு திறன்களை ஆசிரியர்கள் கொண்டிருத்தல் அவசியமாகும். கலைத்திட்டம் என்பது பலரால் பலவாறாக வரைவிலக்கணப் படுத்தபடுகின்றது. இத்தகைய பல் விளக்க நிலைமையானது இப்பாடப்பரப்பின் சிறந்த இயங்குதன்மையினை எடுத்துக்காட்டுகிறது. சிறந்த கலைத்திட்டமானது, ஒரு நிகழ்வாகக் காணப்படாமல் காலத்தின் தேவைக்கேற்ப மாற்றமடைந்து செல்வதாக இருக்கவேண்டும்.

**உசாத்துணைகள்**

Marsh. C.J and Will G (2007). Curriculum; Alternative-, Approaches- ongoing issues (3rd ed) Ohio, Meril Prestice Hall.

Marsh. C.J (2009). Key Concepts for Understanding Curriculum (4th ed). Routledge.

Ornstein,.A.C and Hunkins F. P (2004) Curriculum, foundations, Principles, and Issues

White V. K (1998) The ELT curriculum Design, Innovation and Management, Blackwell

# தர மதிப்பீட்டுக் கோல் (Rating Scale)

S. நடராஜன்

தர மதிப்பீட்டுக் கோல் என்பது ஒருவரது ஆழ்ந்த முடிவுகளை (Judgements) அல்லது கருத்துகளைக் குறிப்பிடுவதோடு அவை எந்த அளவுடையனவாக உள்ளன என்பதையும் கூறுகிறது.

ஏ.எஸ்.பார் (Barr) என்பார் கூறுவதாவது ஒரு சூழ்நிலை பொருள் அல்லது பண்பைப் பற்றிய கருத்து அல்லது ஆழ்ந்த முடிவினை வெளிப்படுத்துவதற்காக தர மதிப்பீட்டுக்கோல் பயன்படுத்தப்படுகிறது. தர மதிப்பீட்டு நுண் முறைகள் இத்தகைய முடிவுகளைப் பரிமாண அளவுகளாக (Quantity) மாற்ற உதவுகின்றன.

**தர மதிப்பிடுதலில் சில வடிவங்கள்**

அ) **எண் வரிசையிலமைந்த தர மதிப்பீட்டுக் கோல்கள்**

இதில் ஒவ்வொரு பண்புக் கூறுக்கும் வரிசை எண் தரப்படும். 5 என்பது மிக உயர்ந்ததாகவும் 1 என்பது மிகக் குறைந்ததாகவும் கொள்ளப்படும்.

**எண்**

1. பயன்பாடு மிகக் குறைவு
2. பயன்பாடு ஓரளவு உள்ளது
3. *மனநிறைவளிக்கிறது*
4. நன்று
5. மிக நன்று

(எ-டு) இந்த நூலைப் பற்றிய உங்கள் 1 2 3 4 5 மதிப்பீடு யாது? (குறிப்பிட விரும்பும் எண்ணை வட்டமிட்டுக் காண்பிக்கவும்)

ஆ) **வர்ணனை வகை மதிப்பீட்டுக் கோல்** (Graphic Rating Scale)

சொல் வடிவில் தரப்பட்டுள்ளவர்ணனை களில் ஒன்றைச் சுட்டிக் காட்டுமாறு கேட்கப்படலாம்.

ஆசிரியரது வகுப்பறை மேலாண்மைத் திறன்

மிக உயர்வு, உயர்வு, சராசரி,
குறைவு, மிகவும் குறைவு

இ) **வர்ணனை முறையிலான மதிப்பிடும் கருவி** (Descriptive Rating Scale)

ஒரு தலைமையாசிரியரிடம் எதிர்ப்பார்க் கப்படும் பல்வேறு திறன்களையும் பட்டியலாகத் தந்து, குறிப்பிட்ட தலைமையாசிரியரிடம் திறன்களுக்கு எதிரே குறியிடுமாறு கூறல்.

1) நிர்வாகத்திறன் :அதிக முனைப்புதேவையான பணிகளை மட்டுமே செய்தல் ஆர்வம் கவனமின்மை

2) ஆசிரியர்களுடன் உறவு: ஊக்குவிப்பவர் உதவி செய்பவர் அன்பானவர் கடுமை காண்பிப்பவர்

3) கற்பித்தல் பணி: கோட்பாடுகள் தெரியும் குறிப்பிட்டபாடத்தில் புலமை புதிய பாடப் பகுதிகளில் தேர்ச்சி இல்லை ஈடுபாடு குறைவு.

**தர மதிப்பீட்டுக் கோல்களின் பயன்பாடுகள்**

அ) பல்வேறு போட்டிகளில் ஒருவரது திறனை பதிப்பிடப் பயன்படுத்தலாம்.



(எ-டு) சொற்பொழிவுப் போட்டி, ஓவியப் போட்டி, இசைப் போட்டி, நடிப்புப் போட்டி போன்றவை

ஆ) அறிக்கைகள் தயாரிக்க உதவுகின்றன.

இ) மாணாக்கர் சேர்க்கைக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

ஈ) ஒருவரது தேவைகளை வரிசைப்படுத்த உதவுகின்றன.

உ) தொழிலாளி, ஆசிரியர் / அலுவலரது செயல்களை மதிப்பிட்டு ஊதிய உயர்வு, பதவி உயர்வு தருவதற்கு நிர்வாகத்தினருக்குப் பரிந்துரை தரத் தேவைப்படுகின்றன.

ஊ) ஒருவரைப் பற்றி வேறு தகவல் பெறும் மூலகங்களைச் சுட்டிக்காட்டுகின்றன.

எ) நல்ல அளவீட்டு எண், சொல் வழங்கப் பெற்றோர் மேலும் ஊக்கமுடன் உழைக்க ஒரு நல்ல உத்தியாகவும் விளங்குகிறது.

**தர மதிப்பீட்டுக் கோலின் நிறைகுறைகள்.**

தரமதிப்பீடு செய்தல் எளிதானது அதிக நேரம் தேவைப்படாதது. மதிப்பீடு செய்வோருக்கு அதிகப் பயிற்சி தேவை இல்லை. ஆளுமை, கற்பித்தல், கல்வி நிலையங்களது செயல்திறனை மதிப்பிடல், கலைநிகழ்ச்சிகள் போன்றவற்றின் பல்வேறு அம்சங்களுக்கும் தனித்தனியே மதிப்பீடு தந்து பின்னர் அவற்றின் தொகுப்பைக் கணக்கிடலாம். மதிப்பீடு செய்பவர் எந்தப் பண்புகளை அளவிட வேண்டும் என்று புரிந்து கொள்ள இடர்ப்படலாம். பிரபலமானவர்களை மதிப்பிடும்போது தாராளப் பிழை (generosity error) ஏற்படக்கூடும். சொந்த விருப்பு வெறுப்புகள் மதிப்பீட்டைப் பாதிக்கலாம்.

# கல்வியும் சுற்றுப்புறச்சூழல் பிரச்சினையும்

ரிஷிவெல்ஷி



வருவதாகக் காணப்படலாம்.. கல்வியும் சுற்றுப்புறச்சூழல் பிரச்சினையும் சுற்றுப் புறச்சூழல் சிக்கலின் மேல் நாம் ஏன் கவனம் செலுத்தவேண்டும்? மனித இனம் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் எல்லாமே முரண்பாடான வழியில் சுய அழிவையே நோக்கிச் செல்கிறது என்பது தெளிவாகத் தெரிகிறது. இது அரசியல், சமூகம் மற்றும் பொருளாதாரம் என

சுற்றுப்புறச்சூழல் பிரச்சினையில் கவனம் செலுத்துவது மிகவும் அவசியமானதாகும். ஏனென்றால், இப்பிரச்சினையின் ஆணிவேர் எதுவெனக் கண்டால்தான் அதற்கான பதிலும், செயல்பாடும் சாத்தியம் ஆகும்.

**அறிமுகம்**

கல்விக் கருத்தரங்கு ஒன்றில் பேசிய ஆசிரியரின் உரையின் சுருக்கம் தான் இந்தக் கட்டுரை. அதில் ஊதியம் வேண்டி ஏற்கும் வேலையையும், மனம் விரும்பி துணிந்து ஏற்கும் வேலையையும் வேறுபடுத்திப் பார்க்க அவர் முயற்சிக்கிறார். அவரைப் பொறுத்தமட்டில் மனப்பூர்வ ஈடுபாடு இல்லாமல் பார்க்கும் வேலையில் திறமை, சாமர்த்தியம் அல்லது பேராவல் போன்றவற்றின் மூலம் பணம், அந்தஸ்து மற்றும் பாதுகாப்பு என்ற வரையறுக்கப்பட்ட குறிக்கோள்களைத்தான் அடைய முடியும். இது பெரும்பாலும் நிலைகுலைவான வாழ்க்கை நிலையைத்தான் வழங்கும். ஆனால் இதற்கு மாறாக மனப்பூர்வமாக ஈடுபடும் வேலையென்பது, திறமையை உணர்ந்து தன் ஆழ்ந்த குறிக்கோளுடன் கூடிய வாழ்க்கைக்கானதாகும். ஒரு வேளை இது வாழ்க்கைத் தேவைகளுக்கும் அப்பாற்பட்ட உன்னத லட்சிய வாழ்வின் ஆழ்ந்த பண்புகள் - உணர்ச்சிகள் ஆகியவைகளின் அடிப்படையில்

நாம் எதிர்நோக்கியிருக்கும் மற்ற எல்லாவகைச் சிக்கல்களிலும் நேரடியாகவே சம்பந்தப்பட்டுள்ளது என்பது தெளிவாகத் தெரிகிறது. சுற்றுப்புறச் சூழல் சிக்கல் மட்டுமல்லாமல் இதர சிக்கல்களுக்கும் காரணமாக இருக்கும் மூலாதார ஆணிவேரான காரணங்களைக் குறித்தும் நாம் ஆலோசனை வழங்க வேண்டியது அவசியமாகிறது.. இந்தச் சிக்கலின் ஆணிவேரையே அறிய வேண்டிய அவசியம் என்ன? என்பது தான் இங்கு எழும் கேள்வி. .நாம் இந்த குறைபாடுகளுக்கான மூலாதாரத்தைக் கண்டறிய வேண்டும். ஏனென்றால் அப்படி தெரிந்து கொள்ளும் போது தான் சரியான விடைக்கும், சரியான செயலுக்கும் அவைகள் நம்மைக் கூட்டிச் செல்லக்கூடும். இந்த வகையான செயலைத் தூண்டும் புரிதல், வெறும் புத்தியால் நன்கு அறிந்து கொள்ளுதலை விட முக்கியமானதாகும். சுற்றப்புறச்சூழல் குறைபாடுகளின் அடிப்படை காரணம் என்ன? இதற்கு இரண்டு வகையில் நாம் நம் செய்கைகளினால் பங்களிப்பு செய்கிறோம்.

1. நேரிடையாக: சக்தியை உபயோகிப்பது, கழிவுப் பொருட்களை உற்பத்தி செய்வது, வளத்தை உபயோகிப்பது, பலவகையான உணவுப்பொருட்களைப் பெறுவது ஆகியவைகள்.
2. மறைமுகமாக: நமது கலாச்சாரத்தின் அடிப்படையில் அமைந்த அரசியல்/சமூக

அமைப்பில் நாம் நமக்குள் பகிர்ந்து கொண்ட பண்புகள் - நம்பிக்கைகள் ஆகியவைகள் அடங்கும். இது நமது பலமுனை "உலகப் பார்வை" என அழைக்கப்படுகிறது. இயற்கை, பணம், தனிப்பட்டவரின் பாதுகாப்பு, போட்டி, போரார்வம், பெருமை, தேசியவாதம், விளையாட்டு, பொழுதுபோக்கு மற்றும் கல்விப் பண்புகள் போன்ற எல்லாவற்றின் மதிப்பீட்டின் மீதும் நாம் கொண்டிருக்கும் கருத்துக்கள், நம்பிக்கைகள் யாவும் உலகப்பார்வையில் அடங்குகிறது.
உலகப்பார்வை நோக்கில் கல்வியில் அதற்கான தொடர்பைப் பற்றி மட்டும் கவனிப்போம்.
எங்கிருந்து மேற்கத்திய உலகப்பார்வை வந்தது? தெளிவாக இது வரலாறு, மத, அரசியல் சார்ந்த முன்னேற்றங்களின் மூலம் வந்திருக்கலாம்.
ஆனால் சிலர் அறிவியல் பூர்வமாக, சுற்றுப்புறம் மற்றும் கல்வியின் மேல் கவனம் செலுத்தியிருக்கிறார்கள். இது டெஸ்கார்டெஸ், பேகான் மற்றும் கலிலீயோ போன்றவர்களுடைய சிந்தனைகளிலிருந்து வந்திருக்கலாம். மனிதன் இயற்கையின் மீது ஆதிக்கம் செய்ய வேண்டும் என்கிற எண்ணமும் மற்ற யோசனைகளும் தான் மனிதனை இயற்கையிலிருந்து பிரிக்கிறது. இது மிகவும் சக்திவாய்ந்த தூண்டுதல் ஆகும். ஏனெனில், தொழில்நுட்பத்துடன் அறிவியலும் இணைந்ததால் தான் தொழில் புரட்சியில் ஒரு வலுவான உத்வேகம் ஏற்பட்டது. இயற்கையின் மீது ஆதிக்கம் செலுத்தும் உணர்வுப்பூர்வமான பார்வையையும் இது உருவாக்கியது.
இந்த உலகப்பார்வை, குறிக்கோள் பற்றிய அனுமானங்களையும், உற்றுக் கவனிப்பவரிடமிருந்து உற்றுக் கவனிக்கப்படுவனவற்றைப் பிரித்துப் பார்ப்பதையும் கொண்டிருக்கிறது. மேலும், நம்முடைய கல்வியில் தொடர்ந்து அறிவின் முக்கியத்தை வலியுறுத்தும் கருத்துக்கள் அநுமானங்கள் ஆகியவைகளையும் உலகப் பார்வை கொண்டிருக்கிறது.
ஆனால், இப்படிப்பட்ட உலகப்பார்வை ஏன் உருவானது? நாங்கள் இங்கு குறிப்பிட விழைவது என்னவென்றால், உலகத்தின் எல்லா சிக்கல்களுக்கும் மூல காரணம் நாம் கடைப்பிடிக்கும் சிதறுண்ட சிந்தனைகளின் குறையான குணாசயங்களாகும். இவைகளைப் பற்றி பல ஆண்டுகளாக கிருஷ்ணமூர்த்தி அவர்களும், டேவிட் போம் அவர்களும் விளக்கி உள்ளனர்.

சிதறுண்ட சிந்தனைகள் என்றால், தவறாகப் பிரித்தல், முரணாகப் பிரித்தல், ஒரு பிரித்தலை அதன் நேர்மையான எல்லை மீறி நீடித்தல் என்பதாக நாம் கருதுகிறோம்.
சிந்தனை என்பது மிகவும் குறுகிய வட்டத்தில் அல்லது கருத்தில் எப்போதும் செயல்படுகின்றது என்பதைத் தான் இது குறிக்கிறது. இந்தச் சிந்தனையானது அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தின் வழிகாட்டுதலின்படி உருவான பௌதிக உலகில் நன்கு செயல்படக்கூடும். இருப்பினும், நமது உளவியல் உலக வாழ்க்கையிலும், இயற்கை மற்றும் வாழ்வின் பிற இடங்களிலும் இதைச் செயல்படுத்தும் போது, இந்தச் சிந்தனை அவ்வளவு சிறப்பாகச் செயல்படுவதில்லை.

உண்மையில் நாம் இன்றைக்குக் கண் முன் எதிர் நோக்கும் பல்வேறு பிரச்சினைகளுக்கும், சிக்கல்களுக்கும் இதுவே காரணமாகிறது.
சிந்தனை என்பதில் நினைவாற்றல், அறிவு, பிம்பங்கள் மற்றும் குறியீடுகள் ஆகியவைகள் அடங்கும். இது மூளையின் செயல்பாடாக இருந்து, அதில் புலனாகாத குறிப்புகளும் சம்பந்தப்பட்டிருக்கின்றன.. இது மனிதர்கள் மேற்கொள்ளும் சிந்தனையோட்டதில் உண்டாகும் ஆழமான பிரச்சினையாகும். இது மனிதன் நீண்ட காலமாகச் சுற்றுப்புறச்சூழலை சீரழிக்க ஆரம்பித்த காலத்திலிருந்து நிலவி வருகிறது. உதாரணமாக, சிந்தனை அதனுடைய செயல் மற்றும் விளைவுகளுக்கான தொடர்பை இழந்து விடுகிறது சிந்தனை உலகத்தினுடைய வரைபடத்தை தயாரித்து, அதை யதார்த்த உலகமாக நினைக்கும் நிலையில் ஒரு குழப்பத்தையே ஏற்படுத்தி, இந்த வரைபடம்தான் உலகம் என்பதாக நம்ப வைக்கிறது. ஆகையால் அது தனியாக உருவாக்கப்பட்டதாக தவறாக நினைத்து செயல்படும்போது பல தவறான செயல்கள் செய்ய வழி வகுக்கிறது. இதனால் சுற்றுப்புறச்சூழலுக்கு நேரடியான விளைவு என்னவெனில் பாதுகாப்பிற்காக நாம் இடங்களைத் தேடி அலைவது தான்.

நாடு பற்றிய தெளிவற்ற கருத்துக்கள், பணம், காலங்காலமாக உபயோகத்தில் இருந்த பண்புகள், சொந்த குறிக்கோளை அடைய தனி நபர் உரிமைகள், லாபம் ஈட்டும் திடமான குறிக்கோள் ஆகியவைகள் அனைத்தும் சிந்தனையின் விளைவுகளே. இவைகள் அனைத்தும், போட்டி



மனப்பான்மைகளை வளர்த்து, வலியவன் தான் வாழ்வான் என்ற நிலைக்குக் கொண்டு விட்டுவிடும். முன்பே கூறியது போல, நம்முடைய நவீன உலகப்பார்வை இத்தகைய சிந்தனையால் உருவாகி, அந்த உலகப் பார்வையில் அறிவியல் இலக்கணத்திற்கு உட்பட்ட மனது/விஷயம் குறித்த பிரிவு, நேரிய நோக்கு, இயற்கைமீதான மனப்பான்மை போன்றவைகளை உள்ளடக்கி உள்ளது.

இந்த உலகப்பார்வைதான் தொழில் உலகத்தின் அதிகப்படியான சக்தி உபயோகத்திற்கும், உலக வெப்பமயமாதலுக்குக் காரணமான கார்பன் டை ஆக்சைடு அதிகமாக உருவாவதற்கும் காரணமாக இருக்கிறது.

வழக்கமான "கல்வியில் என்ன பிரச்சினை?" என்பதுதான் இங்கு நமது வினா.
நமது விவாதம் சிதறுண்ட சிந்தனைகளுக்கான மூலக் காரணத்தை அறிவதை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளது. சிந்தனையில் உருவாகும் போலியான பிரிவுகள் மற்றும் வரைமுறைகள் போன்றவைகள் தவறான செயல், தவறான புரிதல் மற்றும் சச்சரவு ஆகியவைகளுக்கு வழி வகுக்கின்றன.
வழக்கமான கல்வி என்பது கீழே குறிப்பிட்ட விஷயங்களை உள்ளடக்கியதாகும்.
மனிதனின் உணர்ச்சிகள். மெல்லுணர்வுகள், உடல் மற்றும் கலை சார்ந்த திறமைகள், மனது, உடம்பின் பிரிவுகள் இவற்றால் அறிவு பகுக்கப்படுகிறது. கார்டனர் விவாதித்தது போல இதலிருந்து நாம் தர்க்க ரீதியான, கணித பூர்வமான மற்றும் மொழியியல் மேதாவித்தனத்தின் மீதான முக்கியத்துவத்தை மற்ற நுண்ணறிவின் உதவியின்றி அறிகிறோம் என்பது வலியுறுத்தப்படுகிறது.

அறிவு என்பது அறியாமை என்பதிலிருந்து பொய்யான முறையில் பகுக்கப்படுகிறது என்பதை இது வலியுறுத்துகிறது. உதாரணத்திற்கு, அதிக அறிவு இருக்கிறது என்றால் குறைந்த அறியாமை இருக்கிறது என்று அர்த்தமில்லை. நாம் பெற்ற அறிவில் உள்ள வரையறைகள் பற்றியும், அறிந்ததிலிருந்து அறியாததைப் பிரிப்பதில் செய்யும் தவறுகளைப் பற்றியும் கிரு‘ணமூர்த்தி

அடிக்கடி பேசியிருக்கிறார். இது கற்பித்தலையும், கற்றுக் கொள்வதையும் வகுப்பறையில் குறிப்பிட்ட கால அளவுகளில் குறிப்பிட்ட நிலைக்குள் குறுகலாக்கிக் கொள்கிறது. இது வாழ்க்கையிலிருந்து கல்வியைப் பிரிப்பதினுடன் சம்பந்தப்பட்டது. இதனால் மாணவர்களுக்கு வகுப்பறையை தங்களுடைய வாழ்வுடன் தொடர்புபடுத்திப் பார்க்கக்கூடிய தன்மை குறைவாக இருக்கக் காரணமாகிறது. நல்ல வேலை அல்லது தொழில் கிடைக்கும் என்பதைத் தவிர, அதுவும் முக்கியம்தான் என்றாலும் இதைத்தவிர வேறெந்த நன்மையையும் இளைஞர்களுக்கு இது தருவதில்லை.

வழக்கமான கல்வி, ஆங்கிலம், கணிதம், வரலாறு என பல பிரிவுப் பாடங்களைக் கொண்டிருந்தாலும் அவைகள் இயற்கையான நம்முடைய வாழ்க்கைச் சம்பவங்களின் தொடர்பை பிரதிபலிப்பதில்லை. இந்த பிரிவுகளின் அடிப்படைக் குறிக்கோளின் வழித்தடத்தை சிந்தனை மறந்து விடுகிறது. இந்தப் பிரிவுகளைத் தொடர்வதில் நடைமுறையில் எந்தவித அர்த்தமும் இல்லை எனினும் இந்த பொய்யான பிரிவுகள் தவறான செய்தியைத்தான் தொடர்ந்து தெரியப்படுத்தி வருகின்றன. இவை நடைமுறைக்கு ஏற்றவை அல்ல.

மதிப்பிடுதல் - தேர்வுகள் - ஒரு குறிப்பிட்ட அளவிற்கு மட்டுமே ஒரு மாணவனின் திறமைகளைக் கணிக்க முடியும். ஆனால் தேர்வுகளில் தோல்வி என்றால் தண்டனை, வெற்றி என்றால் பரிசு போன்றவைகளின் மூலம் பயம் ஏற்படுகிறது. வரையறுக்கப்பட்ட திறமைகள் மற்றும் ஆற்றல்களின் அடிப்படையில் தேர்வாகும் மாணவர்கள் நியாயமான தகுதிக்கு மேல் ஒரு உயர் நிலையை அந்த தேர்வுகளால் அடைகிறார்கள்.

இது மனம் ஈடுபாடற்ற பணி என்ற நிலையை வேலையில் பிரிவை ஊக்குவிக்கிறது. மனப்பூர்வ ஈடுபாடு இல்லாமல் பார்க்கும் வேலையில் திறமை, சாமர்த்தியம், பேராவல் போன்றவற்றின் மூலம் பணம், அந்தஸ்து மற்றும் பாதுகாப்பு என வரையறுக்கப்பட்ட குறிக்கோள்களை மட்டுமே அடைய முடியும். இது ஒரு அழிவான வாழ்க்கை முறைக்கு வழிகாட்டும் என்பதாகவே படுகிறது. இதனால் மாணவர்கள் புதிதாக அறிந்துகொள்ளக் கூடிய ஆர்வத்தையும், மகிழ்ச்சியையும் இழந்து விடுகிறார்கள். ஆக்கப்பூர்வமான அறிவு வளர்ச்சி இதனால் இழக்கப்படுகிறது. மனப்பூர்வமாக ஈடுபடும் வேலையென்பது, தன்னிலை உணர்ந்து ஆழ்ந்த குறிக்கோளுடன் கூடிய வாழ்க்கையாகும். வாழ வேண்டி ஏற்கும் பணியால், வாழ்க்கைக்குத் தேவையான ஆழ்ந்த பண்புகள் மற்றும் உணர்ச்சிகள் வாழ்க்கைக்கு அப்பாற்பட்டு வருகிறதோ?

வழக்கமான கல்வியில் ஒருவர் செய்து முடித்த சாதனையை அளவிடக்கூடும். ஆனால், வாழ்க்கையில் எந்த ஒரு துறையிலும் ஒருவர் தனக்காக தொடர்ந்து கற்றுக் கொண்டிருப்பதை யாராலும் அளவிட முடியாது. மேலும் ஒரு வரையறுக்கப்பட்ட துறையில் பெறுகிற அறிவிற்கு கூடுதலாக மதிப்பீடு தரவும் முடியும் ஏனென்றால் அதை அளவிடவும் முடியும். அதே காரணத்தினால் அறிவார்வம் குறைத்து மதிப்பிடப்படுகிறது, ஏனென்றால் அதை அளவிட முடியாது.

கல்வி கற்பது, பள்ளி மற்றும் கல்லூரியில் முறையாகப் படித்தவுடன் முடிந்து விடுகிறது என்கிற கருத்தினால், வாழ்க்கையிலிருந்து கல்வி பிரிந்த நிலை ஏற்படுகிறது. கல்விப் படிப்புடன் வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து பயிலுதல் என்பது வாழ்க்கை முழுவதும் தொடரும் என்பதற்கான சாத்தியம் மிகவும் குறைவு. மற்றும் வழக்கமான கல்வியில் அதற்கு இடமில்லை.

இந்தப் பிரிவுகளும், கட்டுப்பாடுகளும் கல்வியுடன் ஒன்றிணைந்தது என்றும், உண்மையிலேயே உலகமும், வாழ்க்கையும் இப்படித்தான் என்று கருதும் நிலைக்கு மாணவர்களைத் தயார்படுத்தி விடுகிறன்றன.

இறுதியில், முறையான கல்வி என்பது ஆசிரியரை மறைமுகமாக பாடத்திட்டத் திலிருந்தும், வழக்கமான கல்வி பற்றிய அநுமானங்களிடமிருந்தும் விடுவித்து விடுகிறது. அதன் பின், ஆசிரியருடைய வாழ்க்கை நிலையிலும், செயல்பாடுகளிலும் ஒருவிதமான நாணயம், அக்கறை மற்றும் குதுகளிப்பும் பிரதிபலிக்கின்றன. இதன் மூலம், நீங்கள் சுற்றுப்புறச்சூழல் சிக்கலுக்கு பல நிலைகளிலும் நல்லவிதமாக பதிலளிக்கிறீர்கள் என்பதையும்வெளிக்காட்டுகிறது

# பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தியும் ஆசிரியர் தரக்கணிப்பீடும்

## School Based Teacher Development and Teacher Appraisal

ஆசிரியர் செயலாற்றுகை தரக்கணிப்பீடானது பா.ம.ஆ அபிவிருத்தியின் முக்கியமான அடிப்படையாகும். ஆசிரியர் அபிவிருத்தி தேவைகளை இனம் காண்பதற்கு ஆசிரியர் செயலாற்றுகை தரக்கணிப்பீடு அடிப்படையாக் கொள்ளப்பட வேண்டும். இது பாடசாலை அபிவிருத்தித் திட்டத்தில் முன்னுரிமை ஒழுங்கில் இணைக்கப்பட வேண்டும். ஆசிரியர் செயலாற்றுகை தரக்கணிப்பீடானது தனியாள் ஆசிரியர் விருத்திக்கும் பாடசாலை அபிவிருத்திக்கும் பயனுள்ளதாக அமையும் என்பது இதன் மூலம் உறுதிப்படுத்தப்படும். எல்லா ஆசிரியர்களும் வருடாந்த ஆசிரியர் நேர்காணலினை தமது வரிசை நிலை (Line Manager) முகாமையாளருடன் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.

இணக்கம் காணப்பட்ட ஒரு செயன்முறையின்படி விருத்தி செய்ய வேண்டிய தமது பலம், வழிகாட்டப்பட வேண்டிய பலவீனங்கள், தனிப்பட்ட மற்றும் வாண்மைத்துவ விருத்தித் தேவைகள் பற்றிக் கலந்துரையாடல், எதிர்கால இலக்குகளில் இணக்கப்பாடு காணுதல் என்பவற்றுக்காக எல்லா ஆசிரியர்களும் தமது வரிசைநிலை முகாமையாளரைச் சந்தித்தல் வேண்டும். தொடர்ந்து வரும் ஆசிரியர் செயலாற்றுகை தரக்கணிப்பீட்டின் போது இந்த இலக்குகளின் அடைவு பற்றிய மீளாய்வு இடம் பெறுவதுடன் புதிய இலக்குகள் பற்றியும் கலந்துரையாடப்படும். ஆசிரியர் செயலாற்றுகை தரக்கணிப்பீடானது பாடசாலை அபிவிருத்தித் திட்டத்தின் ஆசிரியர் அபிவிருத்தி நோக்கங்களுடன் நெருக்கமான தொடர்பைக் கொண்டிருக்கும். அத்துடன் அந்த ஆசிரியர்களின் பாடசாலைத் தேவைகளுடன் இணைந்ததாகவும் இருக்கும். ஆசிரியர் செயலாற்றுகை தரக்கணிப்பீடானது சாதகமான செயன்முறையாக அங்கீகாரம் பெற்றிருப்பதுடன் அது ஆசிரியர்கள் தமது பலவீனங்களையும் உள்ளார்ந்த திறன்களையும் பயிற்சி அபிவிருத்திக்கான ஏனைய துறைகளையும் இனம் காண்பதற்கும், இதன் மூலம் ஆசிரியர் அபிவிருத்தி இடம் பெறவும் உதவுகின்றது. ஆசிரியர் செயலாற்றுகை தரக்கணிப்பீடானது ஆற்றுகைத் திட்டமிடலிலும் (Performqnce planning) பயன்படுத்தப்படலாம். (வழிகாட்டல்கள் PSI)

ஆண்டிறுதியில் ஆற்றுகை மதிப்பீட்டு நேர்காணலின்போது மதிப்பிடுபவரும் ஆசிரியரும் முழுமையான மதிப்பீட்டுக் காலப்பகுதிக்கான ஆசிரியரின் ஆற்றுகை பற்றிக் கலந்துரையாடுவர். மதிப்பிடுபவர் குறிப்பிடத்தக்க பின்னூட்டலை ஆசிரியருக்கு வழங்குவதுடன் ஆற்றுகைத்திட்டமிடல் அமர்வுக் காலத்திற்குரிய இலக்குகளுக்கு சார்பாக அடையப்பட்ட பெறுபேறுகளை மீளாய்வு செய்வார். ஆற்றுகை மதிப்பீட்டு நேர்காணல் வேளையிலான கலந்துரையாடலை மதிப்பிடுபவர் தனது 'ஆசிரியர் செயலாற்றுகை தரக்கணிப்பீட்டு அறிக்கையை' பூரணமாக்கும் போது அறிக்கையின் உள்ளீடாகப் பயன்படுத்துவார். ஆண்டிறுதியில் பாடசாலை முகாமைத்துவக் குழு (SMT) பாடசாலையிலுள்ள எல்லா ஆசிரியர்களினதும் ஆற்றுகையை அவர்களின் வகிபாகத்தின் அடிப்படையில் கூட்டாக மதிப்பீடு செய்வார்." (PSI மீதான வழிகாட்டல்கள்)

ஆற்றுகை திட்டமிடல் ஆண்டின் ஆரம்பத்தில் அல்லது ஆசிரியர் ஒருவர் பணியைப் பெற்றுக்கொள்ளும் போது இடம் பெறும். மதிப்பிடுபவர் ஆசிரியரை இணக்கப்பாடு காணப்பட்ட பொருத்தமான நேரத்தில் சந்தித்து கலந்துரையாடி இணக்கப்பாட்டுடனான வேலையிலக்குகள், எதிர்பார்ப்புகள் என்பவற்றை அமைத்துக்கொள்வார். ஆற்றுகைத் திட்டமிடல் அமர்வில் மதிப்பிடுபவரும் ஆசிரியரும் பின்வருவன பற்றி கலந்துரையாடி இணக்கம் காண்பர்.

1 எதிர்வரும் ஆண்டுகளுக்கான இலக்குகளும் எதிர்பார்க்கும் பெறுபேறுகளும்

2 ஆசிரியருக்கான தேர்ச்சிகளும் அவற்றிற்குரிய இலக்கு மட்டங்களும்.

3 ஆசியருக்கான பயிற்சி மற்றும் அபிவிருத்தித் திட்டங்கள்.

ஆற்றுகைப் பயிற்சியானது ஆண்டு முழுவதும் இடம்பெறும். இதன் போது ஆசிரியருக்கான பின்னூட்டலை மதிப்பிடுபவர் முறைசார் மற்றும் முறைசாரா அடிப்படைகளில் வழங்குவார். ஆசிரியர் நோக்கல் எந்தவொரு ஆசிரியர் செயலாற்றுகை தரக்கணிப்பீட்டு முறையினதும் அடிப்படைப் பகுதியாகும். வகுப்பறையினுள் என்ன நடைபெறுகின்றது என்பது பற்றிய முதல் தர அறிவில்லாமல் மதிப்பிடப்படுபவரின் கற்றல் கற்பித்தல் விளைவுகளைப் பற்றி கருத்து வெளியிடுதல் மதிப்பீடு செய்பவருக்கு ஒப்புடையதாகாது. ஆண்டின் நடுப்பகுதியில் மதிப்பிடுபவர் நடு ஆண்டு மீளாய்வை ஆசிரியருடன் நடாத்துவார். இந்த அமர்வில் மதிப்பிடுபவர் ஆண்டுகளுக்காக உருவாக்கப்பட்ட இலக்குகள் எதிர் அடைவுகள் முன்னேற்றங்கள் என்பன பற்றி முறைசார் ரீதியில் மீளாய்வார். மதிப்பிடுபவர் ஆசிரியரின் ஆற்றுகை பற்றிய பின்னூட்டலை வழங்குவதுடன் பெறப்பட்ட பயிற்சியின் வினைத்திறனை மீளாய்வு செய்து ஆசிரியருக்கான அபிவிருத்தித் திட்டங்கள் பற்றி கலந்துரையாடுவார்.

ஆற்றுகை மதிப்பீடு ஆண்டிறுதியில் இடம் பெறும். மதிப்பிடுபவர் ஆண்டுக்கான ஆசிரியரின் ஆற்றுகையை முறைசார் ரீதியில் மதிப்பிடுவதற்கு அவருடன் ஆற்றுகை மதிப்பீட்டு நேர்காணலை நடாத்தும் போது ,துஷ்டம்பெறும். இவ்வேளை அவரின் உள்ளார்ந்த திறன் மதிப்பிடப்பட்டு மதிப்பீட்டினூடாக தொடர்ந்து முன்னெடுக்கப்படும். மதிப்பீடு செய்யப்படுபவர் ஆற்றுகை மீளாய்வை வளங்கள் பயிற்சி தொடர்பாக தமக்கு ஏற்படும் பிரச்சனைகளை எழுப்பும் சந்தர்ப்பமாக, தனைப் பார்க்க முடியும். வினைத்திறன் மிக்க மதிப்பீட்டு முறையானது ஆசிரியர்களுக்கு வலுவூட்டுவதாகும்.

ஆண்டிறுதி ஆற்றுகை மதிப்பீட்டு நேர்காணலில் மதிப்பீடு செய்பவரும் ஆசிரியரும் மதிப்பீட்டு காலம் முழுவதற்குமான ஆசிரியரின் ஆற்றுகை பற்றி கலந்துரையாடுவார். மதிப்பிடுபவர் குறிப்பிட்டத்தக்க பின்னூட்டலை. ஆசிரியருக்கு வழங்குவதுடன் ஆற்றுகைத் திட்டமிடல் அமர்வு காலத்திலான இலக்குகளுக்கு சாதகமாக அடையப்பட்ட பெறுபேறுகளை மீளாய்வு செய்வார். ஆற்றுகை மதிப்பீட்டு நேர்காணல் வேளையிலான கலந்துரையாடலை மதிப்பிடுபவர் தமது ஆசிரியர் மதிப்பிட்டு அறிக்கைகளை பூரணப்படுத்தும்போது அதன் உள்ளீடாக பயன்படுத்துவார். ஆண்டிறுதியில் SMT பாடசாலையிலுள்ள எல்லா ஆசிரியர்களினதும் ஆற்றுகையை அவர்களின் வகிபாகத்தின் அடிப்படையில் கூட்டாக மதிப்பீடு செய்வார். ஒவ்வொரு பகுதித்தலைவரும் பிரதி அதிபரும் பாடசாலையில் இதனை ஒத்த செயன்முறையான ஆண்டு மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்படுவர். இது போலவே அதிபரும் ஆண்டுதோறும் கோட்ட, வலய அல்லது மாகாண அலுவலர் ஒருவரால் மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்படுவார்.

ஆசிரியர் செயலாற்றுகை தரக்கணிப்பீட்டுச் செயன்முறையானது பாடசாலை ஆசிரியர்களால் அமைக்கப்பட்ட பரந்த நோக்குகளுடன் தனியாள் மற்றும் குழு ஆற்றுகைகளை இணைப்பதனூ டாக நிறுவனத்தின் ஆற்றுகையை உச்ச அளவு அடையத்தக்கதாக வடிவமக்கப்பட்ட ஒரு செயன்முறையாகும்.

ஆசிரியர் செயலாற்றுகை தரக்கணிப்பீட்டின் பயன்கள், நன்மைகள் - சம்பள உயர்வுகள் இடமாற்றங்கள் பதவி உயர்வுகள், பயிற்சி வேலைத்திட்டங்கள் செயலமர்வுகள் என்பவற்றிற்கு ஆசிரியர்களைத் தெரிவு செய்தலுக்கும், புலமைப்பரிசில் வழங்குதல் மிக முக்கியமாக பா. ம. ஆ அபிவிருத்தி வேலைத்திட்டங்களை திட்டமிடலும் வடிவமைத்தலும் போன்ற விடயங்கள் தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்வதற்கும் அடிப்படையாக ஆசிரியர் மதிப்பீட்டை பயன்படுத்த முடியும்.

ஆற்றுகை பற்றிய பின்னூட்டலும் தொடர்பாடலும் சீரான முறையில் இடம்பெறும் நிறுவன கலாசாரம் ஒன்றை அடைவதற்கு உதவும். அதாவது பணிகள் இடம்பெறும் போதே அதிலிருந்து வேறுபடுத்த முடியாத ஒரு பகுதியான மதிப்பீட்டை ஆசிரியர்கள் ஓர் அச்சுறுத்தலாக நோக்கக் கூடாது. இவை பாடசாலை மேம்பாட்டுத்திட்டம் தொடர்பாகவும் சுய அபிவிருத்தி தொடர்பாகவும் அவர்களால் வழங்கப்படும் கருத்து வெளிப்பாடாகும்.



ஆசிரியர் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல் மற்றும் தனியாள்களின் தொழில் திட்டங்களை தாபித்தல் மூலம் வாண்மை விருத்திக்கு தொடர் பின்னூட்டல் வழங்கி உதவுதல். இயல்பான விளைவாக எழும் நிறுவனத்தின் சுய மதிப்பீட்டுக்கு இது அடித்தளமாக அமைகின்றது.
வகுப்பறையிலும் தலைமைத்துவ மட்டத்திலும் தேர்ச்சி வினைத்திறன் ஆற்றுகை என்பவற்றில் உயர் தரத்தை உறுதிப்படுத்துவதனூடாக நிறுவனம் பற்றி பொது மக்கள் நம்பிக்கையை அதிகரிக்கிறது. ஆசிரியர் செயலாற்றுகை தரக்கணிப்பீட்டுட்டு அம்சங்கள் தனியாள் தரக்கணிப்பீட்டை விட நிறுவன மதிப்பீடு, மேம்பாடு என்பவற்றில் அதிக கவனம் செலுத்துகின்றது.

இத்திட்டம் தொடர்ச்சியான சுயமதிப்பீட்டினூடாக பாடசாலை முன்னேற்றத்திற்கு உதவுகின்றது. முகாமைத்துவம் மற்றும் இடைநிலை முகாமைத்துவத்துடன் ஆசிரியர்களின் ஆககூட்டான உறவுமுறையை விருத்தி செய்வதுடன் வாண்மையாளரை விருத்தியாக்கும் முக்கிய கூறாக இத்திட்டம் உள்ளது.
இதன் அமுலாக்கம் தனியாள் விருத்தியுடன் நிறுவன முகாமைத்துவம் நோக்கியதும் பாடசாலையின் கூட்டிணைந்த நோக்கங்களின் அடைவுகளையும் மையமாகக் கொண்டது.

எல்லா மட்டத்திலுமுள்ள ஆசிரியர்கள் இதனை சிறந்த சந்தர்ப்பமாக உணர்ந்து ஆற்றுகை மேற்கொள்வதற்கும் ஆதரவையும் ஊக்குவிப்பபையும் வழங்குவதற்குமான சந்தர்ப்பமாக நோக்குவதுடன் ஆசிரியர்கள் பாடசாலை மட்ட கற்றலையும், அபிவிருத்தி சந்தர்ப்பங்களையும் பொறுப்பேற்பர்.
பாடசாலை மேம்பாட்டுத்திட்டத்தினையும் அதன் இலக்குகளையும் அடைவதற்கான தனி நபரது பொறுப்புக்கள் இதன் முலம் இணைக்கப்படுகின்றது.

ஒவ்வொரு ஆசிரியரின் ஆற்றுகை மதிப்பீட்டுக்கும் இணக்கம் காணப்பட்ட இலக்குகளும் விளைவுகளும் அடித்தளமாக அமைகிறது. இதன் மூலம் பாடசாலை தனது இலக்குகளை அடைய உதவுகிறது.

**நன்றி.**

**ஆய்வு நூல். கல்வி அமைச்சு**
**பாடசாலை மட்ட அபிவிருத்தியும் தரக்கணிப்பீடும்**

# செயலுபாயத் தலைமைத்துவமும் செயலுபாயத் தலைவர்களும்

**செயலுபாயத் தலைமைத்துவம்**

செயலுபாயத் தலைமைத்துவத்தின் பல்வேறு வரைவிலக்கணங்கள் உசாத்துணைகளில் உள்ளன.

செயலுபாயத் தலைமைத்துவம் பின்வருமாறு வரைவிலக்கணப்படுத்தப்படும்:

அமைப்பிற்கு அல்லது அமைப்பின் பகுதியொன்றிற்குச் செயலுபாயத் தொலைநோக்கு ஒன்றினைத் தெரிவித்து ஏனையோரும் அத் தொலைநோக்கினை முயன்று பெறுவதற்கு ஊக்குவித்து இணங்கவைக்கும் தலைவர் ஒருவரின் உள்ளார்ந்த ஆற்றல். (க்ரொங்கர், 1999)

பணியாளர்முகாமைத்தவத்திற்குச் செயலுபாயத்தினைப் பயன்படுத்தல். இதுவே அமைப்பின் உறுப்பினர்கள்மீது செல்வாக்குச் செலுத்தவும் அமைப்பினுள் மாற்றங்களைக் கொண்டுவரு வதற்கு மான உள்ளார்ந்த ஆற்றலாகும்
(மெல்சர் மற்றும் கேர்ஸ்ஸ்னர், 1988)

அமைப்பு ஒன்றின் வளர்ச்சிக்கும் வெற்றிக்குமான தொலை நோக்கினையும் மார்க்கத் தினையும் வழங்குதல்
(சிம்ப்ஸன், 1995)

பணியாளரை முகாமைத்துவம் செய்வதற்குச் செயலுபாயத்தினைப் பயன்படுத்தல்
(தொம்ஸன், 1996)

**1. செயலுபாயத் தலைவர்களின் வகிபங்கு என்ன?**

செயலுபாயத் தலைவர்கள், நிறுவனக்கட்டமைப்பினை உருவாக்கி, வளங்களை ஒதுக்கி, செயலுபாயத் தொலைநோக்கினைத் வெளிப்படுத்துவர். செயலுபாயத் தலைவர்கள், மிகக் கடினமான பிரச்சினைகளின் செல்வாக்கு மிகுந்த தெளிவற்ற சூழலிலும் அத்துடன் வெளிப்புற அமைப்புக்கள் காரணிகளின் ஆதிக்கத்தினால் ஏற்படும் சிக்கலான சூழலிலும் பணியாற்றுவர்.
செயலுபாய விளைதிறனே செயலுபாயத் தலைமைத்துவத்தின் பிரதான குறிக்கோளாகும். பணியாளர்கள் தாம் பணியாற்றும் சந்தர்ப்ப சூழல்களுக்கமைய, நிறுவனத்தின் தேவைகளை முன்கூட்டியேதெரிவிக்கக்கூடியதான சூழலை விருத்தி செய்வதே செயலுபாயத் தலைமைத்துவத்தின் இன்னொரு நோக்காகும். நிறுவனத்தின் பணியாளர்கள் தமது சொந்தக் கருத்துக்களைப் பின்பற்றுமாறு செயலுபாயத் தலைவர்கள் ஊக்குவிப்பர். இத்தலைவர்கள், நிறுவனத்திற்கு மிக்க மேலான செயலாற்றலைப் பெறுவதற்காக, விளைதிறன் மற்றும் தரம்வாய்ந்த பணியாளர்களை ஊக்குவிப்பதற்கு வெகுமதி மற்றும் சன்மானம் வழங்கும் முறைமைகளை பெரிதும் பயன்படுத்துவர். செயலுபாயத் தலைவர்கள், பணியாளரை அச் சுறுத்திக் கொடுமைப்படுத்தாது அவர்களுக்கு வலுவளிக்கவும் உற்சாகப்படுத்தவும் வல்ல தலைமைத்துவ நுட்பங்களைப் பயன்படுத்துவர்.

சமூகத் தலைவர்கள் மற்றும் நிறுவனங்களின் தலைவர்களைப் போன்றே, செயலுபாயத்தலைவர்களும், தகவல்களை விரைவாக முறைப்படுத்திப், பூரணமற்ற தரவுகளின் அடிப்படையில் மாற்றுவழிகளை மதிப்பிட்டு, தீர்மானங்களை மேற்கொண்டு, ஆதரவினைப் பெற்றுக்கொள்வர். சமூகத் தலைவர்கள் மற்றும் நிறுவனங்களின் தலைவர்களது தீர்மானங்களைவிட செலுபாயத் தலைவர்களின் தீர்மானங்கள் எவ்வகையிலும் அநேக மக்களைப் பாதிக்கும், அதிக வளங்களைக்கு வாக்குறுதியளிக்கும், இடப்பரப்பு காலம் இரண்டிலும் மிகப் பரவலான விளைவினைக் கொண்டிருக்கும். செலுபாயத் தலைவர்கள், அவர்களது கருத்துக்களுக்கான முழுப்பயன்களையும் அவர்களது காத்திருப்புக் காலத்தில் அநேகமாகக் காண்பதில்லை. திட்டமிட்டு, தயாரித்து, செயற்படுத்துவதற்கான அவர்களது முன்னெடுப்புக்கள் பல வருடங்களாகலாம்.

தனிநபர் ஒருவர் தனது குறிக்கோள்களையும் இலக்குகளையும் அடைய உதவுவதற்கான புத்தாக்க ஆற்றல், புலனாற்றல், திட்டமிடல் பற்றியதே நடைமுறைச் செயலுபாயத் தலைமைத்துவமாகும்.

இத்தலைமைத்துவத்திற்கு, பணிசெய்யும் சூழலினை முன்னுணர்ந்து பூரணமாகப் புரிந்து கொள்ளும் உள்ளார்ந்த ஆற்றல் தேவைப்படுகின்றது. விடயங் களைப் பரந்த நோக்கில் காண்பதற்கு உள்ளார்ந்த ஆற்றலும் புலன்களால் அறியக்கூடிய தன்மையும் இதற்குத் தேவைப்படுகின்றது. முடிவாகச் சொல்வ தானால், செயலுபாயத் தலைவர்கள் தொலை நோக்கினை உருவாக்குவோராகவும், தொலை நோக்கினை வெளிப்படுத்துவோராகவும், தொலை நோக்கினை பேரார்வத்துடன் கொண்டிருப்போராகவும், பெறுபேறுகளை அடையுமுகமாக விடாமுயற்சியுடன் அவற்றை செலுத்திச் செல்வோராகவும் இருப்பர்

**2. செயலுபாயத் தலைவர்களின் சிறப்பியல்புகளும் குணாம்சங்களும்**

**அ. கருணை**

செயலுபாயத் தலைவர்கள், அவர்களுக்குக் கீழ் பணிபுரிவோரின் கருத்துக்களையும் உணர்வுகளையும் அவசியம் புரிந்துகொள்வதுடன் அவர்களைக் கவனத்திற்கொண்டு தீர்மானங்களை இயற்றுதல் வேண்டும். உள்ளுணர்வால் அறியப்பெற்ற திறன்கள் அவர்களிடம் உண்டு. கருணையை வெளிப்படுத்தும் பாடசாலை அதிபர்கள் தம்முடன் பணியாற்றும் ஆசிரியரின் நோய்வாய்ப்பட்டுள்ள பிள்ளையின் உடல்நலத்தைப்பற்றி விசாரிப்பர் அல்லது காயப்பட்டுள்ள மாணவர் ஒருவரின் மேல் கரிசனையாயிருப்பர்.

**ஆ. தன்னடக்கம்**

செயலுபாயத் தலைவர்கள், அவர்களது கவனத்தைத் திசைதிருப்புகின்ற, குழப்புகின்ற, மனோநிலைகள் ஆர்வங்களினின்றும் தம்மைக் கட்டுப்படுத்தக்கூடிய உள்ளார்ந்த ஆற்றலைக் கொண்டிருக்க வேண்டும். அவர்கள் செயற்படுமுன்பு சிந்திக்கத் தக்கவர்களாக இருக்கவேண்டும். சவாலாகவுள் காட்சிப்புலம் ஒவ்வொன்றிற்கும் பங்களிப்பதும் மறைந்துள்ளதுமான காட்சிப்புலங்களைக் காண்பர். தன்னடக்கத்தினை பேணும் பாடசாலை அதிபர்கள் தம்முடன் கோபத்துடன் தவறானவகையிற் பேசும் பெற்றோரின் முன்பு அமைதியாக இருப்பதுடன் அவர்களுடன் சாந்தமாகவும், மெதுவாகவும் தர்க்கரீதியாகவும் பேசுவார். தினசரி ஏற்படும் பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்கும் பொழுது சக ஊழியர்களிடம் கூச்சலிட்டு அல்லது அவ மரியாதையாக நடக்கமாட்டார்.

**இ. சமூகத் திறன்கள்**

செயலுபாயத் தலைவர்கள், தோழமை மற்றும் சிநேகம் உள்ளவர்களாக இருத்தல் வேண்டும். அவர்களது தலைமைத்துவப் பாணி மக்களுக்கு மகிழ்வூட்டுவதாலேயே மக்கள் அவர்களைப் பின் பற்ற விரும்புவர். தோழமையுள்ள அதிபர்கள் சகஊழியர்களது பொது விருந்துபசாரங்களிற் பங்குபற்றுவதுடன் சமூகத்திலுள்ள பேற்றோருடனும் பேசிப்பழகுவார்.

**ஈ. சுய விழிப்புணர்வு**

செயலுபாயத் தலைவர்கள், தமது மனநிலைகள் மற்றும் உணர்ச்சி வேகங்களையும் அத்துடன் மற்றவர்மீது இவை ஏற்படுத்தும் தாக்கத்தினையும் புரிந்துகொள்ளும் உள்ளார்ந்த ஆற்றல் மிக்கவர் களாக இருத்தல் வெண்டும்

**ஏ. விசுவாசம்**

வினைத்திறனும் விளைதிறனுமிக்க தலைவர்கள் தமது தொலைநோக்கிற்கான விசுவாசத்தை தமது சொல்லிலும் செயலிலும் வெளிப்படுத்துவர். அதிபர்கள் தமது பணியாளர்களிடமும் மாணவர்களிடமும் விசுவாசமாக இருப்பர். இவ்வதிபர்கள் மாணவர்களை முதன்மைப் படுத்துவதுடன், பாடசாலையின் நன்மை கருதியே அனைத்தும் செய்யப்படுவதனை உறுதிசெய்து கொள்வர்.

**ஐ. அறிவினைப் புதுப்பித்துக்கொள்ளல்**

வினைத்திறனும் விளைதிறனுமிக்க தலைவர்கள், நிறுவனத்திற்குள்ளே நடைபெறுவன அனைத்தையும் பற்றிய தமது அறிவினைப் புதுப்பித்துக்கொள்வர். முறைசார்ந்ததும் முறைசாராததுமான பல்வேறு தகவல் மூலங்கள் அவர்களிடம் இருக்கும். தொடர்பாடல் என்பது இதற்கான திறவுகோலாகும். வெற்றிகரமான அதிபர்கள் கற்பவராக இருப்பர். இவர்கள் தமது செயற்பாட்டை மேம்படுத்துவதற்காகப் போதனாமுறை, பாடவிதானம், மற்றும் தலை மைத்துவம் சார்ந்த விடயங்களை இடைவிடாது வாசித்துக்கொண்டிருப்பர்



**ஒ. மதிநுட்பத்துடன் அதிகாரத்தைப் பயன்படுத்தல்**

செயலுபாயத் தலைவர்கள், தமது அதிகாரத்தை மிக்க விவேகத்துடன் பயன்படுத்துவர். அதிகாரம் சார்ந்த விடயங்களை மிகத்திறனுடன் கையாளவேண்டும். அத்துடன் தமது கருத்துக்களைப் பலவந்தமாகத் திணிப்பதைவிட்டு அக் கருத்துக்களுக்கு ஏனையோரது உடன்பாட்டினை எட்டுவதற்கு முயலவேண்டும். இவர்கள் செல்வாக்குச் செலுத்துவதில் வல்லவர்கள். மக்களிடமிருந்து மிகச்சிறந்த பெறுபேறுகளைப் பெறுவதற்காக தமது அதிகாரத்தினை எப்போது, எப்படிப் பயன்படுத்த வேண்டுமென்பதனை திறமைவாய்ந்த அதிபர்கள் அறிந்திருப்பர். அவர்களது அபிப்பிராயங்களுக்காக அவர்கள் மதிக்கப்படுகிறார்கள்.

**ஓ. விசாலமான பார்வையினையும் கண்ணோட்டத்தையும் கொண்டிருப்பர்**

செயலுபாயத் தலைவர்களிடம், குறுகியநோக்குடைய விசேட தன்மைகள் சார்பான திறன்கள் காணப்படமாட்டா ஆனால் பல விடயங்கள் தொடர்பாக ஓரளவு அறிவினைக் கொண்டிருப்பர். செயற்றிறனுள்ள அதிபர்கள் எப்பொழுதும் புதிய கருத்துக்களைத்தேடி அடிவானத்தையே நோக்குவர். உலகத்தின் பெரிய படக்காட்சி அவர்கள் முன்னிருக்கும். பெரிய விடயங்கள் எவ்வாறு தமது பாடசாலையில் விளைவினை ஏற்படுத்தும் எனப் புரிந்திருப்பர். இவர்கள் வாய்ப்புக்களைத்தேடிக் கொண்டிருப்பர்

**ஔ. செயற் தூண்டல் அல்லது சுயஊக்குவிப்பு**

செயலுபாயத் தலைவர்கள், அவர்களது செயற்பாட்டில் அதிகாரம் பணம் அனைத்தையும் கடந்த பேரார்வமுள்ளவர்கள். சக்தியுடனும் உறுதிப்பாட்டுடனும் இலக்குகளை அடைவதற்கான முயற்சியும் அத்துடன் சுயஊக்கமும் அவர்களிடத்திற் காணப்படும். மாணவர்களுக்கும் ஒரு பிள்ளையினது முற்றுமுழுதான அபிவிருத்தியை மேம்படுத்துவதற்கும் திறமைவாய்ந்த அதிபர்கள் இங்குள்ளனர். ஒவ்வொரு மாணவரினதும் வெற்றியினைக் கண்டு தமது பணியில் ஊக்கம் கொள்வார்கள்

**3. பொழிப்புரை**

எனவே பாடசாலையின் முழுமையான அபிவிருத்திக்கும் மேம்பாட்டிற்கும், பாடசாலைகளில் செயலுபாயத் தலைமைத்துவம் இன்றியமையாததாகிறது. செயலுபாயத் தலைவர்கள், அவர்களது மாணவர்கள் ஒவ்வொருவரினதும் கற்றலை இடைவிடாது மேம்படுத்தவதற்கான வாய்ப்புக்களைத் தேடுவர். உலகத்தின் பெரிய படக்காட்சி அவர்கள் முன்னிருக்கும். இலக்குகளை அடைவதனை இயலச்செய்யத்தக்க திட்டங்கள் அவர்களிடம் இருக்கும்.

**1. பாடசாலை மட்ட முகாமைத்துவக் கோட்பாடுகள் மற்றும் அதிகாரங்களை விளங்கிக் கொள்ளல்.**

உள்ளகப் பலப்படுத்தும் நிபந்தனைகளில் முதலாவதாக இடம்பெறுவது ஒரு பாடசாலைக்குள்

நிலைத்திருக்கின்ற பாடசாலை மட்ட முகாமைத்துவக் கோட்பாடுகள் மற்றும் அதிகாரங்கள் பற்றி ஆரோக்கியமாக விளங்கிக் கொள்ளல் ஆகும். பாடசாலைச் சமுதாய அங்கத்தவர்கள் மாணவர் கற்றலை அதிகரிக்கின்ற பாடசாலை மட்ட முகாமைத்துவத்தை விளங்கிக் கொள்ளல், அதேபோன்று இப்பணிகளுக்கான நேரம் மற்றும் நிதித்தேவைகளை விளங்கிக் கொள்ளல் போன்றவற்றையும் இது உட்படுத்தும். (கொட்டன் 1992) பாடசாலைச் சமுதாயத்துக்கு முக்கியமான மாற்றங்களை உணர்ந்து கொள்ளும் தேவையுள்ளது. அதாவது, மத்திய, மாவட்ட அதிகாரிகள் பாடசாலை நிர்வாகம் உத்தியோகத்தர் குழு, பெற்றோர், சிரேஷ்ட மாணவர்கள் பாடசாலைச் சமுதாய அங்கத்தவர் ஆகியோரின் வகிபாகங்கள்மேல் பாடசாலை மட்ட முகாமைத்துவம் கொண்டுள்ள தாக்கத்தைப் பாடசாலைச் சமுதாயம் உணர்ந்திருக்க வேண்டிய தேவை உள்ளது. பாடசாலை மட்ட முகாமைத்துவ ஆரம்ப கட்டங்களில் பாடசாலைச் சமுதாயம் விளைதிறனாகப் பிரதிநிதித்துவத்ததை அமுலாக்கல் பாடசாலை முழுவதிலும் ஒற்றுமையும் பொறுப்புமுள்ள தீர்மானம் மேற்கொள்ளல் கட்டமைப்பை உருவாக்குதல், முகாமிக்கக் கூடிய பல முதன் நிலைச் செயற்பாடுகளை இனங்காண்பதற்கான உபாயங்களை விருத்தியாக்கல் போன்றவற்றின் முக்கியத்துவத்தை விளங்க வேண்டியுள்ளது. இறுதியாக கொட்டன் (1992) பரிந்துரைப்பதாவது:

பாடசாலைச் சபையின் வகிபாகம், செயற்பாடுகள் பற்றிய தெளிவான அச்சொட்டாக நிரூபிக்கப்பட வேண்டும். அத்தோடு கற்பித்தல் முறைகள் மற்றும் கலைத்திட்ட சீர்திருத்தம் மற்றும் புதுப்பித்தல் ஊடான மாணவர் கற்றல் மேம்பாட்டில் ஓர் உறுதியான அழுத்த அடிப்படையால் உபாய முகாமைத்துவ தீர்மானங்களுக்கு அத்திவாரமிடப்பட வேண்டும் (கொட்டன்:14)

வொல் செற்றர் (1996) அவர்களும் ஒழுங்கமைப்பு ஆயத்த நிலையில் இவ்வாறான பன்முகப்படுத்தப்பட்ட மாதிரியுள் உட்பட்டிருப்பதற்கு பாடசாலை மட்ட முகாமைத்துவம் பற்றிய விளக்கமானது ஓர் இன்றியமையாத தீர்வு எனப் பரிந்துரைக்கின்றார்.

**2. பாடசாலையின் ஒழுங்கமைப்பு ஆயத்த நிலை**

ஒழுங்கமைப்பு ஆயத்த நிலையின் கணிப்பீடானது நிலைத்திருக்கும் உள்ளக நிபந்தனைகளின் மதிப்பீட்டுடன் சம்பந்தமானது. அல்லது மாணவர் வெளியீடுகளை விளைதிறனாக மேம்படுத்துவதற்கு பாடசாலை மட்ட முகாமைத்துவத்துக்கு பாடசாலையின் உள்ளேயே இயலும் விருத்தியுறுவது. மக்கென்சி (1991) பாடசாலை மட்ட முகாமைத்துவத்துக்காக ஓர் அமுலாக்கத் திட்டம் பற்றி வாதிடுவதாவது:

பாடசாலைகள் ஆழ் நீரில் அமிழ்தல் அல்லது பயங்கர சிகரங்களுக்கு ஏறுதலுக்கு முன்னர் போதுமான தாங்கும் தேர்ச்சியை அடைதலுக்கான தெளிவான தர எல்லைகளை அமைக்கின்றன" (மக்கென்சி 1991:1)

ஒரு பாடசாலைக்கு தனது தொடருறு மாற்றங்களை முகாமிக்கும் மற்றும் தொடர்சியான பாடசாலைப் புதுப்பித்தலை உயர்த்தும் கொள்ளளவை அதிகரிக்கின்ற மாதிரிகளைக் கொண்டிருக்கும் நேரத்தின் போது, பாடசாலை மட்ட முகாமைத்துவ ஒழுங்கமைப்பு ஆயத்த நிலை உண்மையாக்கப்படுமென நூலாய்வு பரிந்துரைக்கின்றது. கால்ட் வெல் மற்றும் ஸ்றொல்ப் stolp (1994) இருவரும், விளைதிறனான பாடசாலை மட்ட முகாமைத்துவ அமுலாக்கம் மற்றும் மாறும் முகாமைத்துவ மாதிரிகளின் இருக்குந் தன்மை மற்றும் ஆரோக்கியமும் பலமும் வாய்ந்த பாடசாலைக் கலாசாரம் போன்றவற்றிற்கு இடையிலான உறவுகளை வாதாடுகின்றார். ஸ்றொல்ப் மேலும் பரிந்துரைப்பதாவது:

ஆரோக்கியமும் பலமும் வாய்ந்த பாடசாலைக் கலாசாரம் ஆகியன, அதிகரித்த மாணவர் சாதனைகள் மற்றும் ஊக்கம் மற்றும் ஆசிரியர் பயன்தருதன்மை, திருப்தி போன்றவற்றில் ஒன்றுக்கொன்று சம்பந்தப்படுகின்றன (ஸ்றொல்ப் 1994: 1)

இவ்வாறு, மாணவர் வெளியீடுகளை மேம்பாடுறச் செய்யும் வெற்றிகரமான பாடசாலை மட்ட முகாமைத்துவ அமுலாக்கத்துக்கான ஒரு பாடசாலையின் ஆயத்த நிலையானது, பாடசாலை மட்ட முகாமைத்துவக் கோட்பாடுகள் பற்றிப் பாடசாலைச் சமுதாயம் கொண்டுள்ள விளக்கம், ஒரு பாடசாலையினுள் மாற்றத்தை முகாமிக்கும் மாதிரிகளின் இருக்கும் தன்மை, பாடசாலையின் புதுமைப்படுத்தலையும் விளைதிறனையும் பலப் படுத்தி உயர்த்தும் ஒரு கலாசாரம் ஆகியவற்றில் தங்கியுள்ளது என்று நூலாய்வு அறிவிக்கின்றது.

அவ்வாறானால் வெற்றிகரமான பாடசாலை மட்ட முகாமைத்துவ அறிமுகத்துக்கான அதன் ஆயத்த தன்மையை அதிகரிக்கும் மற்றும் மாணவர் வெளியீடுகளில் மேம்பாட்டை ஏற்படுத்தும் பாடசாலைக் கலாசாரத்தினுள் தங்கியிருக்க வேண்டிய அல்லது விருத்தியுற வேண்டிய மூலகங்கள் எவை? தூர நோக்குள்ள தலைமைத்துவம், பகிர்ந்த, சமமான தலைமைத்துவ சுற்றுச் சூழல், விளைதிறனும் இசைவாக்கமும் உள்ள தகவல் தொடர்பாடல், தொழில் வாண்மை விருத்திக் கலாசாரம், வெகுமதிகள், அங்கீகாரம் மற்றும் ஒப்புக் கொள்ளுதல் இருக்குந் தன்மை, நம்பகத்தகு சமுதாய ஈடுபாடு மற்றும் பயனுள்ள பங்குபற்றல், ஒரு வகை கூறுதல், கட்டமைப்பு மற்றும் பாடசாலை மட்ட பங்குபற்றல் உள்ளக மேற்பார்வை முறைகள் போன்றனவற்றை இவை உள்ளடக்குமென நூலாய்வு விமர்சனம் பரிந்துரைக்கின்றது.

### 3. தூர நோக்குள்ள தலைமைத்துவம்

நூலாய்வானது மாணவர் வெளியீடுகளின் மேம்பாட்டிற்கான பாடசாலை மட்ட முகாமைத்துவத்துக்கு சக்தி கொடுக்கும் மிக முக்கிய மூலகங்களில் ஒன்றாக தூரநோக்குள்ள தலைமைத்துவத்தை இனங்காண்கிறது. ஸ்றொல்ப் (1994) வாதிடுவதாவது:

ஒரு புதிய சவாலுக்கு ஏற்ற நோக்கொன்றைப் பின்பற்றக் கூடிய அதிபரொருவர் பலமான கலாசாரத்தைக் கட்டி யெழுப்புவதில் மிக வெற்றி பெறுவார் (ஸ்றொல்ப் 1994:2)

பாடசாலை மட்ட முகாமைத்துவத்தில் பெரும் சவாலை எதிர்நோக்கும் நேரத்தில் இது மிக முக்கியத்துவம் பெற்றதாகும். இச்சந்தர்ப்பத்தில் தலைவரால் பாடசாலைச் சமுதாயத்தின் அபிலாசைகள், விழுமியங்கள், நம்பிக்கைகள் அரவணைத்துக் கொள்ளத்தக்க ஒரு கூட்டு நோக்கினை செயற்படுத்தக் கூடியதாக இருக்க வேண்டும். இது மாணவரின் கற்றல் வெளியீடுகளின் மேம்பாட்டை நோக்கிக் குவியப்படுத்துவதாக இருக்கும். இவ்வாறு செய்வதால் அனைத்து பாடசாலை நடைமுறை கொள்கைள் மற்றும் முகாமைத்துவத்தை ஒழுங்கு வரிசைப்படுத்தி, இக் கூட்டு நோக்கின் உயர்ச்சியை நோக்கி நெறிப்படுத்துவதைப் அதிபர்கள் உறுதிப் படுத்த முடியும். அனைத்து நடைமுறை, கொள்கை மற்றும் முகாமைத்துவத்தின் தரத்தை உறுதிப்படுத்தும் செயற்படுகையில் நோக்கானது தரக்குறியாக விளங்குகின்றதென்று நூலாய்வு பரிந்துரைக்கின்றது. அதிபரால் தான் பொறுப்பேற்கும் அனைத்திலும் விழுமியங்கள் மற்றும் நம்பிக்கைகளும் பிரதி பலிப்பனவாக இருக்க வேண்டுமென ஸ்ரெல்ப் மேலும் பரிந்துரைக்கின்றார்.

மாணவர் வெளியீடுகளின் மேம்பாட்டுக்கான பாட சாலை மட்ட முகாமைத்துவத்துக்கு சக்தி கொடுக்கும் மூலகமான தூர நோக்குள்ள தலைமைத்துவம் உள்ளதென்பதன் முக்கியத்துவம் கால்ட் வெல் அவர்களாலும் ஆதரிக்கப்படுகின்றது. (1998) கால்ட் வெல் நம்பிக்கை கொள்வதாவது:

தொடருறு மாற்றத்தை முகாமிப்பது மற்றும் முன்னுரிமைகளை அமைத்துக் கொள்வதில் அவர்களுக்கிருக்கும் கொள்ளளவால், பெரிதாகப் படுத்திக் காட்டப்படும் பிரச்சினைகளுக்கு, கலாசார மற்றும் கல்வி ரீதியாகப் பதிலிறுக்க கூடியவர்களாகின்றனர். பெரிய கீறல் கிழிவுகளைப் பகுத்துணர்ந்து, தமது பாடசாலைக்காக சாத்திய விளைவுகளைக் காணக்கூடியவராகும் தன்மையுள்ளவர்களாக அதிபர்கள் இருக்க வேண்டும் (கால்ட் வெல் 1998:2)

மற்றவர் மத்தியில் கொள்ளளவைக் கட்டியெழுப்புதல், பௌதீக வள வடிவமைத்தல், பாடசாலை மாற்றத்திற்கான விளைவுகளைக் கையாளும் திறன்பெற்றிருத்தல் போன்ற திறன்களைக் கொண்ட தூர நோக்குள்ள அதிபரொருவர் இல்லையேல், பாடசாலை மட்ட முகாமைத்துவத்தின் மிகப் பிரதான நோக்கமானது, அதாவது மாணவர் வெளியீடுகளில் மேம்படையச் செய்தல் என்பது இல்லாமல் போய்விடும். மாணவர் கற்றலை மேம்படுத்தும் பாடசாலை மட்ட முகாமைத்துவத்தை வெற்றிகரமாக அமுலாக்குவதற்கு ஒரு தலைவருக்குத் தேவையான தரங்களாவன:

கட்டாயமாக உபாயத்துடன் சிந்தித்தல், சந்தேகமான பணிகளை உடனடியாகக் கையாளுதல், அடிப்படையிலான நோக்கு, விழுமியங்கள் தொடர்பில் திடமாக நிற்றல், நேர்மை, தனியாளிடை உணர்வுகள் பேணப்படல், அழுத்தங்களைச் சுமுகமாக ஆறுதலுடன் கையாளுதல் (டாவிஸ் இன் கிரிச்றொன் davis in Creighton 1999:2)

**மேலும் கிரிச்றொன் அவர்கள் பரிந்துரைப்பதாவது:**

ஒரு தொகுதி விழுமியங்களும் நம்பிக்கைகளும், எமது ஆர்வம் செயற்படுத்தல் கொண்ட பாடசாலைத்

தலைவர்களுக்கு மிகப் பொருத்தமானதொரு காரணமாக அமையலாம். இவ்வணுகுமுறையானது குவியத்தை தலைமைத்துவ இயல்புகளிலிருந்து தலைவர்களுக்கான இயல்புக்கு மாற்றுகின்றது'' (கிரிச்ரொன் 1999:5)

தூர நோக்குள்ள தலைமைத்துவத்தின் முக்கியத்தைக் குறைவாகக் கூறவியலாது. பாடசாலை மட்ட முகாமைத்துவத் தலைமையில் தூர நோக்குள்ள தலைவர்கள் இல்லாவிடின் விழுமியங்கள் மற்றும் நம்பிக்கைகளின் ஒரு மையக்கருத்தியல்பைப் போதித்தல், கூட்டு நோக்குக்கு வசதி ஏற்பாடளித்தல், உள்ளூர் மற்றும் விரிந்த விடயங்களை இனங்காணுதல், வாய்ப்புக்கள் உள்ள பகுதிகளை நோக்கியதாய் பாடசாலை இடம் அமர்தல், மற்றும் மொத்தப் பாடசாலையின் நடைமுறைகளையும் வரிசைக்கிரமப்படுத்தல், மற்றும் பாடசாலையின் விருப்பம் நோக்குடனான முகாமைத்துவம், பாடசாலை மட்ட முகாமைத்து வமளிக்கின்ற வாய்ப்புக்கள் என்பன உணரப்பட மாட்டாதென நூலாய்வு விமர்சிக்கின்றது. பாடசாலை ஆயத்த நிலையின் அடுத்த மூலகமானது பயன்தருகின்ற மற்றும் தொடர்ந்து நிற்கின்ற உறவுகளிலும் பாடசாலையுடனான தொடர்பாடலிலும் உள்ளடங்குகின்றதென்று வொல்செற்றர் (1996) பரிந்துரைக்கின்றார்.

## 4. உறவுகளும் தொடர்பாடலும்

மாணவர் வெளியீடுகள் மேம்பாட்டுக்கான பாட சாலை மட்ட முகாமைத்துவத்தை வலுவாக்கும் இரண்டாவது மூலகமானது, விளைதிறனுடைய உறவு விருத்தியையும் தொடர்பாடல் வழிமுறைகளையும் உட்படுத்துகின்றதென நூலாய்வு இனங்கண்டுள்ளது. ஒரு பாடசாலைக்குள் மற்றவர்களின் தேவை களுக்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய உறவுகள் மாற்ற முகாமைத்துவத்துக்கு ஒரு திடமான அத்தி வாரத்தைத் தோற்றுவிக்கின்றது. ஸ்ரொப் (1994) அவர்கள் கூறுவதாவது:

பாடசாலை மட்ட முகாமைத்துடன் தங்கியிருக்கும் கலாசாரம் மற்றும் கலாசாரத்துள் உறவுகள் என்பனவற்றை விளங்கிக் கொள்ளலின் தேவை யானது நிறுவக ரீதியான உறுதிப்பாட்டின் மிக முக்கிய அகவைரமாகும் (ஸ்ராப் 1994:2)

பாடசாலை மட்ட முகாமைத்துவ வெற்றிகரமான அமுலாக்கத்திற்கு கூடிய வேலை செய்தலின் இருக்குந் தன்மை மற்றும் பாடசாலைக் கலாசார ஆதாரத் தன்மை ஒரு நிபந்தனையாகுமென நூ லாய்வு பரிந்துரைக்கின்றது. இதற்கு மத்தியில் உறவுகள் இருந்தால், மாணவர் வெளியீடுகளின் மேம்பாட்டை அடைவதற்கான எப் பாடசாலை மட்ட முகாமைத்துவ வெற்றிக்கரமான அமுலாக்கத்திற்கும் இக் குறிப்பிட்ட நிபந்தனையின் முக்கியத்துவம் இன்றியமையாததாகும்.மாணவர் கற்றல் வெளியீடு களில் அதிகரிப்பை ஏற்படுத்துவதற்கு, பாடசாலைச் சமுதாயம் முழுவதற்கும் விளைதிறனான தொடர்பாடல் வழிமுறைகள் ஒரு முக்கிய மூலகமாகும். ஒரு பெரிதகன்ற மூலப்பகுதி வரிசைகளிடையே தொடர்பான தகவல்களைப் பகிர்ந்து கொள்வதற்காக பாடசாலை மட்ட முகாமைத்துவ பாடசாலைகள் மிகவுயர்ந்த மற்றும் பிரதிநிதித்துவ முறையை உண்டாக்க வேண்டுமென வொல்செற்றரும் (1996) நோபிளும் (1996) நம்புகின்றனர். ஓர் அகன்ற தொகுதித் தகவல்கள் பகிர்ந்து கொள்ளப்படுவதுடன் பல பங்குதாரர்களுக்கு இது அணுகக் கூடியதான அனுகூலத்தை தருவது மட்டுமன்றி இன்னும் பாடசாலைச் சமுதாயத்தைத் தற்போதிருக்கும் பாடசாலைக்குள்ளான நிலைப்பாடுகள், கல்விசார் தராதரங்கள் திருப்தி மட்டங்கள் பற்றி உரையாடுதலில் ஈடுபடுத்தவும், மேம்பாட்டுக்கும் இணைப்புக்கும் சாத்தியமான பரப்புக்களை இனங்காணவும் இயலுகின்றது. இக்கருத்துக்களின் உற்பத்தி செய்தல், விவாதம் மற்றும் உண்மையறி விளக்கம் என்பன பாடசாலை மட்ட முகாமைத்துவ செய்முறையின் வெற்றிக்கு இன்றிமையாதன. மிகவுயர்ந்த உதவியுடனான இடங்கள், ஈடுபாடு மற்றும் தீர்மானம் மேற்கொள்ளும் வடிவமைப்புகள் தரத்தையும் பாடசாலைமட்ட மாற்றக் கடினத்தையும் அதிகரித்து கற்றல், கற்பித்தல் வெளியீடுகளின் மேம்பாட்டின் மேல் கூர்மையாகக் குவியப்படுத்துமென நூலாய்வு மேலும் பரிந்துரைக்கின்றது. ஒழுங் கமைப்பு ஆயத்த நிலையிலுள்ள மூன்றாவது பலப்படுத்தும் மூலகமானது, பாடசாலைப் பகுதி யினுள் வெகுமதிகள் ஊக்குவிப்பு, கணிப்பு மற்றும் ஒத்துக் கொள்கை மற்றும் பாடசாலைக் கலாசாரத்தினுள் ஒன்றித்திருப்பவை போன்றவற்றை உட்படுத்துவதாகும்.

## 5. வெகுமதிகள், கணிப்பு மற்றும் ஒத்துக்கொள்கை

பாடசாலை மட்ட முகாமைத்துவத்தை வெற்றிகரமாக அமுலாக்கி, மாணவர் வெளியீடுகளில் மேம்பாடுற்ற

பாடசாலைகள், தாம் ஓர் உள்ளக முறைகள் மற்றும் வெகுமதியளித்தல், கணித்தல் மற்றும் ஒத்துக் கொள்ளல் போன்ற ஊக்குவிப்புக்களையும் கொண்டிருந்தனவென்று விமர்சனத் தகவலிலிருந்து நூலாய்வு பரிந்துரைக்கின்றது. பாடசாலை மட்ட முகாமைத்துவத்தைக் குறித்துக் காட்டும் வகிபாக மற்றும் பொறுப்புக்களில் ஏற்பட்ட மாற்றங்களுடனான விளக்கமானது, இம் மூலகத்தின் முக்கியத்துவத்தைப் பெரிதுபடுத்திக் காட்டுகிறது. பல சந்தர்ப்பங்களில் பாடசாலைச் சமுதாயத்தின் அங்கத்தவர்கள் (சிறப்பாக உத்தியோகத்தர் குழு) இயைபாக்கம் மற்றும் முகாமைத்துவத்தில் தமது பிரதான கடமை பொறுப்புகளுக்கு மேலாகவும் அப்பாலும் அதிகப்படியான கடமைகளையும், பதவி நிலைகளையும் எடுக்கின்றனர். உள்ளக ஊக்குவிப்புக்கள் மற்றும் தொழில்வாண்மை தொடர்புகளைப் பலப்படுத்த உதவும் வெகுமதிகள் உள்ளகப்படுத்தல், ஆர்வமூட்டல், உற்சாகப்படுத்தல் மூலம் உத்தியோகத்தர் குழுவை பாடசாலை மட்ட முகாமைத்துவத்துள் ஈடுபாடாக்கி, மாணவர் வெளியீடுகளை மேம்படுத்தும் பாடசாலைகள் தமது பாடசாலை இலக்குகளை அடைக்கின்றன. (வடமேற்கு பிரதேச கல்வி ஆய்வு கூடம் 1995:18) சுருக்கமாக வொல்செற்றர் வாதிடுவதாவது:

பாடசாலைக் குறிகோள்களை நோக்கமாகக் கொண்டு உத்தியோகத்தர் குழுவின் நடத்தைக்கு மிக விளைதிறனுடன் வெகுமதியளிக்கும் வழிகளைப் பாடசாலை மட்ட முகாமைத்துவம் விருத்தியாக்க வேண்டும் (வொல்செற்றர் 1996:12)

ஆகவே, வெகுமதிகள், கணிப்பு, ஒப்புக் கொள்ளல் என்பவற்றின் பயன்பாடு என்பது பாடசாலை மட்ட முகாமைத்துவ அறிமுகத்தில் ஒரு பாடசாலைக்கு ஒழுங்கமைப்பு ஆயத்த நிலையின் ஒரு முக்கிய மூலகமாக வொல்செற்றரால் காணப்படுகிறது. மாணவர் கற்றல் மேம்பாட்டுக்கு பாடசாலை மட்ட முகாமைத்துவத்திற்கு வலுவூட்டும் நான்காவது மூலகமாக ஆராய்ச்சியில் இனங்காணப்பட்டது தொழில்வாண்மை விருத்தியாகும்.

### 6. தொழில் வாண்மை விருத்தி

மாணவர் வெளியீடுகளின் மேம்பாடடில் வெற்றி கண்ட பாடசாலை மட்ட முகாமைத்துவப் பாடசாலைகள் குறித்து வொல்செற்றர் (1996) அறிவிப்பதாவது:
செயற்படு மற்றும் செய்முறைத் திறன்களில் பாடசாலை முழுவதுமான பயிற்சியுடன் தொடருறு மேம்பாட்டின் மீதும் அதேபோல கலைத்திட்டம் மற்றும் அறிவுறுத்தல் தொடர்பான பரப்புக்களின் மீதும் ஒன்று திரட்டிய குவியப்படுத்தல் (வொல் செற்றர் 1996:3)

இப்பாடசாலைகளில் தொழில்வாண்மை விருத்தி யானது ஓர் உயர் முன்னுரிமையாக இருந்ததுடன், அது உபாய மட்ட ரீதியில் விருத்தியாக்கப்பட்டு, அமுல்படுத்தப்பட்டு மற்றும் மாற்றங்களுக்கான பாடசாலை முழுவதுக்குமெனக் கொள்ளளவைக் கட்டியெழுப்பும் நோக்கத்தைக் கொண்டதாக இருந்தது. இப்பாடசாலைகள் ஒரு தொழில் வாண்மைக் கற்றல் கலாசாரத்தை தமது பாடசாலைச் சமுதாயத்துக்கு அமைத்துக் கொண்டன. பாடசாலை மட்ட முகாமைத்துவ பாடசாலைகளில் மாணவர் கற்றல் மேம்பாட்டுக்கான தொழில்வாண்மை விருத்திக்கு ஆதரவளித்து உயர்த்துகின்ற கலாசாரத்தைத் தீர்மானிக்கும் முக்கியத்துவம் குறித்து நோபிள் (1999) DECD/ CERI(1997) மற்றும் கல்வி விக்டோரியா அறிக்கை (1999) போன்றவற்றிலும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தனிப்பட்ட ஆசிரியர்களின் தொழில்வாண்மையுடன் பாடசாலையின் முழுத் தேவைகளை இலக்காகக் கொண்டனவாக, ஆசிரியரின் திறன்கள், அறிவு, கலைத்திட்டம் மற்றும் நிகழ்ச்சித் திட்ட உள்ளடக்கம் போன்றவற்றைக் கூர்மைப்படுத்துவனவாக, மற்றும் தொழில்வாண்மை விருத்தித் திட்டங்களை விபரப் படுத்துவனவாக உள்ள பாடசாலைகளே வெற்றிப் பாடசாலைகளாக விளங்கினவென்று இந்நூலாய்வு காண்கின்றது.

ஒரு திடமான மற்றும் இசைவான தொழில்வாண்மை. விருத்தியானது, பயனுள்ள கற்பித்தல் முறைகள் மற்றும் புதுமை புகுத்தல் இன்னும் இசைவான கலைத்திட்டம் என்பனவற்றை உயர்வடையச் செய்து ஆதரவளிக்குமென இறுதியாக நூலாய்வு பரிந்துரைக்கின்றது. பாடசாலை மட்ட முகாமைத்துவ வெற்றிகர அமுலாக்கத்திற்கான ஒழுங்கமைப்பு ஆயத்த நிலையின் அடுத்த முக்கிய மூலகமாக, பாடசாலைக்குள் பகிர்ந்த மற்றும் சமமான தலைமைத்துவம் என்பது வொல்செற்றர் (1996) OECD/ CERI அறிக்கை (1999) கல்வி விக்டோரியா (1999) என்பவற்றால் காணப்படுகின்றது.

**7. பகிர்ந்த மற்றும் சமமான தலைமைத்துவம் மற்றும் முகாமைத்துவம்**

மாணவர் வெளியீடுகளின் மேம்பாட்டிற்காக பாடசாலை மட்ட முகாமைத்துவத்தை வெற்றிகரமாக அமுல் நடத்திய பாடசாலைகள் அவற்றைப் பகிர்ந்த மற்றும் சமமான தலைமைத்துவம் மற்றும் முகாமைத்துவ செயன்முறை ஒன்றூடாக அவ்வாறு செய்து முடித்துள்ளவென நூலாய்வு ஆவணப்படுத்துகின்றது. மாணவர் கற்றல் மேம்படுத்துவதற்கான பாடசாலை மட்ட முகாமைத்துவ வெற்றிகர அமுலாக்கத்துக்கான உபாய முறை ஒன்றையமைப்பது பற்றிக் குறிப்பாக வொல் செற்றர் (1996) அவர்கள் பரிந்துரைப்பதாவது:

பாடசாலை மட்ட பகுதயினரின் ஒரு விரிந்த பரப்பினரை ஈடுபடுத்துதற்காக பாடசாலையின் கிடைப்பாட்டிலும் செங்குத்தாகவும் இருபகுதியும் ஊடறுக்கும் பல்தர ஆசிரியர் தலைமையில் தீர்மானம் மெற்கொள்ளும் குழுக்களை அமைத்தல் (வொல் செற்றர் 1991:1)

இக்கருத்து மேலும், OECD/ CERI அறிக்கையில் இயைபாக்கம் செய்யப்பட்டது. அதாவது, அவ்வறிக்கை வெறுமனே கற்பித்தல் உத்தியோகத்தர் குழு மட்டுமன்றி அனைத்து பாடசாலைச் சமுகத்தினருக்கும் சனநாயக மற்றும் பங்குபற்றல் தலைமைத்துவமும் முகாமைத்துவமும் தேவையென கீழ்க்கோடிட்டு வலியுறுத்துகிறது. (1999:1) மாணவர் வெளியீடுகளை மேம்படுத்தும் பாடசாலை மட்ட முகாமைத்துவப் பாடசாலைகளுக்கு பாடசாலைச் சமுதாயம் மாணவர் வெளியீடுகளை அதிகரிப்பதற்கு பாடசாலை மட்ட முகாமைத்துவம் வழங்கிய வாய்ப்புக்களைப் பயன்படுத்தும் நோக்கில் குவியப்படுத்திய நிகழ்ச்சித் திட்டங்களைத் தலைமை தாங்கி முகாமைப்படுத்துவதற்காக தொடர்சியான பல்தர வாய்ப்புக்களைப் பெற்றுள்ளன. அவ்வாறான உதாரணம் ஒன்று. சுய முகாமைத்துவ பாடசாலைகளில் தொடர்புகளை உண்டாக்கல் எனும் விக்டோரியா அறிக்கையில் (1999) அறிவிக்கப்பட்டுள்ளது. மாணவர் வெளியீடுகளின் மேம்பாடுகளில் வெற்றி கண்ட பாடசாலை மட்ட முகாமைத்துவப் பாடசாலைகள், தமது பாடசாலைச் சமுதாயத்துக்குள் ஓர் அகன்ற ஆழமுள்ள பகிர்ந்த மற்றும் சமமான தலைமைத்துவத்தை விருத்தி செய்துள்ளனவென்று நூலாய்வு அறிவித்துள்ளது. குறிப்பாக பாடசாலைகள் பிரதான கலைத்திட்ட வகிபாகங்களுக்குத் தலைமையான ஆசிரியர்களை நியமித்து, உத்தியோகத்தர் குழு, பெற்றோர், மாணவர் மற்றும் அதே நேரத்தில் அகன்ற சமுதாயத்தின் அங்கத்தவர் ஆகியோரை ஈடுபடுத்தும் வகையிலான நிகழ்சித் திட்டக் குழுக்களையும் விருத்தி செய்துள்ளன. இக் குழுக்களுக்கு தலைமைத்துவப் பிரிவிலும், முகாமைத்துவ தொழில் நுணுக்கங்கள் மற்றும் செயன்முறைகளிலும் தொழில்சார் பயிற்சியளிக்கப்பட்டதுடன், இவற்றிற்கு நிர்வாகக் குழுக்களிடமிருந்து உதவிகளும் வழிகாட்டல்களும் வழங்கப்பட்டுமுள்ளன. நோபிள் (1996) மற்றும் கால்ட்வெல் (1998) ஆகியோர் பிரகாரம், பாடசாலையினுள் பகிர்ந்த தலைமைத்துவமும் மற்றும் முகாமைத்துவமும் ஒன்றிணைக்கப்பட்டிருக்கும் இவ்வலை அமைப்பானது, குறிப்பான பொறுப்புக்களுக்கு சொந்தவுடமை, மற்றும் அர்ப்பணிப்பு என்பவற்றை உயர்த்துகின்றன.

அதிபரின் அதிகாரப் பதவியிலிருந்து கொண்டு பொறுப்புக்களை கைவிட்டு விடுகின்றவர்களை விட, ஆர்வமும் நிபுணத்துவமுள்ளவர்களுக்கு தலைமை தாங்கவும் முகாமிக்கவும் இது இடமளிக்கின்றது. யாரால் மிகத் திறமையாக முயற்சிகளை முகாமிக்க முடியுமோ அவர்கள் விளைதிறனுடன் பதவியமர்த்தப்பட்டும் மற்றும் ஒன்றுகூடிய முறையில் தீர்மானம் மேற்கொள்ளவும் மாணவர்களின் மிகத் திறமையான வெளியீடுகளைப் பெற்றுக் கொள்வதற்கு நிகழ்ச்சித் திட்டங்களை விருத்தியாக்கி, அமுல்படுத்தி மற்றும் மீளாய்வதற்கும் அதிகாரமளிக்கப்படுகின்றனரென நூலாய்வு பரிந்துரைக்கின்றது. பாடசாலை மட்ட முகாமைத்துவ வெற்றிகர அமுலாக்கத்திற்கு ஒரு பாடசாலையின் ஒழுங்கமைப்பு ஆயத்த நிலையின் இறுதி மூலகமாக உட்படுத்தப்பட்டிருப்பது, பாடசாலையின் வகை கூறுதல் மற்றும் கணிப்பீட்டுக் கட்டமைப்பாகும்.

**நன்றி.**

**ஆய்வு நூல். கல்வி அமைச்சு**

# நித்திமும் கை தொழுவேன்

**க.இ. கமலநாதன்,** கல்வியியலாளர்
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

திரை விலக.

அவல ஒலிகள், கூக்குரல் புகை மண்டலமான நிலை.

குரல் :- இரும்புச்சங்கிலி நொருங்கிப் போச்சுது. இழுத்துக் கட்டின தூண்களும் உடைஞ்சு போச்சுது. தெருவெல்லாம் புழுதி துரவெல்லாம் சகதி. இரவெல்லாம் விழிப்பு உறவெல்லாம் பழிப்பு. ஓடு ஓடு உருக்குலைஞ்ச பேயைத் தேடு தேடு மூடு மூடு வெறித்தனம் செத்திட மண் போட்டு மூடு.

இளைஞ் :- என்னை நீர் நெருங்காதே எதிரியாய்க் கருதாதே. எதிர்த்தால் உதைப்பேன். பிடித்தால் உடைப்பேன் சொன்னதைச் செய்வேன் சுருக்கிட்டு சாவேன்.

பெற்றோர் :- பெற்றோர் எங்கட சொல்லை வேதவாக்காக மதிக்க வேண்டும்.

இளைஞன் :- பிள்ளைகள் எங்கட சொல்லையும் பெற்றோர் நீங்கள் மதிக்க வேண்டும்.

பெற்றோர் ::- நாங்கள் எப்பவும் உங்கட நன்மைக்குத்தானே பாடு படுகிறம்.

இளைஞன் :- நீங்கள் உங்களுக்கு நன்மையெண்டு நினைக்கிறது எங்களுக்குப் பாதிப்பாக அமைந்தால்.

பெற்றோர் :- நீங்கள் சின்னப் பிள்ளைகள் உலகத்தைப் புரியாதவர்கள்.

இளைஞன் :- எங்களுக்கெண்டு ஒரு உலகம் இருக்கு அதை உங்களாலதான் புரிஞ்சு கொளௌலாமல் இருக்கு. தெரிஞ்சு கொள்ளேலாமல் இருக்கு. பாடல் மூலமான உரையாடல்.

இளைஞன் ::- கட்டுப்பாடு விதித்திடும் பெறறோர்க்கு அடங்கிட முடியவில்லை. சின்னஞ்சிறியவர்கள் ஒன்றும் தெரியாதவர்கள் இதை ஏற்க முடியவில்லை.

பெற்றோர் :- எதிர்கால நன்மைக்காகப் பிள்ளைகளை வளர்ப்பது தவறாமோ. பொறியியல் மருத்துவர் ஆக்கிட உழைப்பது பிழையாமோ?

இளைஞன் :- தீர்மானம் மேற்கொள்ளும் தகுதி எமக்குண்டு எதிர்க்க வேண்டாம்.

பெற்றோர் :- தன்மானம் காத்திடக் கட்டுப்பாடு வேண்டுமே. மறுக்க வேண்டாம்.

இளைஞன் :- மிருதங்கம், ஓர்கன், ஆர்மோனியம் பழக தடுக்க வேண்டாம்.

பெற்றோர் :- கருத்தூன்றியும் படித்திட உதவாது உதுகளை நினைக்க வேண்டாம்.

இளைஞன் :- நாடகம், நடனம், பாட்டுப் பாடினால் மனம் குளிரும்.

பெற்றோர் :- கூத்தும் கும்மாளமும் சோறு தராது எம் வயிறெரியும்.

பெற்றோர் :- இத்தனை நாள் வைத்தியத்துக்குப் பிறகும உது அடங்கேல்ல எண்டால் இனிப் புது வைத்தியம்.

இளைஞன் :- நோயும் பிணியும் எனக்கு இல்ல "நாய் போல என்னைத் துரத்தாதையுங்கோ"

பெற்றோர் :- மந்திரத்தாலே உன்னை மனிசனாக்குவோம். அந்தரிக்கிற உன்னை சந்தியில் விடமாட்டோம்

இளைஞன் :- என்ர உணர்வுகளைப் புரிஞ்சு கொள்ளுங்கோ "என்ர தேவைகளைத் தெரிஞ்சு கொள்ளுங்கோ" என்ர ஆசைகளை அறிஞ்சு கொள்ளுங்கே"

பெற்றோர் :- இனி மந்திரவாதியோட பே" மனதை மாற்று" உடலைத் தேற்" மந்திரவாதி கோரமான மந்திர உச்சாடனத்துடன் பயங்கரமான உடலசைவுகளுடன் தோன்றுவார். கிப்றிஸ்ஸில் மந்திரம் ஒலிக்கும்.)

மந்திரவாதி :- டேய் சின்னக்குட்டி என்னடா விளையாட்டு ஆரோட வெறியாட்டு தெரியுமோடா என்னை அடங்க மறுத்த சுடலை மாடனையே கிடங்கு வெட்டி மடக்கி விழுத்தி முடக்கிப் போட்டவனடா இந்தக் கடம்ப இடும்பன். (மந்திர உச்சாடனம்) இந்தக் குஞ்சு அப்பாவிக் குஞ்சு தப்பிப் போ விட்டுப் போ அவனை வருத்தாதை அவன் ஒண்டும்

அறியாத அப்பிராணி அவனை விட்டுப் போஇளைஞன்:- எனக்கு ஒண்டும் இல்லை நான் என்னைப்பற்றி யோசிக்கிறன். எங்களைப் பற்றி யோசிக்கிறன். எல்லோரையும் பற்றி யோசிக்கிறன் எனது உலகத்தை நான் காணுறன். ஆதில வாழ முயற்சிக்கிறன் பயிற்சி எடுக்கிறன். என்ர உலகம் பரந்து விரிந்து விசாலமாயிருக்கிற உலகம் குறுகின வட்டத்துக்க குறுகின உலகத்துக்கைஎன்னால் வாழேலாது ஏன் என்ற கேள்வியை கேட்க மனம் துடிக்குது. காரணகாரியத் தொடர்புகளை அறிய மனம் ஏங்குது. இது பிழை எண்டுதான் என்னில பிழை பிக்குது சமூகம் ஆனால் நான் நானாக இருக்கிறன்.

மந்திரவாதி :- ஆ ஆ பரந்த உலகம், விரிந்த உலகம், குறுகின வட்டம், விரிந்த வட்டம், ஏன் என்ற கள்வி, காரண காரியம் நான் நானாக என்னடா இது எனக்கு ஒன்றும புரியவில்லை துட்ட ஆவியே இக் குஞ்சை விட்டுப் போ ஓடிப் போ சாட்டையடிதான் இனி இறுதி மருந்து நார் நாரய்க் கிழித்து விடுவேன்.

இளைஞன் :- அதை நான் செய்கிறேன் (மந்திரவாதியும் இளைஞனும் ஒருவரை எதிர்த்துச் சண்டையாடுதல் - இது நடன அமைப்பில் இடம் பெறும். மந்திர வாதி தோற்பான்.)

மந்திரவாதி :- அடிக்காதை அடிக்காதை ஐயோ வயித்துப் பிழைப்புக்குத்தான் இந்தத் தொழிலில் இறங்கினனான். மன்னித்து விடப்பா

இளைஞன் :- உங்கட வயித்துப் பிழைப்புக்காக எங்கட மனங்களைப் பிழிஞ்சு இழைக்கப் பண்ணுறீங்கள் மனங்களை ரணங்களாக்கிறியள்.

மந்திரவாதி :- என்னைத் தப்பிப் போக விடு. இனித் தப்பே செய்ய மாட்டன்

இளைஞன் :- ஓடு இந்தப் பக்கம் இனித் தலை காட்டாதை ஓடு (மந்திரவாதி ஓடுவான்)

இளைஞன் :- சிறுவர்கள் எங்கள் சூரியனும் பெரியோர்கள் கையில் சுருண்டது. கல்வித் துறையும் மருண்டது. இளைஞர்கள் வாழ்வு நெறி பிறழ்ந்தது அதனால எங்கள் உலகம் இருண்டது. காவல் துறை வெருண்டது. அதனால் வாழ்வும் வேண்டேன் உயிரும் வேண்டேன. உணவும் வேண்டேன். கடலில் வீழ்வேன் என் கதையை முடிப்பேன்.

இளைஞன் :- அழகான ஜாடி ஒன்று கடலிலே மிதந்து வருகிறது மா்மமான வெடிபொருள் போல் இதுவும் இருக்கக் கூடும். யாரோ ஒரு அப்பாவி வீணாக அழிந்து போவதை விட அழிவைத் தேடும் நானே இவ் வெடிபொருளால் வெடித்துச் சிதைந்து போதல் யாருக்கும் நஸ்டம் தராது. நானே எடுக்கிறன் சாவை அழைக்கிறேன். (ஜாடியைத் தூக்கி அழுத்துவான் மின்னல் பொறிகள் பறக்க புகை மண்டலம் எழும்ப ஜாடியில் இருந்து ஒரு உருவம் தோன்றிப் பெரிதாக வளர்ந்து வரும். சூழவும் பெரிய ஒலிகள் ஓசைகள் கேட்கும். அண்டகாசலம் அகண்டாசலம் திறந்திடு சீசேர் எனப் பல முறை அதிர ஒலிக்கும். மேடையின் நடுப்பகுதியில் சிறிய சக்கர மேடை சுழலும் அதிலிருந்து பூதம் ஒன்று தோன்றும்.)அதிகாலை நேரக் குளிர் தென்றல் வீசி புதிதாகப் பூத்த மலர் வாசம் மெல்லாப் பரவி அழகாகத் தோன்றும் வானவில் போல நிழலாக நிஜமாகப் பூதம் நிமிர்ந்து எழுந்தான்

பூதம் :- நான் பூதம் பலம் பொருந்திய பூதம் அண்ட சராசரங்கள் அனைத்தையும் நான் அறிவேன். சுண்ட மாருதச் சுழலை அடக்குவேன். அடிபணிய வைப்பேன். அன்பைக் கண்டால் எனக்குப் பெருமை. ஆதரித்ததால் நான் பதுமை. நீ அழைத்தால் நான் உன் அடிமை. என்ன வேண்டும் கேள் ஏது வேண்டும் கேள். கேட்டதைத் தருவேன். நீர் நினைப்பதை முடிப்பேன். கேள்

இளைஞன் :- எனக்குச் சாவு வேண்டும். தருவாயா?

பூதம் :- (சிரிப்பு) சாவா உனக்கா? வாழத்துடிக்கும் வயது உலகை ஆழத்துடிக்கும் வயது. மாளத்துடிப்பதேனோ? மகனே சாவை அழைப்பதேனோ?

இளைஞன் :- வாழப்பிடிக்கவில்லை. என் வாழ்வில் சிறப்பும் இல்லை. சாவை எனக்குத்தா சாவை எனக்குத்தா

பூதம் :- நாவை அடக்கு. சாவை விலக்கு. சரித்திரம் படைத்திடும் வயது காளை நீ கோழை யாவதேன்

இளைஞன் :- நான் நினைத்தது எதுவும் நடக்கவேயில்லை. என் ஆசைகள் எப்போதுமே நிறைவேறவில்லை. என் கனவுகள் ஒருபோதும் மெய்ப்படவில்லை.

பூதம் :- கொடுமை, இளமையில் கொடுமை வறுமையல்ல. உனது நலைமை. அதுதான் டெுமை விளக்கமாகச் சொல் விடிவு வீடு தேடி வரலாம்.

இளைஞன் :- அதுதான் என் வேதனைச் சின்னம். அடிமைச் சாசனம். அடக்கு முறையின் ஆரம்பம்.

பூதம் :- வீடு உன்னை வேதனைப் படுத்துகிறதா? சோதனை சோதனை இன்னும் விளக்கமாக.

இளைஞன் :- பூதமே உன்னைத்தான் கேட்கிறேன் பாட்டுப் பாடுவது பிழையா?

பூதம் :- இசையால் வசமாகாத உலகம் எது?

இளைஞன் :- ஆடுவது அநாகரிகமா?

பூதம் :- ஆடிப்பாடி வேலை செய்தால் அலுப்பிருக்காதே.

இளைஞன் :- மிருதங்கம் வாசிப்பதால் அருகிவிடுமோ என் அறிவு?

பூதம் :- பெருகிவிடும் உன் கல்வி அறிவு. மகிழ்வான சூழலில் தான் ஆற்றல். மகிழ்வான சூழலில் தான் தேடல். மகிழ்வான சூழலில் தான் படைப்பு மகிழ்வான சூழலைக் கொடுப்பவைதான் ஆடல், பாடல், இசை, நாடகம், சித்திரம்...

இளைஞன் :- இவற்றையெல்லாம் தயவு செய்து என் தாய் தந்தையருக்கு, ஆசிரியருக்கு அறிவித்தால் இனி வரும் சிறுவராவது இனிதாய் வாழ வழி கிடைக்கலாம்.

பூதம் :- ஓஹோ பிரச்சனை இப்படிப்போகுதோ? உங்கள் உலகில் விடயம் தெரிந்தவர்களால் தான் பல விபரீதங்கள் ஏற்படுகின்றன. வயிற்றிலே குழந்தை உருவாகிய உடனே யேவைத்தியராய் வரவேண்டும் என்று கற்பனை செய்யும் பைத்தியங்களாகி விட்டனர் இன்றைய பெற்றோர்கள்.

இளைஞன் :- என் விருப்பமின்றி பையோ சையன்ஸ் எடுக்க வைத்தனர். நான் நேசித்த தமிழ், நாடகமும் அரங்கியலும் எட்டாக்கனியாகின. மிருதங்கம், ஓர்கன், கிற்றார் வாசிப்பதை அடியோடு நிறுத்தி விட்டு, அவற்றை எங்கோ மறைத்து வைத்து விட்டு பரீட்சையில் கவனம் வைக்கட்டாம். அதிக நேரம் பேர்சனல் கிளாஸில் இருக்கட்டாம். நித்திரை நேரத்தைக் குறைக்கட்டாம். எல்லாம் என் நன்மைக்காம்.

பூதம் :- அது மட்டமல்ல. நண்பரோடை செல்லாதை, நாடகம் பார்க்காதை, நல்லது கெட்டது ஊரில் நடக்கும் அதை நாடாதை, வ.எ. பாக்காதை, உழஅிரவநச இல் கை வைக்காதை இன்னும் பல இன்னும் பல.

இளைஞன் :- இத் தொல்லைகளிலிருந்து விட்டு விடுதலையாகி நிற்கத்துணிந்தேன்.

பூதம் :- நீ ஒருவன் பட்டும் விட்டு விடுதலையானால் போதுமா? உன்னைப் போலுள்ள ஏனையோர்

இளைஞன் :- என்னைப் போல் இன்னும் பலரா?

பூதம் :- ஆம் ஐந்து வீதத்திற்கும் மேற்பட்டோர் மாதா, பிதா, குரு ஆகியோரால் கல்வியில் இடை விலகுகின்றனர். பொருத்தப்பாடற்ற தெரிவால் பரிட்சையில் சித்தியைய்தத் தவறுகின்றனர். பெற்றோரின் கல்வி தொடர்பான அழுத்தங்களினால் தற்கொலை செய்கின்றனர். இளவயது தற்கொலைகள் இப்படி வெளிவராத தற்கொலைகள் ஏராளம் தாராளம்

இளைஞன் :- ஆசை என் உள்ளத்தின் ஆசைகள், ஏமாற்றங்கள் தராளம் தராளம்.

பூதம் :- உன் ஏக்கங்கள் என்ன?

இளைஞன் :- என் அம்மாவும் அப்பாவும் என்னைப் பார்த்து என் செல்லம் வாடா என்று ஆசையோடு அழைக்கும் ஒரு இனிய நாள் வராதா? நான் விரும்பும் உணவைத் தானே சமைத்து நானுண்ணும் போது தாமும் என்னோடு இருந்து இனிய கதைகள் பேசி சேர்ந்துண்டு மகிழும் தகு பொழுது இனியும் வராதா? நான் விரும்பும் பாடத்துறையைத் தெரிவு செய்ய நான் விரும்பும் பாடலை உரத்துப் பாடி, நான் விரும்பும் இசைக்கருவிகளை இசைத்துப் பார்க்க, மாலை நேரத்தில் மனதுக்குப் பிடித்த நண்பர்களுடன் விளையாடிப் பொழுது போக்க அனுமதியும் ஆறுதலும் தரும் பெற்றோராய் மாறும் நாள் எப்பொழுதோ இரும்பைக் காந்தம் இழுப்பது போல எனை ஈக்கும் ஓர் பாடசாலை வேண்டும். அங்கு இதயமுள்ள ஓர் அதிபர் வேண்டும். சிந்தனை, சொல், செயலால் எனை ஈர்க்கும் ஓர் ஆசிரியர் குழாம் வேண்டும்.

பூதம் :- நீ விரும்பும் தாய், தந்தை நீ நேசிக்கும் பாடசாலை நீ விரும்பும் ஆசிரியர் குழாம் அனைத்தும் தாறேன். வீட்டிற்குச் செல் நடந்தவற்றைப் பற்றி மாலை வந்து என்னோடு பேசு

இளைஞன் :- நீ எங்கேயிருப்பாய்

பூதம் :- உன்னோடு இருப்பேன். எனை நினைக்க உன் முன் வருவேன் சென்று வா.வீடு

தாய் :- மகன் ஏன் இன்னும் வரேல்ல? நேரம் போகுது.

தந்தை :- தன்ர நண்பர்களோடை விளையாடிப் போட்டு வருவான் தானே.

தாய் :- ஓமப்பா அவன் என்ன சின்னப் பிள்ளையே எல்லாம் தெரிஞ்ச பிள்ளைதானே.

தந்தை :- மகன் வாறான் வாங்கோ ராசா

தாய் :- செல்லம் ஓடி வாங்கோ ரீயும் வாய்ப்பனும் றெடி. உங்களைத்தான் பாத்துக் கொண்டு இருக்கிறம் வாங்கோ

இளைஞன் :- வாய்ப்பன் நல்லா இருக்கு எங்கால அம்மா

தாய் :- செல்லத்துக்கு வாய்ப்பன் பிடிக்கும் எண்டு நானே சுட்டனான்.

இளைஞன் :- thank you அம்மா

தந்தை :- அப்பாவுக்கும் வாயமெ லழர சொல்ல வேணும். நான் தான் வாய்ப்பனுக்குப் பதமாக மாவைச் சேர்த்து குழைத்துக் கொடுத்தனான்.

இளைஞன் :- thank you அப்பா

தாய் :- மிருதங்க வகுப்புக்கு நேரம் வந்திட்டுது.

தந்தை :- ஓம் அப்பிடியே ஓர்கன், கிற்றார் வகுப்புக்கும் போட்டு வாங்கோ.

இளைஞன் :- ஓமம்மா அம்மா

தாய் :- என்ன செல்லம்

இளைஞன் :- O/L றிசல்ஸ் வந்திட்டுது தானே

தந்தை :- ஓம் ஓம் 8A B

இளைஞன் :- நான் தமிழ், நாடகமும் அரங்கியலும், இந்து சமயம் படிக்கப் போறன்.

தாய் :- ஓம் அதுக்கென்ன நல்லாப் படியும்.

தந்தை :- படிக்கிறது நீர் பாடங்களையும் நீர்தான் தெரிவு செய்ய வேணும்.

இளைஞன் :- அம்மா நான் ஸ்கூலுக்குப் போட்டு வாறன். பாடசாலை

இளைஞன் :- Good Morning சேர்

ஆசிரியர் :- Good Morning ஆதவன் நீர் எழுதின நாடகத்தை இண்டைக்கு தமிழ் மன்றத்தில்மேடையிலே நடிச்சுக் காட்ட வேணும்.

இளைஞன் :- ஓம் சேர் இளங்குமணனுக்கு நடிக்கிற இனியவன் வரேல்ல எண்டதால நீங்களே இளங்குமணனுக்கு நடிக்க வேணும்.

ஆசிரியர் :- ஓம் தாராளமாக நடிக்கலாம் அதுக்கு எனக்கு விருப்பமும் கூட

இளைஞன் :- தம்பி இளங்குமணா வா அருகே வந்து ஆசனத்தில் அமர்ந்து கொள்.

ஆசிரியர் :- ஆசனத்தில் அமர நான் இங்கு வரவில்லை போசனத்திற்காகவே அலையும் இந்தப் போக்கிரிகளை ஓட ஓட அடித்து விரட்டப் போகிறேன்.

இளைஞன் :- தம்பி ஆத்திரத்தால் அறிவை இழக்காதே.

ஆசிரியர் :- அறிவை இழப்பவன் நானல்ல.

இளைஞன் :- அப்படியென்றால்

ஆசிரியர் :- நீங்கள் தான் அறிவை இழந்து விட்டீர்கள் எங்கள் நாட்டின் சேல்வமனைத்தையும் பஞ்சையருக்கும் பாணருக்கும் அள்ளி அள்ளிக் கொடுக்கிறீர்கள் அணிமணிகள்ஆனை சேனை அத்தனையும் அள்ளி அள்ளி கவிமணிகள் வாழ்வதற்கே தந்துவிட்டால்

இளைஞன் :- தந்துவிட்டால்

ஆசிரியர் :- துணிமணியும் இல்லாத ஆண்டி மடம் ஆகிவிடும் எமது நாடு. இனியும் இதை அனுமதிக்க முடியாது அண்ணா.
(இளைஞனின் பெற்றோர்கள் கையைத் தட்டியபடி வருவார்கள்)

தந்தை :- ஆசிரியரும் மாணவனும் அருமையாக நடிக்கிறீர்கள்

தாய் :- ஆசிரிய மாணவ உறவு இப்படித்தான் இருக்க வேணும்



இளைஞன் :- சொல்லால் செயலால் ஒன்றுபட்ட தாய் தந்தை கல்வியால் கருத்தொருமிப்பால் இணைந்த ஆசிரியர் இதுதான் என் உலகம். நான் வாழ விரும்பும் உலகம் ஏய் பூதமே என்னருகே உடனே ஓடி வா

பூதம் :- வந்தேன் நலம் பல தருவேன் வளம் பல பெறுவாய்

இளைஞன் :- உனது கிருபையால் இன்று நான் காணும் உலகம் நித்தமும் வேண்டும். உன்னை நித்தலும் கை தொழுவேன் எனக்கு நீ வரம் தர வேண்டும். இன்று போல் என்றென்றும் நான் மகிழ்ந்து வாழ இந்த உலகம் எனக்கு வேண்டும்.

பூதம் :- இந்த மகிழ்வும் நிறைவும் தொடந்து வரவேண்டும் என்றால் மனிதா உம் மனதில் மாற்றங்கள் பல ஏற்பட வேண்டும்.

தந்தை :- அதைத் தாங்கள் எமக்குச் சொல்ல வேண்டும்.

பூதம் :- உன்னைப் போல் பிறரையும் நேசிக்க வேண்டும். தன்னலம் கருதாது இம் மண்ணிலே வாழ வேண்டும். பொய், போட்டி, பொறாமை, வஞ்சகம், சூது, ஆட்கடத்தல், களவு, கற்பழிப்பு, ஒருவருக்கெருவர் குழிபறித்தல் இன்னும் இன்னும் இவற்றை மனிதர் நீர் மறத்தல் வேண்டும். மனிதராய் வாழ வேண்டும்.

தந்தை தாய் :- முயற்சிக்கின்றோம்

இளைஞன் :- பூதமே எம்முடனேயே இருந்து விடு..

பூதம் :- உங்களால் நான் சாப விமேசனம் அடைந்தேன். இப்போது எனது உலகிற்குச் செல்கிறேன் வருவேன் வாழ்க வாழ்க பல்லாண்டு.

(பூதம் மறையும்)

திரை மூடும்

# பாடசாலை மட்ட முகாமைத்துவமும் வகிபாக மாற்றங்களும்

நூல் மீளாய்வு, பாடசாலைமட்ட முகாமைத்துவ அறிமுகமானது மத்திய காரியாலய உத்தியோகத்தர் குழு, மாவட்ட உத்தியோகத்தர் குழு, அதிபர்கள், பாடசாலை உத்தியோகத்தர் குழு, பெற்றோர் குறிப்பாக, மாணவர் ஆகியோரது வகிபாகங்களில் மாற்றங்கள் ஏற்படுதலைச் சுட்டிக்காட்டுகின்றது. பன்முகப்படுத்தப்பட்ட தீர்மானம் மேற்கொள்ளல், அமுலாக்கம், ஆளுகைப் பகிர்வு என்பன பாடசாலைச் சமூகத்தினுள் உள்ள அனைத்து நபர்களின் வகிபாக மாற்றங்களுடன் பாடசாலை வளவுக்குள்ளேயே உயிர்த்துடிப்பான பிரஜைகளுக்குரிய சனநாயகப் பொறுப்புக்களை உச்சாகப்படுத்துகிறது. பாடசாலை மட்ட முகாமைத்துவ அறிமுகம் காரணமாக முதல் வகிபாக மாற்றங்கள் மத்திய காரியாலயக் கல்வி அதிகாரிகளின் வகிபாக மாற்றங்கள் பற்றியனவாகும்.

**1. மத்திய காரியாலயத்தின் வகிபாகங்கள் மற்றும் பொறுப்புக்களின் மாற்றங்கள்**

கட்டளைகள் இடுதல், குற்றங்களைக் கண் காணித்தல் ஆகியவற்றிலிருந்து விடுபட்டு, பாட சாலை மாற்றங்களுக்கு வளவாளர்களாகச் சேவை செய்தல் மற்றும் ஏற்பாட்டாளராக இருத்தல் போன்றவற்றில் பிரதான கவனத்தைச் செலுத்தும் வகையில் மத்திய கல்விக் காரியாலயத்தின் வகிபாகமாற்றங்கள் நகர்த்தப்படுவதாக நூலாய்வு இனங்காண்கிறது. (Nehgps; Noble 1996)

"மத்திய நிர்வாகத்தின் முக்கிய வகிபாகம் பாடசாலை உத்தியோகத்தர் குழுவினர் தீர்மானங்களை மேற்கொள்ளவும் அமுல்படுத்தவும் உறுதியான உதவிகளை வழங்குவதாகும்;"(நோபிள், 1996:4).

ஆகவே பன்முகப்படுத்தப்பட்ட பாடசாலைமட்ட முகாமைத்துவ மாதிரிக்குள் பாடசாலைகளுக்கு தொழில்நுட்ப உதவிகளை வழங்குதல், மாணவர் விருத்தி மாணவர் செயலாற்றுகைக்கு வசதி ஏற்பாடுகளை வழங்குதல், வளங்கள் மற்றும் பொருட்களின் இடநிர்ணயித்தலும் வழங்குதலும், சூத்திரங்களை அமைத்தல், முறையான பரந்த திட்டங்களை நடைமுறைப்படுத்தல், கண்காணித்தலும் மதிப்பீடு செய்தலும் போன்றனவற்றில் மத்திய நிர்வாகத்தின் வகிபாகம் இடம்பெறுகிறதென நூலாய்வு அறிக்கைப்படுத்துகின்றது. பாடசாலைமட்ட அறிமுகத்தின் இரண்டவது வகிபாகம் பொறுப்புக்களின் மாற்றமானது மாவட்ட மட்ட கல்விக் காரியாலயங்களில் மேற்கொள்ளப்பட்ட வேண்டியதாகும்.

**2. மாவட்டக் காரியாலய வகிபாகங்கள் மற்றும் பொறுப்புக்களின் மாற்றங்கள்**

பாடசாலைமட்ட முகாமைத்துவ ஆட்சியின்கீழ் மாவட்டக் காரியாலய வகிபாகமும் மாற்றங் களுக்குட்பட்டுள்ளது, என (நோபிள்1996), வாதிடு கின்றார்.

"அத்தியட்சகர்கள் மற்றும் அவர்களது உத்தியோகத்தர் குழுவின் வகிபாகமானது பாடசாலைமட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர் மானங்களுக்கு வசதி ஏற்பாடளிப்பதும் உதவுவதும், இன்னும் தீர்மானங்களைக் கொள்கைகளாகவும், நிகழ்ச்சித்திட்டங்களாகவும் மாற்றியமைத்தலில் தேவையான உதவிகளை வழங்குவதாகும;"(நோபிள், 1996:4).

**கியூபிக் Kubick 1998 என்பவர் இக்கூற்றை ஆதரித்துத் தெரிவிப்பதாவது:**

"அத்தியட்சகர்களும் மாவட்ட உத்தியோகத்தர் குழுவும் பாடசாலைமட்டத்தில் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளுக்கு ஏற்பாட்டு வசதியளித்துச் சேவையாற்றுவர். மற்றும் அவர்களது புதிய வகிபாகமானது கல்விசார் அதேபோல் வரவுசெலவு இலக்குகளை விளங்கப்படுத்துவதுடன் பாடசாலைக் குத் தனது மாவட்ட நோக்கை (Vision) உயர்தர நிகழ்ச்சித்திட்டங்களாக மாற்றுவதற்கு அவை இடர்ப்படும்நேரத்தில் தொழில்நுட்ப உதவியளித்தலாகும்"(கியூபிக், 1988:1).

பாடசாலைமட்ட முகாமைத்துவம் என்றால் என்ன, அது ஏன் பாடசாலைகளுக்கு முக்கியமாகத்

தேவைப்படுகிறது போன்ற தொடர்பாடல்களை மேற்கொள்ளவேண்டியதும் அத்தியட்சகர்கள் வகிபாகமாக உள்ளது. இதே போன்று கொட்டன் Cotton 1992 பரிந்துரைப்பதாவது பலவிதமான பாடசாலைகளின் அணுகுமுறைகளிடையேயுள்ள வேறுபாடுகள் தனித்தன்மைகள் ஆகியவற்றை மாற்றுதலும் பாடசாலையை மேம்படுத்தலும் மாவட்டக்காரியங்களின் தற்போதைய புதிய வகிபாகமாகவுள்ளது. பாடசாலைமட்ட முகாமைத்து வத்தின் கீழ் அனேக மாவட்டக் காரியாலயங்கள் பாடசாலைகளின் முன்னேற்றத்தைக் கணிப்பீடு செய்து பாடசாலைமட்ட முகாமைத்துவ அமுலாக் கத்தின் முழுக்காலத்துக்கும் தேவையான பின்னூ ட்டல் உதவிகளை வழங்குகின்றன. மாவட்ட இயக்குனர்களும் அத்தியட்சர்களும் தமது அதிபர்களுடன் வளர்ச்சித் திட்டங்களைப் பரஸ்பரம் உருவாக்கி பாடசாலைமட்டத்தில் திட்டமிடலுக்கும் பயிற்சிக்குமாக வள ஒதுக்கீடுகளில் உதவி செய்தலும் மற்றும் பாடசாலைச் சமுதாயங்களுக்கு தம் முழு மொத்த தனிப்பட்ட தொழில்சார் வழிமுறைகளை ஏற்படுத்தலையும் இந்நூல் ஆய்வு இனங்கண்டுள்ளது. பாடசாலைமட்ட முகாமைத்துவ அமுலாக்கத்திற்கு ஏற்பாட்டு வசதிகள் அளித்தல், வழிகாட்டல், ஆதரவு, ஆலோசனை மற்றும் மேற்பார்வை செய்தல் போன்றன மாவட்டக்காரியாலயத்தினதும் அதன் உத்தியோகத்தர் குழுவினரதும் புதிய வகிபாகங்களெனச் சுருக்கமாக இந்நூலாய்வு காணுகின்றது. பாடசாலைமட்ட முகாமைத்துவ அமுலாக்கத்திற்காக மூன்றாவதாக மாற்றம் பெறவேண்டியது அதிபரின் வகிபாகங்களும் பொறுப்புகளுமாகும்.

**3. அதிபரின் வகிபாகம் மற்றும் பொறுப்புக்களின் மாற்றங்கள்**

"பாடசாலைமட்ட முகாமைத்துவத்தின் கீழ் மிகப்பெரிய வகிபாக மாற்றம் அதிபரிடத்தில் ஏற்படுகிறது." (கொட்டன் 1996/7)

தாமே வழிகாட்டுபவர் அல்லது தலைமையாசிரியர் எனக்காட்டிக் கொள்ளும் பிரதான நிறைவேற்று அதிகாரியாகத் தமது வகிபாகத்தை அனேக அதிபர்கள் கருதுகின்றனர் என அவள் மேலும் அறிக்கைப்படுத்துகின்றாள்.
பாடசாலைமட்ட முகாமைத்துவத்துக்கு முன்னதாக அதிபரின் வகிபாகமானது எப்போதும் கொள்கை நிறைவேற்றுதலும் நடைமுறைப்படுத்தலுமாக இருந்ததென ஆய்வுநூல் இனங்கண்டது. பாடசாலை மட்ட முகாமைத்துவத்தின் கீழ் அதிபரின் வகிபாகமானது தமது உத்தியோகத்தர் மீது அதிகாரத்தைப் பிரயோகப்படுத்தாது அதனைப் பகிர்ந்து இடத்திற்கேற்றதும் உள்ளூரால் ஏற்றுக் கொள்ளக்கூடியதுமான கொள்கைகளையும் நிகழ்ச் சித்திட்டங்களையும் அமைப்பதில் சமுதாயத் துடனும் உத்தியோகத்தர் குழுவுடனும் நல்லிணக்க முறையில் செயற்படுத்துவதாகும். பாடசாலைமட்ட முகாமைத்துவத்தில் பாடசாலை களுக்கு அதிகாரம் வகை கூறுதல் என்பன மாற்றப்பட்டதன் காரணமாக அதிபர்கள் மாவட்டக் கட்டளைச் சங்கிலித் தொடரின் உயர்வான இடத்திற்குத் தாம் நகர்த்தப்பட்டுள்ளதாக நம்புவதாக நூலில் அறிக்கைப்படுத்தப்பட்டுள்ளது. (ஹோல் செற்றர் 1996) என்பார் இப்புது வகிபாகத்தை விபரிப்பதாவது:

"உயிரோட்டமான முறையில் மீள்வடிவமைக்கப் பட்டுள்ள பாடசாலைமட்ட முகாமைத்துவப் பாடசாலைகளில் வினைத்திறனுள்ள அதிபர் கள் தமது உத்தியோகத்தர் குழுவுக்கு அதி காரத்தைப் பகிர்வது, பயிற்சி அளிப்பது, தக வல் பரிமாறுவது, வெகுமதியளிப்பது போன்ற வற்றில் உதவுதலில் குறிப்பிடத்தக்களவு காலத்தைச் செலவிடுகின்றமையை நாம் அறிகின்றோம்" (வொல்செற்றர்,1996:13).

பாடசாலைமட்ட முகாமைத்துவத்தின் கீழ் அதிபரின் புதிய வகிபாகமானது உத்தியோகத்தர் குழு, மாணவர், பெற்றோர் மற்றும் சமுதாயம் ஆகியோருடன் பாடசாலையைச் சுற்றி இடம்பெறுகின்ற குறிப்பிட்ட விடயங்கள் குறித்து உரையாடுவதற்குச் சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுத்தலுமாகும். உடன்பாட்டுடனான தீர்மானம் மேற்கொள்ளும் வடிவமைப்பை விருத்திசெய்து மற்றும் நியாயாதிக்கத்திற்கு ஒவ்வாதவற்றை அகற்றுவதன் மூலம் பாடசாலைமட்ட முகாமைத்துவ அதிபர் தமது பாடசாலைக் குழுக்களுக்கு உண்மையான அதிகாரத்தைப் பாரப்படுத்துகிறார்.

அதிபர் வகிபாகமானது, ஊக்குவிப்பாளராகவும் பயிற்றுவிப்பாளராகவும் மாற்றம் பெற்றுள்ளது. ஆதரவுள்ள சூழலை உருவாக்குபவராக, நம்பிக் கையை வளர்ப்பவராக, துணிந்து முடிவெடுத்தலை ஊக்குவிப்பராக, தகவல்களைச் சரியாக பரிமாற்றம் செய்பவராக, உயிரூட்டமுள்ள பங்குபற்றுதலுக்கு ஏற்பாட்டு வசதியளிப்பவராக மாற்றம்

பெற்றுள்ளதென்றும் நூலாய்வு வெளிப்படுத்தியுள்ளது. பாடசாலைமட்ட முகாமைத்துவத்தின் கீழ் அதிபர்கள் தமது தற்போதைய வகிபாகத்தைப் பிரதான ஏற்பாட்டாளராகவும் மாற்று முகாமையாளர்களாகவும் உயர்த்தியுள்ளனர். இதைச் செய்வதில் அதிபர்கள் தற்போது நடைபெறுகின்ற உத்திகோகத்தர் விருத்தி, பாடசாலைப் பரந்த செயல்கள் போன்றவற்றை உச்சாகப்படுத்தி முழுப்பாடசாலை மேம்பாட்டுச் செய்முறைக்காகத் தெளிவாக உணரக்கூடிய, உணரவியலாத வளங்களையும் வழங்கினார்கள்.

பாடசாலைமட்ட முகாமைத்துவத்தில் அதிபரானவர் மற்றுமொரு உயர்ந்த வகிபாகத்தையும் வகிக்கின்றாரென நூலாய்வு ஆவணப்படுத்துகின்றது. தமது பாடசாலைக்கு தாக்கத்தை ஏற்படுத்தும் சர்வதேச மற்றும் தேசிய விடயங்களின் "பெரும் காட்சிகளை" கவனிக்க வேண்டிய புதிய பொறுப்பின் தேவையும் பாடசாலைமட்ட முகாமைத்துவ அதிபர்களுக்கு ஏற்பட்டுள்ளது. மேலதிகமாக பாடசாலைமட்ட முகாமைத்துவ அதிபர்கள் புதிய கருத்துக்கள் மற்றும் ஆய்வுகளில் கற்றல் கற்பித்தல் தொழில்சார் கலந்துரையாடல்களைத் தமது உத்தியோகத்தர் குழுவுக்கு பாடசாலையினுள் பெற்றுக் கொடுத்தனர். ஆய்வின் போது நேர்காணப்பட்ட பல அதிபர்கள், நிதி நன்கொடைகளையும் பொருட்களையும் பாடசாலை வளங்களை உயர்த்தக் கோரியதோடு, அவ்விடயத்தில் நன்கொடை அதிகரிப்புக்கு உத்தியோகத்தர் குழுவினிடையேயும் உச்சாகமூட்டினர். இன்னும் பரவலாக்கப்பட்ட ஆளுகை மாதிரி பாடசாலைமட்ட முகாமைத்துவத்தின் கீழுள்ள அதிபர்கள் தமது ஆசிரியர்களின் நம்பிக்கையீனங்களை துடைத்தெறிந்து அதிலிருந்து அவர்களை விடுவித்து கற்றல் கற்பித்தல் பிரதான செயற்பாடுகளில் முழுக்கவனத்தையும் அவர்கள் செலுத்தும் வகையில் செயற்படுத்தினர்.

அதிபரின் வகிபாகம் நேரடி அறிவுறுத்தல் தலைமைத்துவத்திலிருந்து ஆசிரிய குழாத்துடன் அடிக்கடி விரிந்த இடைத்தாக்கத்துடன் ஈடுபடும் ஒழுங்கான தீர்மானம் மேற்கொள்ளும் அனைத்துப் பரந்த கட்டமைப்புள்ள வகிபாகத்திற்கு விரிவாக்கப்பட்டிருப்பதாக நூலாய்வு ஆவணப் படுத்தியது. வொல்செற்றர் (1996)அவர்கள் முடிவுரைப்பது போன்று,

"பாடசாலைமட்ட முகாமைத்துவப் பாடசாலைகளில் பல்வேறு வகிபாகங்கைச் சமநிலைப்படுத்தவேண்டிய தேவை அதிபர்களுக்கு உள்ளது. (வொல்செற்றர், 1996:17).

வோல்செற்றரும் கொட்டொனும் (1996) பாடசாலைமட்ட முகாமைத்துவ அறிமுகத்துடன் ஏற்பட்ட பெரிய வகிபாக மற்றும் பொறுப்புக்களின் மாற்றங்கள் அதிபர்களைப் பாதித்ததாகப் பரிந்துரைக்கின்றனர். பிரதி அதிபர்கள், பாடசாலை இடைநிலை முகாமைத்தினர் என்போரும் பாடசாலைமட்ட முகாமைத்துவ அறிமுகத்தால் பாதிக்கப்பாடாமலில்லை. அவர்களும் அவர்களது வகிபாகத்திலும் பொறுப்புக்களிலும் பாடசாலைமட்ட முகாமைத்துவ அறிமுகத்தினூடாக மாற்றத்துக்குள்ளாகியுள்ளனர்.

**4. பிரதியதிபர்கள் மற்றும் பாடசாலை இடைநிலை முகாமைத்தினர் வகிபாகங்கள் பொறுப்புக்களின் மாற்றங்கள்.**

சர்வதேச நூலாய்வின் போது, பாடசாலைமட்ட முகாமைத்துவ பாடசாலைகளின் பிரதியதிபர்கள், இலாகாத்தலைவர்கள், பாடசாலைகளின் இடைநிலை முகாமைத்தினர் ஆகியோரும் ஆய்வுக்குட்படுத்தப்பட்டனர். பாடசாலை இடைநிலை முகாமைத்தினர், கற்பிக்கும் ஆசிரியர் சார்பாக அதிபருடன் உரையாடும் சேவையை ஆற்றுவதாக ஆய்வுகள் பரிந்துரைத்தன. பாடசாலையின் இடைநிலை முகாமையாளர்கள் பாடசாலைமட்ட முகாமைத்துவத்தின் கீழ் பெருமளவு செயற்படுத்து முகாமைத்துவத்தை எடுத்துக்கொண்டு பாடசாலை உபாயத்திட்டமிடலில் அதிபர் தமது முழுக்கவனத்தையும் செலுத்த இடமளிப்பதாக ஆய்வு தெரிவிக்கின்றது. கற்பிக்கும் ஆசிரியர்களின் வகிபாகங்களும் பாடசாலைமட்ட முகாமைத்துவ அறிமுகத்தால் பாதிப்புக்குள்ளாகியுள்ளது.

**5. ஆசிரியர்களின் வகிபாகங்கள் மற்றும் பொறுப்புக்களின் மாற்றங்கள்**

பாடசாலைமட்ட முகாமைத்துவ பாடசாலையில் உபாயத்திட்ட வழியை நெறிப்படுத்தும் தீர்மானங்களை மேற்கொள்ளலில் ஆசிரியர் முழு, அதிகரித்த ஒரு வகிபாகத்தை வகிப்பதாகக் கூறப்படுகிறது. நோபிள் (1996) என்பார். பாடசாலைமட்ட முகாமைத்துவ வடிவமைப்பில் ஆசிரியர்களின் வகிபாகத்தை இவ்வாறு விபரிக்கின்றார் :

“ஆசிரியர்களின் வகிபாகம் பாடசாலைமட்ட முகாமைத்துவத்தில் பெரிதளவு உயர்த்தப்பட்டுள்ளது. உத்தியோகத்தர் முழு விருத்தி, போதனை வழங்குதல், கலைத்திட்ட விருத்தி ஆகியவற்றுக்குத் தலைமை ஏற்குமாறும் மற்றும் உடன்பாடான தீர்மானம் மேற்கொள்ளற் செய்முறையில் உயிர்த்துடிப்புடன் தகவல் வழங்குமாறும் அடிக்கடி ஆசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர் (நோபிள், 1996:4).

பல பாடசாலைமட்ட முகாமைத்துப் பாடசாலைகளில் ஒரு பலமான இடைநிலை முகாமைத்துவ அமைப்புக் குறைப்பாடுள்ளதாக நூலாய்வு வெளிக்காட்டியது. குறிப்பாக ஆரம்ப மற்றும் முதன்நிலைப் பாடசாலைகளில் செயற்பாடு முகாமைத்துவத் திட்டமிடல் சிரேட்ட ஆசிரியர்கள் பொறுப்புக்களைக் கையேற்றுள்ளதாகவும் தெரிவிக்கின்றது. கற்பித் தல், கலைத்திட்ட விடயங்களில் “முழுப் பாடசாலையையும்” முகாமைப்படுத்தும் விதத்தில் அவர்களது வகுப்பறை மட்டக் கற்பித்தல் வகிபாகங்கள் விரிவாக்கம் பெற்றுள்ளன. இப் பாடசாலைகளின் பெற்றோர், மாணவர் வகிபாகங்களும் பொறுப்புக்களும் மாற்றமடைந்துள்ளன.

## 6. பெற்றோர் மற்றும் மாணவர் வகிபாகங்கள், பொறுப்புக்களின் மாற்றங்கள்

பெற்றோர் மற்றும் மாணவர்களுக்கு பாடசாலைமட்ட முகாமைத்துவ மாதிரிகளில் தீர்மானம் மேற் கொள்ளலிலும் ஆளுகையிலுமான அதிகரித்த வகிபாகங்களையும் நூலாய்வு வெளிப்படுத்துகிறது. மெக்கென்சி (McKenzie 1991), என்பவர் பரிந்துரைப்பதாவது:

“பொதுவாக பாடசாலைமட்ட தீர்மானம் மேற்கொள்ளும் வளையத்தின் வெளியே காணப்பட்ட பெற்றோர், தற்போது இச்செய்முறையின் உள்வளையத்துள் தம்மைக் காண்கின்றனர்.” (மெக்கென்சி 1991:30).

பெற்றோர் சமுதாய உறுப்பினர் மற்றும் மாணவர்களில் குறிப்பாக முதியவர்கள், பாடசாலையின் செயற்பாடு மற்றும் கொள்கைப் பகுதிகளில் தம் ஆலோசனைகளை வழங்கி, நேரடியாகப் பங்களிப்புச் செல்வாக்குச் செலுத்துவதாக நூலாய்வு இனங்கண்டுள்ளது. பெற்றோர் மாணவர் மற்றும் சமுதாய உறுப்பினர் ஆகியோரின் வகிபாகங்களில் உதவுவதற்குப் பாடசாலைமட்ட ஆளுகை மாதிரிகளுக்குள், அப் பாடசாலைகள் உதவி செய்வதுடன், தகவல்களும் வழங்கு வகையில் அடிக்கடி பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை வழங்குகின்றன.

## 7. சுருக்கம்

பாடசாலைமட்ட முகாமைத்துவ அமுலாக்கத்துடன் இடம்பெற்ற வகிபாக மாற்றங்கள், பாடசாலையுள் தொழிற்படுகின்ற அனைத்துத் தரத்திலான மக்களையும் பாதித்தது. சுருக்கமாக, தீர்மானம் மேற்கொள்ளும் அதிகாரம், திட்டமிடலில் பெருமளவு பொறுப்பு செயற்பாடு முகாமைத்துவம், உபாயங்களின் அமுலாக்கமும் மீளாய்வும், இடமட்ட கலைத்திட்ட விருத்தி, தொழில்சார் பூர்வாங்க விருத்தி வகைகூறலில் பரந்த எதிர்பார்ப்புக்கள் போன்றனவற்றை இவை பிரதானமாக இனங்கண்டன. mQ;[pypb]; Angelidies 2000 என்பவரும் இவ் வகிபாக மாற்றங்கள் பாடசாலைக் கலாசாரத்திலும் மாற்றங்களைக் கொண்டுவரும், ஏன் எனில் புதிய வகிபாகங்கள் பாடசாலைச் சமுதாயத்தை இவ்வாறு தூண்டுகிறது எனப் பரிந்துரைக்கின்றார்:

“வேலைத்தள கலாசாரங்களுக்கு தொடர்ச்சியாய் பெரிதளவு கவனத்தைக் கொடுப்பதுடன், குறிப்பாக பாடசாலை மேம்பாட்டுச் சந்தர்ப்பங்களில் அவை எவ்வாறு பங்குத்தாரர்களின் எதிர்பார்ப்புகளில் செல்வாக்குச் செலுத்துகின்றன. ” (md;[Pypb];, 2000:9).

பாடசாலை மேம்பாடுகளைப் பொறுத்தவரை பாடசாலைமட்ட முகாமைத்துவம் ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு அதிகாரத்தைக் கொடுக்கலாம். மீளாய்வு நூல் பாடசாலைமட்ட முகாமைத்துவ அமுலாக்கத்தினூடாக பல எண்ணிக்கையான எடுகோள்கள் பாடசாலைமட்ட முகாமைத்துவத்திலும் அமைப்பிலும் பல விசேட இயல்புகளை அதி கரிக்கவும் உயர்த்தவும் செய்கின்றன. என்று இனங்கண்டுள்ளது.

**நன்றி.**

**நூல் மீளாய்வு கல்வி அமைச்சு**

# ஆயிஷா

## ஒரு விஞ்ஞான நூலுக்கு அதன் ஆசிரியை எழுதிய முன்னுரை

கலாநிதி இரா. நடராஜன்

இந்த விஞ்ஞான கேள்வி பதில் நூலையும், இவ்வரிசையில் வர இருக்கும் இன்ன பிற பன்னிரண்டு நூல்களையும் தமிழில் எழுதத் தூண்டியது ஆயிஷாதான். இந்த நூலுக்குள் நுழையும் முன்னர் என் ஆயி'ாவைத் தெரிந்து கொள்ளுங்கள். ஏனெனில் இந்தப் புத்தகமெங்கும் வார்த்தைகளாக வாழ்பவள் அவள்தான். உங்களிடம் சொல்வதில் என்ன இருக்கிறது?

இதை எழுதிக்கொண்டிருக்கும் இந்த நொடியில் என் விழிகள் கனத்துப்போகுமாறு கண்ணீர் கொப்பளிக்கிறது. இந்த நூலை எழுதிய ஒரு தேர்ந்த விஞ்ஞானவாதிக்கும், ஆயிஷாவின் கதையை எழுதிகொண்டிருக்கும் ஒருத்திக்கும் இடையில்தான் எத்தனை வித்தியாசம்? என் ஆயிஷாவை நினைக்கும் போது மட்டும் இப்படி குழந்தை மாதிரி, துக்கம் கொப்பளிக்க அழ நேர்கிறது எனக்கு.

எனக்கு முதன் முதலில் தெரியவந்த ஆயி'ாவுக்கு 15 வயது. நான் அறிவியல் ஆசிரியையாகப் பணியாற்றிய ஒரு கிறிஸ்துவப் பள்ளியில் பத்தாம் வகுப்பு பி பிரிவில் ஐம்பத்தாறு மாணவிகளில் ஒருத்தி. அப்பள்ளி மாணவியர் விடுதியின் காப்பாள யுவதிகளில் ஒருத்தியாக அங்கேயே தங்கியிருந்த எனக்கு சற்றேறக்குறைய ஒரு செக்கு மாட்டு வாழ்க்கை பழகிப்போயிருந்தது.

நாங்கள் எட்டு பேர் அவ்விதம் காப்பாள யுவதிகளாக நியமிக்கப்பட்டிருந்தோம். திருமணமாவதன் மூலம் இந்தச் சுழல் வாழ்விலிருந்து தப்புவோர், அவர்களுக்குப் பதிலாய் வரும் புதியோர் தங்கள் திருமணத்திற்காகக் காத்திருக்கத் தொடங்கும் அப்பணியிடத்தில் சற்றேறக்குறைய நிரந்தர யுவதிகளாக நானும் ஆஸ்துமாக்காரி ஒருத்தியும் திருமணமாகாமல் தங்கிப்போனோம்.

நீண்ட பகலும் நிம்மதியற்ற இரவுகளும் என்னைத் தின்று கொண்டிருந்த அந்த நாட்களில் எனக்கு அறிமுகமானாள் அவள். அதிகம் கவர்கிற விதமில்லை ஆயிஷா. பற்கள் துருத்தியபடி முகத்தில் வந்து விழுகிற கேசத்தைப் பற்றிய அக்கறையின்றி நாலாவது வரிசையில் குச்சியாக அமர்ந்திருக்கும் ஒருத்தி ஆசிரியையின் அபிமாத்தைப் பெற வாய்ப்பில்லை. தவிர நான் அவர்களது வகுப்பாசிரியையும் இல்லை. வருகைப் பதிவேட்டை சரிசெய்யவும், ஒவ்வொரு மாணவியையும் நெருக்கமாக அறியவும் வாய்ப்பில்லை. ஆகையால் முதலில் எனக்கு ஆயிஷா யாரோ ஒருத்தி.

முதன் முதலில் அவளை அறிய நேர்ந்த சந்தர்ப்பத்தை நினைக்கிறேன். எனக்கு சிலிக்கிறது. பல ஆண்டுகளாக ஒரு வகுப்பில் ஒரு குறிப்பிட்ட பாடத்தையே தொடர்ந்து போதிக்கும் எல்லா ஆசிரியைகளையும் போலவே நானும் ஒரு எந்திரமாய் ஆகிப் போயிருந்தேன். சில வேளைகளில் சில பாடங்களை நடத்தினோமா என்ற ஞாபகமே இல்லாமல் கூட நடத்தியிருக்கிறேன்.

இத்தனை வருடத்தில் பத்தாம் வகுப்பு அறிவியல் புத்தகத்தில் என்ன பெரிதாக மாறிவிட்டது? காலையில் எழுந்து பல் துலக்குவதை உற்சாகத்தோடவா செய்கிறோம். எப்போதாவது புதிய பிரஷ் அல்லது பேஸ்ட்! இங்கே அதுவும் இல்லை. அதே ஓம்ஸ் விதி ஒரே செல் பிரிதல். புதிதாகத் தெரிந்துகொள்ளும் ஆர்வமற்று ஓர் எந்தரிரமாய் கிரீச்சிட்டுக் கொண்டிருந்த என்னை என் முகத்தில் கேள்விகளால் ஓங்கி அறைந்தாள் ஆயிஷா.

அன்று காந்தவியல் குறித்து பாடம். பூமி எப்படி ஒரு காந்தமாக உள்ளதென விளக்கிக்கொண்டிருந்தேன். ஒரு காந்தம் அதுவும் செவ்வக வடிவக் காந்தம், அதைக் கையில் உயர்த்திக் காட்டினேன். சிரமமே இல்லை. காந்தத்தின் வட நோக்கு அம்சம் குறித்து வழக்கமான எந்திரத்தனத்துடன் யாவரையும் உறங்க வைத்துவிடும் என் தொனியில் கரும்பலகையில் சில கிறுக்கல்களுடன் நடத்திக்கொண்டே போனேன். எவ்வளவு நேரமோ?

“மிஸ்” என்றொரு குரல்.
கரும்பலகையிலிருந்து திரும்புகிறேன். எதற்காகவோ திடுக்கிட்டபடி எழுந்து நிற்பவளை வழக்கமான

எங்கள் அக்கறையற்ற பார்வையுடன் "என்ன... வாந்தி வருதா?" என்றேன். வகுப்பே கொல்லெனச் சிரித்தது. சரியான முட்டாள் நான். எப்பேர்ப்பட்டவள்? என் ஆயிஷாவைப் போய் எப்படி சொல்லி இருக்கிறேன்.

"இல்ல மிஸ்.. சந்தேகம்"

இது நிச்சயம் ஆச்சரியமான ஒன்றுதான். சராசரி ஆசிரியை யாரையும் இது எரிச்சலூட்டுவது. சட்டென முகம் சுருக்கி சுள்ளென எரிந்துவிழும் குரலில் "என்ன?" என்றேன். கடைசி வரிசையில் யாரோ சிரித்தார்கள். அப்பெண்ணின் இளைத்த தேகம் நடுங்குவதைக் காண முடிந்தது. பக்கத்து இருக்கைக்காரி அவளது சட்டையை இழுக்கிறாள். காப்பாற்றி உட்காரவைக்கும் முயற்சி. பின் மறுபடியும் "என்ன?" என்றேன்.

"மிஸ்... அந்தக் காந்தத்தை ரெண்டா வெட்டினா என்ன ஆகும்... மிஸ்?"

நெடுநாள் தூக்கத்திலிருந்து எழுந்தவள் போலானேன். இதுவரை இல்லாத அர்த்தத்தில் அவள் என்னைப் பார்த்தாள். நான் அறிவியல் போதினியாக வந்துவிட்ட இந்த ஆறு ஆண்டுகளில் காந்தவியல் பற்றி நான் சந்திக்கும் முதல் சவால். காந்தத்தைப் பற்றி யோசித்து மூன்று நிமிட அவகாசத்திற்குப் பிறகு சற்று பொறி தட்டியது.

"ரெண்டு காந்தம் கிடைக்கும்". சரி, பதில் சொல்லியாகிவிட்டது. ஆனால் அவள் உட்காரவில்லை. மிகக் கடினப்பட்டு புன்னகைக்க முயற்சி செய்தாள்.

"அந்தக் காந்தத்தை வெட்டிக்கிட்டே போனா? உதாரணமாக நமக்கு இந்தக் காந்தத்தைத் துண்டாக்கிக் கிடைத்த காந்தங்களின் எண்ணிக்கை ஒரு முடிவுறா எண் என்று வெச்சிட்டா...?"

"ரொம்ப சிம்பிள்மா... முடிவுறா எண்ணிக்கையில் காந்தம் கிடைக்கும்"

மீண்டும் நிசப்தம். லேசாக வியர்க்கிறது அவளுக்கு. வகுப்பு உற்சாகத்தில் ஒரு போட்டியை ரசிப்பது போல் உணர்ந்தேன். உடனே "உட்காரு" என்றேன். பின் நடந்துகொண்டிருந்தேன். ஏதேதோ பாவனையாகப் பேசிக்கொண்டு குறுக்கு நெடுக்காக மணி அடிக்கும்வரை அலைந்துவிட்டு வகுப்பிலிருந்து வெட்கமில்லாமல் மிடுக்காக வெளியேறினேன்.

அடுத்த வகுப்பறையைத் தாண்டியிருக்க மாட்டேன். கூடவே வந்தது நிழல். "மிஸ்... ப்ளீஸ், மிஸ். ஒரே ஒரு நிமிஸம் மிஸ்..." அப்படி சொல்லும்போது அவள் முகத்தை பார்க்க வேண்டும் நீங்கள்! அதற்கு மேலும் புறக்கணிக்க முடியவே முடியாது.
"என்ன சொல்லு?"
"காந்தம் பத்திதான் மிஸ்"
"சொல்லும்மா... டயம் ஆச்சில்ல?"
"முடிவுறா எண்ணிக்கையிலான காந்தங்களை ஒரே நேர் கோட்டில் வெச்சா.... எதிர் துருவங்களைக் கவரும் அதன் இயல்பு என்ன ஆகும்."

"ஒரு காந்தத்தின் வடக்கு மறு காந்தத்தின் தெற்கை இழுக்கும். ஆனால் இழுபடும் காந்தத்தின் வடக்கே அடுத்துள்ள காந்தம் ஏற்கனவே இழுத்துகிட்டிருக்கும் இல்லையா.... மிஸ்?"
"ஆமா... அதுக்கென்னன்ற?"

"என் சந்தேகமே அங்கதான் இருக்கு. எல்லாக் காந்தங்களின் கவர்திறனும் ஒன்றெனக் கொண்டால் அவை ஒட்டிக்கொள்ளத் தான் வாய்ப்பே இல்லையே... எப்புறமும் நகராமல் அப்படியே தானே இருக்கும்."

"ஏன் நாம இந்தப் பிரபஞ்சம் முடிவுறா எண்ணிக்கையிலான காந்தங்களை நேர்க்கோட்டில் வைத்தது போல் அமைக்கப்பட்டதா வைச்சிக்கக் கூடாது? அந்தக் கோணத்தில் பூமிங்கற காந்தத்த ஆராயலாம் இல்லையா?"

பதிமூன்று வருடப் பள்ளி வாழ்க்கை. பின் மூன்றாண்டு இயற்பியல் - பல்கலைக்கழகத்தில். இப்படியொரு கேள்வியை நான் கேட்டுக்கொண்டதாக நினைவில்லை. "எங்கோ படித்ததாக ஞாபகம்" என்றேன். ஏதாவது சொல்ல வேண்டுமே!.

"The Truth of Magnets, வெட்ரோட் ஸ்டூடண்ட் கிங்லீங் எழுதியது... அருமையா இருக்கு... படிக்கிறீங்களா மிஸ்.."

"இந்த புத்தகமெல்லாம் நீ படிக்கிறாயா?" அவ்வளவுதான் - என் ஆயிஷா கிடைத்துவிட்டாள். அந்த அதிர்ச்சியில் இருந்து இன்றுவரை மீள முடியவில்லை. அறை வாங்கியவளைப் போல

புத்தகத்தை வாங்கிக்கொண்டு சரசரவென ஆசிரியர் அறைக்கு நடந்தேன்.

தொடரும்...........

# கல்வியில் தர விருத்தி

# பாடசாலை கற்றல் சூழலை மேம்படுத்தல்

மாணவரின் பூரண விருத்தி

தரமான கல்வி அபிவிருத்தியானது புலமைசார் கல்வியினூடாகவும் பிரயோகரீதியான மற்றும் தொழிநுட்ப கல்வி நிகழ்ச்சித் திட்டத்தினூடாகவும் மேற்கொள்ளப்படுகின்றது. வகுப்பறை மட்ட கற்றல் மற்றும் கற்பித்தல் செயற்பாடுகள் மிகவும் மேம்படுத்தப்படுவதோடு மாணவர் கற்கும் பாசறைகளை நடாத்துதல், பாடம் தொடர்பான புறக்கிருத்தியங்கள் (அழகியல், விளையாட்டு போன்ற), விசேட கல்வி கருத்தரங்குகள் மற்றும் பரிகார கற்பித்தல் செயற்பாடுகளை நடத்தப்படவேண்டும்.

மேலும் ஆசிரியர் தேவையைப் பூர்த்திசெய்தல் மற்றும் பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட ஆசிரியர் அபிவித்தி வேலைத்திட்டங்களைச் செயற்படுத்தும் அதேவேளை சமூகப் பிரஜைகள் பங்குபற்றும் செயற்பாடுகள், பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு செயற்பாடுகள், சுகாதார மற்றும் போசாக்கு மேம்பாட்டு வேலைத்திட்டம் மற்றும் கல்விசாரா ஊழியர் குழாம் தொடர்பில் இயலளவு விருத்தி வேலைத்திட்டங்களை செயற்படுத்தப்படுவதனூடாக கல்வியில் தர அபிவிருத்தியை மேம்படுத்துவதற்கு

உரு 3.1 மாணவர்களின் பூரண விருத்திக்கென பாடசாலைகளில் காணப்படும் செயற்பாடுகள்.



கற்றல் நடைபெறுவது வகுப்பறைக்குள் மட்டுமல்ல பாடசாலையின் முழுச்சூழலுக்குள்ளும் வீட்டிலும் மாணவன் வாழும் சமூகச்சூழலுக்குள்ளும் கற்றல் நிகழ்கிறது.

எங்களது இலக்கு மாணவர்களது பூரண விருத்தியாகும் இதற்காக முழுமையான கல்வி பாடசாலையினுள் வழங்கப்பட வேண்டும்.

உத்தேசிக்கப்பட்டுள்ளது.
பூரணத்துவமான இடைநிலை பாடசாலையொன்றை அபிவிருத்தி செய்வதனூடாக தேசிய கல்வித்திட்டம் பூரணமாக செயற்படுத்துவதற்கு ஏற்ற விதத்தில் தரமான கல்வி விருத்தி மற்றும் பௌதீக வசதிகளின் அபிவிருத்தி மேற்கொள்ளப்படவேண்டும். அதற்கேற்ப ஒவ்வொரு பாடங்களின் அபிவிருத்திக்கான மாற்றொழுங்கு மற்றும் கற்கும் சூழமைவுகள் மேம்படுத்தல் சம்பந்தமாக கீழ்க்காணும் விதமாக தொடரந்து கலந்துரையாடப்படுகின்றது.

**கற்றலுக்கான சூழமைவு**

இதன் போது கற்றல் சூழல் குறித்து விசேட கவனம்செலுத்தவேண்டியது முக்கியமாகும்.
கல்விக்காக மேற்கொள்ளப்படும் பாரிய அரச மற்றும் தனியார் முதலீடுகளின் இலாப பெறுபேற்றை ஈட்டுவது பாடசாலை மற்றும் வகுப்பறையினுள்ளே நடைபெறும் செயற்பாடுகளை சரிவர முகாமைத்துவம் செய்வதனூடாகவே பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருக்கும். பாடசாலை கற்கும் நிலையகமாக திகழவேண்டின்கற்பித்தல் மட்டுமல்ல கற்றலும் பாடசாலைக்குள்ளே இடம் பெறவேண்டும். கற்றல களநிலை பொருத்தமானதாக நிலவும் போதே கற்றல் சிறப்பாக நிகழும்.

கற்றல் சூழலமைவுக்குள் வகுப்பறை மட்டுமன்றி முழுப்பாடசாலை சுற்றாடலும் மாணவரின் வீட்டுச்சூழலும் பாடசாலைக்கு வெளியே உள்ள சமூகச்சூழலும் உள்ளடங்குகின்றன. இவை அனைத்தையும் கற்றலுக்கு அனுகூலமான வகையில் அமைத்துக்கொள்வதூடாக வளமான கற்றல சூழலொன்றை கட்டியெழுப்ப முடியும்.

தனியாளின் கற்றல் மீது தாக்கத்தை ஏற்படுத்தும் அவரின் உள்ளகம் சார்ந்ததும் வெளியகம சார்ந்ததுமான அனைத்துக்காரணிகளும் கற்றல் சூழல் என அடையாளப்படுத்த முடியும் என தெரிவிக்கப்படுகின்றது. இதன் போது கற்போன் உயிர்ப்போடு கற்கும் செயற்பாட்டில் ஈடுபடுவதோடு அதற்காக சுயமாக ஊக்கவிக்கப்படுவதும் காணப்படக்கூடியதாக இருக்கும். அபிவிருத்தி செய்யப்படும் பாடசாலைக்கு பௌதீக வசதிகளை வழங்குதல் உயர்மட்டத்தில் இருந்தாலும் அங்கு சிறந்த கற்றல் சூழமைவு காணப்படாவிடத்து அப்பாடசாலை மீளமைக்கப்படும் பாடசாலையாக கவனத்திற்கொள்ளப்படமாட்டாது. மீளமைக்கப்படும் போது பௌதீக வசதி போலவே சமூகச் சூழலும்

பாடசாலை கற்றல் நிலையமாக இருக்க வேண்டுமாயின் மாணவர்கள் சுய கற்றலுக்காக உட்படுத்தப்படுவது முக்கியமானதாகும். சிறந்த கற்றல் சூழலினுள் கற்பதற்கு ஊக்குவிக்கப்படல் மிகவும் உயர் மட்டத்தில் இருக்கும். ஆசிரியர் பாடம் சம்பந்தமாக விசேட அறிவுடையவராக இருப்பது மட்டுமன்றி மாணவர்களின் உளவினைப்பாடு மற்றும் நடத்தைக் கோலம் குறித்தும் அறிவு கொண்டவராய் இருத்தலும் வேண்டும்.

உளவியற் களநிலையும் உள்ளடக்கப்படவேண்டும். சிறந்த கற்றற் சூழமைவை பாடசாலைகளினுள் ஏற்படுத்துவதற்கு கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய 6

விடயங்களை Sandberg (1994) குறிப்பிடப்பட்டுள்ளார். அவையாவன:

i. பாடவிதானத்தை மாணவர்களிடையே அமுலாக்கும் ஆசிரியர்களின் இயங்காற்றல்
ii. கற்றல் நடைபெறுகின்றதென்பதை உறுதி செய்யும் கண்காணிப்பு
iii. கற்கவேண்டியது யாவையென காட்டிநிற்கும் பாட ஏற்பாடு
iv. கற்கும் செயற்பாட்டை அர்த்தமுள்ளதாக்கும் கற்போர்கள்
v. வெளிவாரி தகவல் அடிப்படைகள்
vi. கற்கும் உபகரணங்கள்

இந்த எல்லா அம்சங்களும் பொதிந்த சிறந்த நிறுவனத்தினுள் மானிட உறவுமுறைகள் சிறப்பானதாக காணப்படும். ஆசிரியர் - மாணவர் உறவு, ஆசிரியா் - ஆசிரியர் உறவு, மாணவர்- மாணவர் உறவு, மாணவர்- பெற்றோர் உறவு என்பதோடு நிர்வாகம் மற்றும் அவசிய மனிதர்களோடு

ஏற்படுத்திக்கொள்ளும் நல்லுறவு என்பன அன்றாட செயற்பாடுகளோடு பிணைந்தவாறு காணப்படும் போது கற்றலுக்கு உகந்ததான சூழலமைவு எற்படுத்தப்படும். ஜனநாயக செயற்பாடுடன் கூடிய உற்சாகம், புதுக்கருத்தாக்கங்களின் பெருக்கம், கண்டறிசெயற்பாங்குகள் என்பன கற்றலில் பங்கெடுத்தலை விரிவாக்கும். அவ்வாறான சூழலமைவில் கற்பித்தல் மாத்திரமல்ல கற்றலும் செவ்வனே நிகழ்வதாகவிருக்கும்.

கற்றல் சூழல் சம்பந்தமாக கவனத்தை செலுத்தும் போது மின்னியல் ஊடகங்களின் பாவனை மற்றும் தகவல் தொழிநுட்ப முறைகள் ஊடாக கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளுக்கு ஊட்டமேற்படுத்தல் தொடர்பாக விசேட கவனம் செலுத்தவேண்டும். இதற்காக பௌதீக வளங்கள் மஹிந்தோதய தொழிநுட்ப கூடத்தின் கீழ் இடைநிலை பாடசாலை அபிவிருத்தி திட்டத்தின் எல்லா இடைநிலைப்பாடசாலைகளுக்கும் வழங்கப்படும் அதேவேளை இந்த வளங்களினால் உயர் பிரதிலாபத்தை மாணவர்களுக்கு பெற்றுக்கொடுப்பது பாடசாலையின் மிகமுக்கிய பொறுப்பாகும்.

ஆசிரியர் கற்பிப்பதலிலும் பார்க்க கற்றலுக்கான வசதிகளை தயார்படுத்துபவராக இருந்து மாணவர்களின் கற்றலை தூண்டுபவராக திகழ வேண்டுமென உளவியலாளர்கள் எடுத்துக்காட்டியுள்ளனர். இத்தகைய பின்னணியின் கீழ் பாடவிதானத்தை மாணவர்களுக்காக நடைமுறைப்படுத்தல் தொடர்பில் கவனம் செலுத்துதல் இன்றியமையாததாகும்.

**பாடத்திட்டம்**

பாடவுள்ளடக்கம் மற்றும் கற்பிற்கும் முறைகள் உள்ளடங்கிய பாடநூல்கள் மற்றும் ஆசிரியர் கைநூல்கள் பாடசாலைகளுக்கு பெற்றுக் கொடுக்கப் பட்டுள்ளதால் அவைகள் தாங்கிய உள்ளடக்கங்கள் குறித்து இங்கு கலந்துரையாடப்படமாட்டாது. இங்கு கவனம்செலுத்தப்படுவது கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் வெற்றியடைவதற்காக பாடசாலை களினால் உருவாக்கிக்கொள்ளப்பட வேண்டிய கற்றல் சூழல் பற்றியாகும்.

**நன்றி**
**கல்வித்துறையில் அபிவிருத்திச் சட்டகம்**

வருட ஆரம்பத்தின் போது மாணவர் பாடப்புத்தகங்கள் ஆசிரியர் கைநூல்கள் மற்றும் ஏனைய அத்தியாவசிய கற்றல், கற்பித்தல் உபகரணங்கள் பாடசாலைக்கு வழங்கப்படுவது கட்டாயமாகும். புதிய உத்தியோகத்தர்களுடன் தொடர்புகளை மேற்கொண்டு இந்த விடயங்களை நிறைவேற்றுவதற்கு பொறுப்பாய் இருந்து பார்த்துக்கொள்வது அதிபர் உள்ளிட்ட பாடசாலையின் முக்கிய கடமையாகும்.

# லோகநாயகி டீச்சரும், லலிதா ராகமும்

சகாதேவன்

“சயின்ஸ் எடுக்க வந்தவ சயின்ஸ் மட்டும் எடுக்க வேண்டியதுதானே. எதுக்கு தேவையில்லாத விஷயத்துலயெல்லாம் தலையிடுரா? நான் போயி அவ பாடத்துல புகுந்து பேசுதேனா? அவ அவ வேலையை அவ அவ பாக்கணும்”. நான்காம் வகுப்பு படிக்கும் போது பாட்டு டீச்சர் தனக்குள்ளேயே புலம்பிக் கொண்டு ஆர்மோனியத்தைத் திறந்தது இன்னும் நினைவில் உள்ளது. லோகநாயகி மிஸ்ஸுக்கு இது காதில் விழுந்திருக்கும்தான். ஆனால் பதிலேதும் சொல்லவில்லை. வீட்டுப்பாடம் செய்யாத, சுழிச்சேட்டை பண்ணுகிற பிள்ளைகளையே கடிந்து ஒரு வார்த்தை பேசத் தெரியாதவர்கள் இதற்கு ஏதாவது பதில் சொன்னால் தான் ஆச்சரியப்பட வேண்டும்.

அன்று பாட்டு டீச்சர் வருவதற்கு சற்று தாமதமானது. எட்டே எட்டு பேர்தான் என்றாலும்,



நாங்கள் போட்ட கூப்பாட்டில் ஸ்டா∴ப் ‘ரூமிலிருந்து லோகநாயகி மிஸ் வந்து விட்டார்கள். என்னப்பா, சினிமாக் கதையா? எனக்கும் சொல்லுங்களேன் என்றபடியே மிஸ் உள்ளே வந்தார்கள். பேசுகிற முதல் வாக்கியத்திலேயே மற்றவர்களின் உள்ளம் கவர்கிற சிலரை பார்க்கும் போது இன்றும் எனக்கு லோகநாயகி மிஸ்தான் ஞாபகத்திற்கு வருகிறார்கள். பாட்டு டீச்சர் வருவதற்கு முன்பே ஆர்மோனியத்தை எடுத்துக் கொண்டு வைத்து விட்டு சென்றிருந்தாள் ஆயா அக்கா. முதலில் மிஸ் அதை எடுத்து தூசியைத் துடைக்கிறார்கள் என்றுதான் எல்லோரும் நினைத்தோம். மெல்ல மிஸ்ஸின் விரல்கள் ஆர்மோனியத்தின் கட்டைகளில் தவழ ஆரம்பித்தன. ஒரு பத்து நிமிடம் டீச்சர் தலை நிமிராமல் வாசித்தார்கள். மிஸ் அழுதாங்க என்றான் நண்பன் குஞ்சு. எனக்கு அது முக்கியமாகப் படவில்லை. இதை எங்கேயோ கேட்டிருக்கோமே. என் எண்ணம் முழுக்க அவர்கள் வாசித்த ஓசையைத் தொடர்ந்தே செல்கிறது. மிஸ் தலை நிமிரும் வரை பேசாமல் இருந்தோம். என்னைப் பார்த்தால் கேட்டு விடுவது எனும் முடிவோடு நான்.

என் மூஞ்சி ஒரு தினுசாக இருப்பதை கவனித்து விட்டு, "என்னடே முளிக்கே?" என்றார்கள்.

'நீங்க வாசிச்ச மாதிரியே எங்க பெரியப்பா பாடி கேட்டிருக்கேன். ஆனா அது வேற மாதிரியிருக்கும்;' என்றேன்.

'அப்படியா? அது என்னதுடே? பாடு பாப்போம்' என்றார்கள். சத்தியமாக அப்போது எனக்கு ஒரு இழவும் தெரியாது. இதே மாதிரிதான் இருக்கும். ஆனா அது வேற என்று மட்டும் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தேன். மிஸ் சாதாரணமாக ஆர்மோனியத்தை வாசித்து, இதுதானே உங்க பெரியப்பா பாடுறது? என்றார்கள். 'ஆமா மிஸ். இதேதான்' என்றேன். 'இது நான் வாசிச்சது இல்லியா!'. என் முழி அவர்களுக்கு சிரிப்பை வரவழைத்திருக்க வேண்டும். சிரித்தபடியே, "ரெண்டுமே பக்கத்துப் பக்கத்து ராகம். நான் வாசிச்சது லலிதா. உங்க பெரியப்பா பாடுனது மாயாமாளவகௌளையா இருக்கும்" என்றார்கள். அப்படித்தான் சொல்லியிருக்க வேண்டும் என்று இப்போது எனக்கு தோன்றுகிறது. ஏனென்றால் அந்த வயதில் எனக்கு ராகங்களைப் பற்றியெல்லாம் எதுவுமே தெரியாது. இதற்குள் பாட்டு டீச்சர் வந்து விட மிஸ் அவசரமாக எழுந்து டீச்சரை வணங்கி வழி விட்டுச் சென்றார்கள். இதற்கு பின் தான் பாட்டு டீச்சர் முதலில் நான் குறிப்பிட்ட வரியைச் சொன்னார்கள்.

பாட்டு டீச்சரை பற்றி இந்த இடத்தில் சொல்லியாக வேண்டும். இரண்டாண்டுகள் எங்களுக்கு பாட்டு சொல்லிக் கொடுத்தார்கள். தீராத விளையாட்டுப் பிள்ளை, தாயின் மணிக்கொடி பாரீர் , இவை இரண்டைத் தவிர வேறு எந்த ஒரு புதிய பாடலையும் அவர்கள் எங்களுக்கு சொல்லித் தந்ததில்லை. அவர்கள் ஒன்றும் வைத்துக் கொண்டு வஞ்சனை பண்ணவில்லை என்கிற விவரம் ரொம்ப நாள் கழித்தே எனக்குத் தெரிய வந்தது.

இது நடந்து ரொம்ப வருடங்களுக்குப் பின், மேற்சொன்ன மாயாமாளவகௌளை - லலிதா வித்தியாச விவரம், இளையராஜா மூலமே எனக்குத் தெரிய வந்தது. உன்னால் முடியும் தம்பி திரைப்படத்தில் "இதழில் கதை எழுதும் நேரமிது" என்ற பாடலை அட்டகாசமாக லலிதா ராகத்தில் அமைத்திருந்தார் ராஜா. அப்போது நான் ஆர்மோனியம் வாசிக்க ஆரம்பித்திருந்தேன். மெல்ல பிடிபட்டது. மாயாமாளவகௌளையில் பஞ்சமம் இல்லையென்றால், அது லலிதா. அட . .இதுதானா! ஆச்சரியமும், சிறுவயதில் நடந்த சம்பவத்தின் நினைவுகளும், எல்லாவற்றுக்கும் மேல், அத்தனை வருடங்களுக்கு முன்பு லோகநாயகி மிஸ் வாசித்த அதே ராகத்தை இன்று நான் வாசிக்கிறேனே என்கிற சொல்ல முடியாத சந்தோஷமும் என்னை ஆட்கொண்டது. மாயாமாளவகௌளையையும், லலிதாவையும் சுமந்து கொண்டு எனது இசையாசிரியர் கிருஷ்ணன் ஸாரைப் பார்க்கப் போனேன்.

பொதுவாக எனது இசை வகுப்புகளில் கிருஷ்ணன் ஸார் எனக்கான பாடத்தை வயலினில் வாசிக்க, அதை அப்படியே வாங்கி ஹார்மோனியத்தில் வாசிப்பதோடு எனக்கான வகுப்பு முடிந்து விடும். அதன் பின் பொதுவாக ராகங்களைப் பற்றிய என்னுடைய சந்தேகங்களுக்கு கிருஷ்ணன் ஸார் விளக்கமளித்து தெளிவுபடுத்துவார். அவர் முன்னால் கொண்டு போய் மாயாமாளவகௌளை, லலிதா இரண்டையும் வைத்தேன். 'ஏய் . . . இந்த லலிதா, மாயாமாளவகௌளைக்கு கூடப் பொறந்த தங்கச்சில்லா!' என்றார். உடனே வயலினை எடுத்துக் கொண்டார். மிக எளிமையாக இந்த இரண்டு ராகங்களுக்குமான வித்தியாசத்தை வாசித்துக் காட்டினார். 'இப்பொ வெளங்குதா?' என்றவர் என் பதிலுக்குக் காத்திராமல், 'ஒனக்குத்தான் இன்னொரு வாத்தியார் இருக்காமலா! அவன்ட்டதான் ஒரு வண்டிக்கு இருக்குமே. போய் கேளு' என்றார். அவர் சொன்ன அந்த இன்னொரு வாத்தியார் இளையராஜா.

இளையராஜாவின் திரையிசைப்பாடல்களைக் கேட்டே ராகங்கள் பற்றிய அறிவை வளர்த்துக் கொண்டவன் நான். அந்த வகையில் லலிதாவிலிருந்து பஞ்சமத்தைத் தொட்டு மாயாமாளவகௌளையை வாசிக்கிறேன். "மாசறு பொன்னே வருக" , தேவர்மகன் பாடல் பேசுகிறது . "மஞ்சள் நிலாவுக்கு" , முதல் இரவு படப் பாடல் குதியாட்டம் போடுகிறது . "மதுர மரிக்கொழுந்து வாசம்" , எங்க ஊரு பாட்டுக்காரன் பாடுகிறான். (அதுவும் இந்த பாடலின் சரணத்தில் ராஜா விளையாடியிருக்கும் விளையாட்டு, அபாரமானது) . கர்நாடக சங்கீதத்தின் அடிப்படை "ஸரிகமபதநி" ஸ்வர வரிசைகளை சொல்லிக் கொடுக்கப்படும் இந்த ராகத்தில் ராஜா போட்டிருக்கும் பாடல்கள் எண்ணிக்கையிலடங்காதவை . ஒன்று வாசிக்க ஆரம்பித்தால் இன்னொன்று வந்து விழுந்த வண்ணம் இருக்க, மீண்டும் லலிதாவுக்கு திரும்புகிறேன். கண்களை மூடியபடி வாசிக்க ஆரம்பிக்கிறேன். லோகநாயகி மிஸ்ஸின் முகம் ஞாபகத்திற்கு வருகிறது. பாட்டு டீச்சரின் முகமும்தான்.



குருவை மிஞ்சிய தெய்வம் இல்லை

குரு வணக்கம்

-----------------------------

கையில் பிரம்பில்லை

கடுகடு முகமில்லை

சொல்லில் சூடில்லை

சுட்டும் விரலில்லை

படிப்பும் பண்பும்

சேர்த்துக் குழைத்து

சுவையைக் கூட்டிச்

சொல்லிக் கொடுத்ததால்

குருவை மிஞ்சிய

தெய்வம் இல்லை

------------------------------------நாகேந்திர பாரதி

**வாழ்க வையகம்!** **வாழ்க வளமுடன்!**





உலகத்தில் அமைதியும் ஆன்மீக மேம்பாடும் ஏற்படுவதற்காக சுயமுயற்சியின்
மூலம் வாழ்க்கையில் முன்னேறிய மகரிசி அவர்கள்

- தியான முறையில் சிறந்ததான எளிய முறைக் குண்டலினி யோகம்
- உடல் உறுப்புக்களை வருத்தாத எளியமுறை உடற்பயிற்சி
- பண்புகளை உயர்த்தும் தற்சோதனை
- உயிர்ச்சக்தியைப் பாதுகாப்பதன் மூலம் வயோதிகத்தைத் தள்ளிப் போடும் சித்தர்கள் கண்ட நெறியான காயகல்ப யோகம்

இவை இணைந்த வாழ்க்கை நெறியைப் போதித்து மனிதகுலம் உய்ய அருள் தொண்டாற்றி வருகிறார்.

* விரும்புவோர் இங்கு வந்து உடற்பயிற்சியும் தவமும் கற்றுக் கொள்ளலாம்.
* காயகல்பம், அகத்தாய்வு முதலிய பயிற்சிகள் ஒவ்வொரு மாதமும் தக்க பேராசிரியர்களைக் கொண்டு நடத்தப்படுகின்றன.
* தினசரி காலையில் உடற்பயிற்சி கற்றுத் தரப்படுகிறது. மாலையில் கூட்டுத் தவம் நடைபெறுகிறது.



# அகவிழி

## கிடைக்குமிடங்கள்

**பூபாலசிங்கம் புத்தகக்கடை**
202, செட்டியார் தெரு, கொழும்பு - 11
தொ.பே.இல.: 011-2422321

**பூபாலசிங்கம் புத்தகக்கடை**
4யு, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே.இல.: 021-2226693

**நியூ கேசவன் புக்ஸ்டோல்**
52 டன்பார் வீதி, ஹட்டன்
தொ.பே.இல.: 051-2222504,
051-2222977

**அறிவாலயம் புத்தகக்கடை**
190 டீ புகையிரத வீதி,
வைரவப்புளியங்குளம், வவுனியா
தொ.பே.இல.: 024-4920733

**இஸ்லாமிக் புத்தக இல்லம்**
77, தெமட்டக்கொட வீதி,
கொழும்பு - 09
தொ.பே.இல.: 011-2688102

**நுயளறயசயெ டீழழம ஹநிழவ**
ஜேழ. 126.ஃ.1இ ஊழடடழஅடிழ ளுவசநநவஇ
முயனெல
வுநட.: 081-2220820

**குமரன் புக் சென்டர்**
18, டெய்லிபயர் கொம்பிலக்ஸ்
நுவரெலியா
தொ.பே.இல.: 052-2223416

**விழுது - மட்டக்களப்பு**
இல 22, கலைமகள் வீதி,
நெச்சிமுனை, மட்டக்களப்பு
தொ.பே.இல - 065 - 2222500

**விழுது - திருகோணமலை**
81யு, ராஜவரோதயம் வீதி,
திருகோணமலை

**பூபாலசிங்கம் புத்தகக்கடை**
309-யு 2.ஃ.3 காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு
தொ.பே.இல.: 4515775, 2504266

**அல்குரசி புத்தக நிலையம்**
28, 1.ஃ.2, புகையிரத வீதி, மாத்தளை
தொ.பே.இல.: 066-3662228

**அறிவுநதி புத்தகசாலை**
இல 06, கனகபுரம் வீதி, கிளிநொச்சி
தொ.பே.இல.: 077 6737535

**ஞுநநெ டீயடில ஊயசந**
121டீஇ யுசஅ ஆடைட சுழயனஇ
யுனனயடயஉைாநயெ -01
வுநட.: 077 3651138

**புக் லாப்**
20, 22 சேர் பொன் ராமநாதன் வீதி,
பரமேஸ்வரா சந்தி, திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்
தொ.பே.இல: 021-2227290,

**அன்பு ஸ்டோர்ஸ்**
14 பிரதான வீதி, கல்முனை
தொ.பே.இல.: 067-2229540

**பரணி புத்தகக் கூடம்**
நெல்லியடி ம.ம வீதி, நெல்லியடி
தொ.பே.இல - 077 5991949

**விழுது - புத்தளம்**
இல 24801 கொழும்பு வீதி,
தில்லையடி, புத்தளம்
தொ.பே.இல - 032 - 5740094

**விழுது - யாழ் மாவட்டம்**
இல 23, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம்
தொ.பே.இல - 021 2229866




Printed by
**RST Enterprises Pvt) Ltd.**
114, W.A. Silva Mawatha, Colombo 06.
Email: rst_enterprises@yahoo.com

ISSN 1800-1246
9 771800 124005

Registered in the Department of Posts of Sri Lanka under QD/49/News/2015